717

# லாங்மன்ஸ்

# தமிழ் இலக்கணம்

## இரண்டாவது புஸ்தகம்

கும்பகோணம் கவர்ன்மென்ட் காலேஜ் ரிடயர்ட் தலைமைத் தமிழ்ப்
பண்டிதரும் தமிழ் மகாபாரதப் பதிப்பாசிரியருமாகிய

**ம. வீ. இராமாநுஜாசார்யர்**

இயற்றியது

மூன்றாம் பதிப்பு

லாங்மன்ஸ், க்ரீன் அண்ட் கம்பெனி லிமிடெட்

36A, மௌண்ட் ரோட், மதராஸ்

கல்கத்தா, பொம்பாய்

Price, 6 As.]   1931   [விலை, 6 அணா.

[*All rights reserved*]

WITH THE COMPLIMENTS OF
Messrs. LONGMANS, GREEN & CO., LTD.

84552

# பொருளடக்கம்.


பக்கம்

முகவுரை ... ... ... ... ... v

1. எழுத்ததிகாரம் ... ... ... ... ... 1

(1) எழுத்தியல் ... ... ... ... ... 1

உயிரெழுத்து ... ... ... ... ... 1

மெய்யெழுத்து ... ... ... ... 3

உயிர்மெய்யெழுத்து ... ... ... ... 5

ஆய்தவெழுத்து ... ... ... ... 5

உயிரளபெடை ... ... ... ... 6

குற்றியலுகரம் ... ... ... ... 7

முற்றியலுகரம் ... ... ... ... 7

குற்றியலிகரம் ... ... ... ... 8

மாத்திரை ... ... ... ... ... 8

மொழிமுதலெழுத்துக்கள் ... ... ... 9

மொழியிறுதி எழுத்துக்கள் ... ... ... 10

போலி ... ... ... ... ... 11

எழுத்துக்களின் சாரியை ... ... ... 12

ஸம்ஸ்கிருத எழுத்துக்கள் ... ... ... 13

(2) பதவியல் ... ... ... ... ... 13

பதம் ... ... ... ... ... 13

பகுபதவுறுப்புக்கள் ... ... ... ... 14

வடசொல் ... ... ... ... ... 20

(3) புணரியல் ... ... ... ... ... 21

உயிரீற்றுப்புணரியல் ... ... ... ... 21

மெய்யீற்றுப்புணரியல் ... ... ... ... 32

பொதுப்புணரியல் ... ... ... ... 39


1019
494.8115

பக்கம்.

II. சொல்லதிகாரம் ... ... ... ... ... 49

(1) பெயரியல் ... ... ... ... ... 49
சொல்லின்வகை ... ... ... ... 52
பெயர்ச்சொல் ... ... ... ... ... 53
வினையாலணையும்பெயர் ... ... ... 54
தொழிற்பெயர் ... ... ... ... 54
இடுகுறிப்பெயர் ... ... ... ... 54
காரணப்பெயர் ... ... ... ... 54
இயற்பெயர் ... ... ... ... ... 54
ஆகுபெயர் ... ... ... ... ... 54
வேற்றுமை ... ... ... ... ... 56
காரகம் ... ... ... ... ... 63

(2) வினையியல் ... ... ... ... ... 64
வினைச்சொல் ... ... ... ... ... 64
வினையின்பாகுபாடுகள் ... ... ... ... 64
வினைச்சொற்களின்பகுப்பு ... ... ... 68
வினைமுற்று ... ... ... ... ... 68
பொதுக்குறிப்பு வினைமுற்றுக்கள் ... ... 71
பெயரெச்சம் ... ... ... ... ... 72
வினையெச்சம் ... ... ... ... ... 73
எதிர்மறைவினைமுற்று ... ... ... ... 75
எதிர்மறைப்பெயரெச்சம் ... ... ... 76
எதிர்மறைவினையெச்சம் ... ... ... 76
முற்றெச்சம் ... ... ... ... ... 77

(3) இடையியல் ... ... ... ... ... 78
இடைச்சொல்வகை ... ... ... ... 78
சாரியைகள் ... ... ... ... ... 78
உவமையுருபுகள் ... ... ... ... 78
தத்தம் பொருளையுணர்த்தும் இடைச்சொற்கள் ... 78

(4) உரியியல் ... ... ... ... ... 81
உரிச்சொல் ... ... ... ... ... 81

பக்கம்.

(5) பொதுவியல் ... ... ... ... 81

வழக்கு ... ... ... ... ... 81
வெளிப்படைச்சொல் ... ... ... 83
குறிப்புச்சொல் ... ... ... ... 83
தொகைநிலைத்தொடர்கள் ஆறு ... ... 86
தொகாநிலைத்தொடர்கள் ஒன்பது ... ... 89
வழாநிலை ... ... ... ... ... 90
வழு ... ... ... ... ... 90
வழுவமைதி... ... ... ... ... 91
மரபு ... ... ... ... ... 94

III. சொற்றொடரதிகாரம் ... ... ... ... 96

சொற்றொடர் ... ... ... ... 96
எழுவாய் ... ... ... ... ... 96
பயனிலை ... ... ... ... ... 96
செயப்படுபொருள் ... ... ... ... 97
அடைமொழி ... ... ... ... 97

அநுபந்தம் ... ... ... ... ... 99

பகுபதமுடிபு ... ... ... ... 99
சொல்லிலக்கணங்கூறுதல் ... ... ... 101
சொற்றொடரிலக்கணங்கூறுதல் ... ... 101
இலக்கணபரிபாஷைகளும் அவற்றின் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பும் ... ... ... 102

1019
494.811 55

ஸ்ரீ

# முகவுரை

நமது தமிழ்ப்பாஷையிலுள்ள முற்காலத்து இலக்கண நூல்களெல்லாம் சூத்திரமாகவும் வேறு செய்யுள்களாகவும் அமைந்திருத்தலாலும், அவற்றைக் கற்றுணர்வது இலக்கிய ஆராய்ச்சி யுடையவர்களுக்கே அன்றி மற்றவர்களுக்குக் கடினமாயிருத்தலாலும், யாவரும் எளிதில் கற்றுணரும்படி இலக்கண நூல்கள் வசன நடையில் எழுதப்படவேண்டுமென்பது இக்காலத்து அறிஞர் பலருடைய கொள்கை. அந்தக் கொள்கைப்படி, 19-ம் நூற்றுண்டின் இடையில், மஹாவித்வான்களான தாண்டவராய முதலியாரவர்களும் திருத்தணிகை விசாகப்பெருமாளையரவர்களும் மழவை மஹாலிங்க ஐயரவர்களும் ஆறுமுக நாவலரவர்களும் இலக்கண நூலைத் தனித்தனியே வசனமாக எழுதி வெளியிட்டார்கள். அவை, பண்டை நூல்முறைகளுக்குச் சிறிதும் மாறுபாடின்றி ஒழுங்காக எழுதப்பட்டிருத்தலின் பண்டிதர்களால் பெரிதும் பாராட்டப்பெற்று, தமிழ் கற்போருக்குப் பெரும்பயன் அளித்துவருகின்றன. அவற்றைப் பின்பற்றிச் சிறியனவும் பெரியனவுமான இலக்கண நூல்கள் பல இக்காலத்து வெளிவந்து உலாவுகின்றன. இதுவரையில் வெளிவந்துள்ள இலக்கணநூல்கள் பலவற்றுள்ளும் மஹாலிங்க ஐயரால் செய்யப்பட்ட இலக்கண நூலானது மிகப் பெரிதுமல்லாமல் மிகச்சிறிதுமல்லாமல் நடுத்தர வகுப்பு மாணுக்கர்களுக்கு உபயோகமாகக்கூடிய பல விஷயங்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் தெரிவிப்பதாக இருக்கிறது. அந்நூல், நன்னூற்சூத்திரங்களால் நிச்சயிக்கப்படாத பல நுட்பமான விஷயங்களை நிச்சயித்துத் தெளிவாகக் கூறுகின்றது; பண்டிதர்களால் மிக மதிக்கப்பெற்றது. அந்நூல் வெளிவந்த நாள்முதல் இந்நாள்வரையிலும் பள்ளிக்கூடங்களில் பெரும்பாலும் பாடமாக உபயோகமாகிவருதலே அதன் சிறப்பை நன்கு விளக்கும்.

மெஸ்ஸர்ஸ், லாங்மன்ஸ் கிரீன் அண்டு கம்பெனியாருடைய விருப்பப்படி, நடுத்தரவகுப்பு மாணுக்கர்களுக்கும் பொதுவாக இலக்கணம் கற்போருக்கும் உபயோகமாக, நான் இந்த இலக்கணநூலை எழுதத்தொடங்கியபோது, மஹாலிங்கையர் இலக்கணத்திலுள்ள விதிகளும் உதாரணங்களுமே ஞாபகத்தில் வந்தன. ஆதலால், சில இடங்களில் அந்த நூலிலுள்ளபடியே விதிகளையும் உதாரணங்களையும் எடுத்துக்கொண்டிருக்கிறேன்.

அதில் கூறியவைகளில், நடுத்தரவகுப்பு மாணுக்கர்களுக்கு அவசியமில்லாத சிலவற்றை விலக்கியும், கடினமாகத் தோன்றும் சிலவற்றை எளியனவாக மாற்றியும், சுருக்கமாகச் சொல்லியவற்றை விளங்குதற்பொருட்டு விரித்துக்கூறியும், அவசியமான சிலவற்றைப் புதிதாகச் சேர்த்தும், சில பயன் கருதி விஷயங்களை முன்பின்னுக மாற்றி வரிசைப்படுத்தியும், இந்நூல் செய்யப்பட்டுள்ளது.

மஹாலிங்க ஐயர் இலக்கணத்தில், மற்ற இயல்களெல்லாம் நன்னூல் முறையைப் பெரும்பாலும் பின்பற்றிக் கூறப்பட்டிருந்தாலும் புணரியல் மாத்திரம் அப்படியில்லாமல் வேறு முறையாகக் கூறப்பட்டிருக்கிறது. அதில் கூறிய விதிகள் நிலைமொழியீற்றிலும் வருமொழிமுதலிலுமுள்ள எழுத்துக்களின் வரிசைப்படி இல்லாமையாலும், மாணுக்கர்கள் அவைகளைத் தெரிந்து வரிசைப்படுத்தி ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும் இன்னவிதி இன்ன இடத்தில்தான் இருக்குமென்று நிச்சயித்துத் தெரிந்துகொள்ளவும் கூடாமலிருத்தலாலும், அந்த இயலை முழுதும்மாற்றி நன்னூலில் சொல்லிய முறையாக நிலைமொழியீற்றிலும் வருமொழிமுதலிலுமுள்ள எழுத்துக்களின் வரிசைப்படி விதிகளை இந்நூலில் அமைத்திருக்கிறேன்.

நன்னூலில், உயிர்முன் வல்லெழுத்து வந்து புணரும் விதிகள் கூறுமிடத்தில், அகர ஈறு முதலாகச் சிறப்புவிதிகள் கூறப்படுகின்றன. ஓர் ஈற்றுச் சிறப்பு விதி சொல்லுகையில் அந்த ஈற்ருேடு வல்லெழுத்து வருவதற்குமாத்திரமன்றிச் * சிலவிடத்தில் பிறவெழுத்துக்கள் வருவதற்கும் நிலைமொழி சம்பந்தமான வேறு முடிபுகளுக்கும் விதிகள் கூறப்பட்டுள்ளன. அப்படிக் கூறியிருப்பது மாணுக்கர்களுக்குச் சிறிது ஐயத்தை விளைவிப்பதுண்டு.

இந்நூலில், உயிர்முன் உயிரும் உயிர்முன் மெய்யும் மெய்ம்முன் உயிரும் மெய்ம்முன் மெய்யுமாகப் புணர்ச்சிவிதிகளை வரிசைப்படுத்தி, உயிர்முன் உயிரும் மெய்யும் புணரும் புணர்ச்சிவிதிகளைமாத்திரம் உயிரீற்றுப் புணரியலிலும், மெய்ம்முன் உயிரும் மெய்யும் புணரும் புணர்ச்சிவிதிகளைமாத்திரம் மெய்யீற்றுப் புணரியலிலும், நிலைமொழிக்கு மாத்திரமோ வருமொழிக்குமாத்திரமோ உரிய விதிகளையும் உயிரீறு மெய்யீறுகளுக்குப் பொதுவான விதிகளையும் பொதுப் புண

* இங்கே குறிப்பிட்டவை, உயிர்முன் வல்லெழுத்துப் புணரும்விதி கூறுமிடத்து, ஆகார ஈற்றுச் சிறப்புவிதியில், "நிலா என்பது நில நிலவு எனத்திரியும்" என்னும் நிலைமொழிச் செய்கையைக் கூறும் சூத்திரமும், முற்றியலுகரவீற்றுச் சிறப்பு விதியில், "அது என்பதன்முன் வரும் அன்று என்பது ஆன்று என்ருகும்" என்னும் உயிர்முன் உயிர் புணர்வதைக் கூறுஞ் சூத்திரமும் போல்வன.

ரியலிலும் அமைத்திருக்கிறேன். இந்த முறை மாணுக்கர்கள் சந்திவிதிகளை எளிதில் அறிந்துகொள்ளவும், அவைகளை வரிசையாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும் அனுகூலமாயிருக்கும். மற்ற இயல்களிலும் விதிகள் காரண காரியமுறைப்படி வைக்கப்பட்டுள்ளன. இது மாணுக்கர்களுக்குப் பெரிதும் பயன்தருமென்பது எனது கருத்து.

கும்பகோணம் வாணுதுறை ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர், ம-ா-ா-ஸ்ரீ. C. N. துரைஸ்வாமி ஐயரவர்களும், மேற்படியூர் கவர்ன்மென்டு காலேஜ் தமிழ்ப் பண்டிதர், ம-ா-ா-ஸ்ரீ. L. ஸ்ரீநிவாஸையரவர்களும், நான் இந்தப் புஸ்தகத்தை எழுதியபோதும் புதிப்பித்தபோதும், என்னுடனிருந்து எனக்கு வேண்டிய பல உதவிகளையும் செய்துவந்ததற்கு நான் அவர்களிடம் என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்நூலில் குற்றம் குறைகள் காணப்படலாம். அறிஞர்கள் தயைசெய்து எனக்குத் தெரிவிப்பார்களாயின், அவைகளை வந்தனம் செய்து ஏற்று, அவர்களிடத்தில் மிக்க நன்றி பாராட்டி அவைகளை அடுத்த பதிப்பில் திருத்திப் பதிப்பிக்க முயலுவேன்.

மணலூர்,<br>*6 Aug. 1925.*

ம. வீ. இராமானுஜாசார்யன்.

# தமிழ் இலக்கணம்

## இரண்டாவது புத்தகம்

---

**1.** தமிழிலக்கணமாவது, தமிழ்ப்பாஷையைத் திருத்தமாகப் பேசவும் எழுதவும் கற்பிக்கும் நூலாம்.

**2.** இந்நூல், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், சொற்றொடரதிகாரம் என மூன்று அதிகாரங்களாக வகுக்கப்படும்.

**3.** அவற்றுள், எழுத்ததிகாரம், எழுத்தியல் பதவியல் புணரியல் என மூன்று இயல்களையுடையது.

1- AUG 1931

---

## I. எழுத்ததிகாரம்.

### 1. எழுத்தியல்.

**4.** எழுத்தாவது மொழிக்கு முதற்காரணமாகிய ஒலியாம்.

குறிப்பு.—இது ஒலிவடிவெழுத்து; அதாவது, செவிப்புலனால் உணரப்படும் எழுத்தாம். இவ்வொலிவடிவெழுத்தைக் கண்ணால் அறியும்படி செய்யப்படும் அடையாளமே வரிவடிவெழுத்தாம். இது எழுதப்படுதலால் எழுத்தெனப்பட்டது.

**5.** தமிழ்ப்பாஷையின் எழுத்துக்கள், முதலெழுத்து சார்பெழுத்து என இரண்டுவகைப்படும்.

**6.** அவற்றுள், முதலெழுத்து, உயிரெழுத்து மெய்யெழுத்து என இரண்டுவகைப்படும்.

**7.** சார்பெழுத்து, உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம் என ஐந்து வகைப்படும்.

குறிப்பு.—இவ்வ முதலெழுத்துக்களைச் சார்ந்துவருதலால் சார்பெழுத்துக்கள் எனப்பட்டன. சார்பெழுத்துவகையில் வேறு சில எழுத்துக்களும் உண்டு.

#### உயிரெழுத்து.

**8.** அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய

பன்னிரண்டும் உயிர் எழுத்துக்களாம். இவை ஆவியென்றும் பெயர்பெறும்.

குறிப்பு.—வேறு எழுத்தின் உதவியின்றித் தாமே ஒலிக்கவல்ல எழுத்து உயிரொழுத்தாம். உயிர்போல இருத்தலால் உயிரெழுத்து எனப்பட்டன.

**9.** உயிரெழுத்துக்கள், குற்றெழுத்து நெட்டெழுத்து என இரண்டுவகைப்படும்.

**10.** அ, இ, உ, எ, ஒ இவ்வைந்தும் குற்றெழுத்துக்களாம். இவை குறில் எனவும் பெயர்பெறும்.

குறிப்பு.—குறுகிய ஓசையையுடைய எழுத்து குற்றெழுத்து. இவை நெட்டெழுத்தைப் பார்க்கக் குறுகிய ஓசையையுடையனவாயிருத்தல் காண்க.

**11.** ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ இவ்வேழும் நெட்டெழுத்துக்களாம். இவை நெடில் எனவும் பெயர்பெறும்.

குறிப்பு.—நீண்ட ஓசையையுடைய எழுத்து நெட்டெழுத்து. இவை குறிலைப்பார்க்க நீண்ட ஓசையையுடையனவாயிருத்தல் காண்க.

## சுட்டெழுத்து.

**12.** அ, இ, உ இம்மூன்றும் சொல்லுக்கு முதலில் அகத்துறுப்பாகவேனும் புறத்துறுப்பாகவேனும் நின்று சுட்டுப்பொருளைத் தருமாயின் சுட்டெழுத்தெனப்படும்.

உ-ம். அவன், இவன், உவன்—அகச்சுட்டு.
அக்கொற்றன், இப்பலகை, உவ்வீடு—புறச்சுட்டு.

அவன் என்பதிலுள்ள அகரம் சொல்லினுள்ளாகவே ஒரெழுத்தாக அமைந்து சுட்டுப்பொருளைத் தருதலால் அகக்சுட்டு. அக்கொற்றன் என்பதிலுள்ள அகரம் சொல்லுக்கு வெளியே நின்று சுட்டுப்பொருளைத் தருதலால் புறச்சுட்டு.

குறிப்பு.—சுட்டுதல் = ஒருபொருளைக் குறித்துக்காட்டுதல். அறம், இடை, உடு முதலிய சொற்களிலுள்ள அகர இகர உகரங்கள் ஒரு பொருளையும் குறித்துக்காட்டாமையால் சுட்டெழுத்துக்கள் ஆகா.

**13.** அகரம் தூரத்திலுள்ள பொருளையும் இகரம் சமீபத்திலுள்ள பொருளையும் உகரம் நடுவிலுள்ள பொருளையும் காட்டும். உகரச்சுட்டு, செய்யுளில்மட்டும் வரும்.

**14.** அ, இ, உ என்ற மூன்று சுட்டெழுத்துக்களும், முறையே அந்த, இந்த, உந்த என்று திரிந்தும்வரும்.

## வினவெழுத்து.

**15.** ஆ, எ, ஏ, ஓ என்னும் உயிரெழுத்துக்களும் யா என்னும் உயிர்மெய்யெழுத்துமாகிய ஐந்து எழுத்துக்களும் வினப்பொருளைத் தரும்பொழுது வினவெழுத்துக்களாம்.

குறிப்பு.—வினவுதல் = கேள்விகேட்டல்.

**16.** அவற்றுள், எ, யா இரண்டும் சொல்லுக்கு முதலில் அகத்துறுப்பாகவும் புறத்துறுப்பாகவும் நின்று வினப்பொருளைத்தரும்.

உ–ம். எவன், யாவன்—அகவின.
எவ்வீடு, யாங்ஙனம்—புறவின.

**17.** ஆ, ஓ இரண்டும் சொல்லுக்கு ஈற்றில் புறத்துறுப்பாக நின்று வினப்பொருளைத்தரும்.

உ–ம். அவனா, கொற்றனோ.

**18.** ஏ, சொல்லுக்குமுதலில் அகத்துறுப்பாகவும் சொல்லுக்கு ஈற்றில் புறத்துறுப்பாகவும் நின்று வினப்பொருளைத்தரும்.

உ–ம். ஏது, கொற்றனே.

குறிப்பு.—ஏகாரவின சொல்லுக்கு ஈற்றில் உலக வழக்கில் பெரும்பாலும் வருவதில்லை.

**19.** எ என்னும் வின எந்த என்று திரிந்தும் வரும்.

## மெய்யெழுத்து.

**20.** க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்னும் பதினெட்டும் மெய்யெழுத்துக்களாம். இவை ஒற்று என்றும், உடம்பு என்றும், புள்ளி என்றும் பெயர்பெறும்.

குறிப்பு. — உயிரெழுத்தின் உதவியின்றித் தாமே இயங்காத எழுத்து மெய்யெழுத்து. உயிரோடுகூடியல்லது தனியே இயங்காத மெய்போன்றமையின் இவ்வெழுத்துக்கள் மெய்யெழுத்துக்கள் எனப்பட்டன.

**21.** மெய்யெழுத்துக்கள், வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படும்.

**22.** க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும் வல்லெழுத்துக்களாம். இவை வலி எனவும் வல்லினம் எனவும் வன்கணம் எனவும் பெயர்பெறும்.

குறிப்பு.—இவை வலிய ஓசையுடன் உச்சரிக்கப்படுதலின் இப்பெயர் பெற்றன.

**23.** ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறும் மெல்லெழுத்துக்களாம். இவை மெலி எனவும் மெல்லினம் எனவும் மென்கணம் எனவும் பெயர்பெறும்.

குறிப்பு.—இவை மெல்லிய ஓசையுடன் உச்சரிக்கப்படுதலின் இப்பெயர் பெற்றன.

**24.** ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறும் இடையெழுத்துக்களாம். இவை, இடை எனவும் இடையினம் எனவும் இடைக்கணம் எனவும் பெயர்பெறும்.

குறிப்பு.—இவை நடுத்தரமான ஓசையுடன் உச்சரிக்கப்படுதலின் இப்பெயர் பெற்றன.

## இனவெழுத்துக்கள்.

**25.** அகர ஆகாரமும், இகர ஈகாரமும், உகர ஊகாரமும், எகர ஏகாரமும், ஒகர ஓகாரமும், ககர ஙகரமும், சகர ஞகரமும், டகர ணகரமும், தகர நகரமும், பகர மகரமும், றகர னகரமும் ஒன்றுக்கொன்று இனமாம்.

**26.** ஐகார ஔகாரங்களுக்குத் தமக்கெனத் தனியே குற்றெழுத்துக்கள் இல்லாமையால், ஐகாரம் ஏகாரத்தின் இனமாகிய இகரத்தையும், ஔகாரம் ஊகாரத்தின் இனமாகிய உகரத்தையும் தமக்கும் இனமாகக்கொள்ளும். ஆகையால், இகரம், ஈகார ஐகாரங்களுக்கும், உகரம், ஊகார ஔகாரங்களுக்கும் இனமாகப் பொருந்தும்.

**27.** இடையெழுத்து ஆறும் ஓரினமாம். அவை இரண்டிரண்டு ஓரினமாவதில்லை.

### பயிற்சி.

1. எழுத்தாவது யாது?
2. ஒலிவடிவெழுத்துக்கும் வரிவடிவெழுத்துக்கும் வேறுபாடு என்ன?

3. உயிரெழுத்து, மெய்யெழுத்து, சார்பெழுத்து என்னும் பெயர்கள் என்ன என்ன காரணம்பற்றி வந்தன?

4. உயிரெழுத்துக்கும் மெய்யெழுத்துக்குமுள்ள வேறு பெயர்கள் யாவை?

5. சுட்டு எத்தனை வகைப்படும்? என்ன என்ன?

6. ஆடு, பலகை, மனிதன், வீடு இவற்றோடு அகர இகரச் சுட்டுக்களைச் சேர்த்து எழுதுக. அவை என்ன சுட்டென்று சொல்லப்படும்?

7. அகர இகரங்கள் அகச்சுட்டாக வந்ததற்கு இரண்டிரண்டு உதாரணங்கள் கூறுக.

8. சுட்டெழுத்துக்கள் எவ்வாறு திரிந்தும்வரும்?

9. அகத்துறுப்பாகவும் புறத்துறுப்பாகவும் வரும் வினாவெழுத்துக்கள் எவை?

10. முதலிலும் கடையிலும் வரும் வினாவெழுத்து எது?

11. அகவினாவாக வராத வினாவெழுத்துக்கள் எவை?

12. இரண்டிரண்டு ஓரினமாகாத மெய்யெழுத்துக்கள் எவை?

13. உகரம் எது எதற்கு இனமாகவரும்?

14. ஐ, த், ன் இவற்றுக்கு இனவெழுத்துக்கள் எவை?

THE REGISTRAR ... 1- AUG 1931

## உயிர்மெய்யெழுத்து.

**28.** உயிரும் மெய்யும் கூடிப்பிறக்கும் எழுத்துக்கள் உயிர்மெய்யெழுத்துக்களாம். அவை, பதினெட்டு மெய்யின்மேலும் பன்னிரண்டு உயிரும் தனித்தனியே ஏறுதலாலுண்டாகும் இருநூற்றுப் பதினாறுமாம். அவை மெய் முன்னும் உயிர் பின்னுமாக ஒலித்துநிற்கும்.

| | |
|---|---|
| உயிர்மெய்யெழுத்துக்கள் | $18 \times 12 = 216$. |
| உயிர்மெய்க் குற்றெழுத்துக்கள் | $18 \times 5 = 90$. |
| உயிர்மெய் நெட்டெழுத்துக்கள் | $18 \times 7 = 126$. |
| உயிர்மெய் வல்லெழுத்துக்கள் | $6 \times 12 = 72$. |
| உயிர்மெய் மெல்லெழுத்துக்கள் | $6 \times 12 = 72$. |
| உயிர்மெய் இடையெழுத்துக்கள் | $6 \times 12 = 72$. |

## ஆய்தவெழுத்து.

**29.** ஆய்தவெழுத்து, மூன்று புள்ளிவடிவமாகவரும்

ஓர் எழுத்து. அது குற்றெழுத்துக்கு முன்னும் உயிர் மெய் வல்லெழுத்துக்கு மேலும் வரும்.

உ—ம். எஃகு, இருபஃது.

பயிற்சி.

1. உயிர்மெய்யெழுத்தாவது யாது?
2. உயிர்மெய்க் குற்றெழுத்துக்கள் எத்தனை?
3. உயிர்மெய் மெல்லெழுத்துக்கள் எத்தனை?
4. ஆய்தவெழுத்தாவது யாது?
5. அடியிற்கண்ட பதங்களிலுள்ள வல்லொற்று, மெல்லொற்று, இடையொற்று, உயிர்மெய்க் குறில், உயிர்மெய் நெடில், ஆய்தவெழுத்து இவைகளைக் கீழ்க்கண்டது போன்ற ஒரு கட்டத்தில் அமைத்துக்காட்டுக.

| | | |
|---|---|---|
| கரும்பு. | வல்லூறு. | மன்னர். |
| இராமன். | எஃது. | கண்ணடி. |
| பாட்டு. | மார்பு. | செய்தான். |

| பதங்கள் | வல்லொற்று | மெல்லொற்று | இடையொற்று | உயிர் மெய்க் குறில் | உயிர் மெய் நெடில் | ஆய்த வெழுத்து |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

உயிரளபெடை.

**30.** செய்யுளில் ஓசை குறையுமிடத்து, நெட்டெழுத்தேழும் சொல்லுக்கு முதலிலும் இடையிலும் கடையிலும் தமக்குரிய அளவைக்கடந்து நீண்டொலிக்கும். அவை உயிரளபெடை எனப்படும். நெட்டெழுத்துக்கள் அளபெடுத்ததற்கு அடையாளமாக அதன் அதன் இனமாகிய குறில் அதன் அதன்பின் எழுதப்படும்.

உ—ம். ஆஅடை, ஈஇடு, ஊுஅர், பலாஅ, குரீஇ.

## குற்றியலுகரம்.

**31.** ஒரு குறிலினானும், இணைந்துவரும் இரண்டு குறில்களினானும் ஆக்கப்படாத மொழியீற்று வல்லின மெய்யின்மேல் ஏறிய உகரம் குற்றியலுகரம் என்னப்படும்.

**32.** அது, ஈற்றெழுத்துக்கு அயலெழுத்தை நோக்கி, நெடிற்றொடர், ஆய்தத்தொடர், உயிர்த்தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர் என ஆறு வகைப்படும்.

1. ஈரெழுத்தாலாகிய ஒரு குற்றுகர ஈற்றுமொழியில், ஈற்றயலெழுத்து உயிர்நெடில் அல்லது உயிர்மெய் நெடிலாயின், அது நெடிற்றொடராம்.

உ—ம். ஆகு, காசு, ஓடு, காது, காபு, ஏறு.

2. ஒரு குற்றுகர ஈற்றுமொழியில், ஈற்றயலெழுத்து ஆய்தமாயின், அது ஆய்தத்தொடராம்.

உ—ம். எஃகு, இருபஃது.

3. ஒரு குற்றுகர ஈற்றுமொழியில், ஈற்றயலெழுத்து, தனிநெடிலாகாமல் உயிர்மெய்க் குறில்நெடில்களுள் ஒன்றாகவரின், அது உயிர்த்தொடராம்.

உ—ம். அலகு, பலாசு, குருடு, ஆவது, மரபு, கயிறு.

4. ஒரு குற்றுகர ஈற்றுமொழியில், ஈற்றயலெழுத்து வல்லொற்றாயின், அது வன்றொடராம்.

உ—ம். சுக்கு, கச்சு, பாட்டு, போத்து, காப்பு, பற்று.

5. ஒரு குற்றுகர ஈற்றுமொழியில், ஈற்றயலெழுத்து மெல்லொற்றாயின், அது மென்றொடராம்.

உ—ம். சங்கு, பஞ்சு, வண்டு, மருந்து, கரும்பு, கன்று.

6. ஒரு குற்றுகர ஈற்றுமொழியில், ஈற்றயலெழுத்து இடையொற்றாயின், அது இடைத்தொடராம்.

உ—ம். மல்கு, எய்து, சார்பு.

## முற்றியலுகரம்.

**33.** தனித்தும், தனிக்குறிலைச் சேர்ந்தும்வரும் வல்லின மெய்களின்மேலும் மெல்லின இடையின மெய்களின்மேலும் வரும் உகரம் முற்றியலுகரமாம்.

உ—ம். கு, து, நடு, பசு, தாணு, கதவு.

## குற்றியலிகரம்.

**34.** வருமொழி முதலில் யகரம் வர நிலைமொழியீற்றிலுள்ள குற்றியலுகரம் இகரமாகத்திரியும்; அந்த இகரம் குற்றியலிகரம் எனப்படும்.

உ-ம். செய்வது + யாது = செய்வதியாது.

### பயிற்சி.

1. உயிர்மெய்க் குற்றெழுத்துக்கள் எத்தனை? எப்படி?

2. தா, மே, வை என்னும் உயிர்மெய்யெழுத்துக்களை உயிரும் மெய்யுமாகப் பிரித்து எழுதுக.

3. ஆய்தவெழுத்து, சொல்லுக்கு எந்த இடத்தில் வரும்?

4. நெட்டெழுத்துக்கள் அளபெடுத்தலை ஒலி வடிவிலும் வரி வடிவிலும் எவ்வாறு அறியலாம்?

5. உயிரளபெடைக்கு நான்கு உதாரணங்கள் கூறுக.

6. நெடிற்றொடர்க் குற்றியலுகரத்திற்கும், உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்திற்கும் வேறுபாடு என்ன?

7. வல்லின மெய்யின்மேலும் மெல்லின மெய்யின்மேலும் இடையின மெய்யின்மேலும் வரும் முற்றியலுகரத்திற்கு இரண்டு இரண்டு உதாரணங்கள் கூறுக.

8. பின்வரும் சொற்களில் குற்றியலுகரங்களையும் முற்றியலுகரங்களையும் எடுத்தெழுதி, குற்றியலுகரங்களுக்குத் தொடர்களும் எழுதுக:—

| | | |
|---|---|---|
| சங்கு. | கடு. | வேணு. |
| அது. | காடு. | பசு. |
| வரவு. | தொழு. | காது. |
| வரம்பு. | பற்று. | தகாது. |
| மிளகு. | அஃது. | மார்பு. |

9. தனிக்குறின் மொழியாகிய முற்றியலுகரம் இரண்டு எழுதுக.

10. குற்றியலிகரத்திற்கு மூன்று உதாரணம் கூறுக.

## மாத்திரை.

**35.** கண்ணிமைப்பொழுது அல்லது கைந்நொடிப் பொழுது, ஒரு மாத்திரையாம்.

குறிப்பு.—மாத்திரை = அளவு; இங்கே எழுத்துக்களின் கால அளவு.

**36.** உயிரளபெடைக்கு மாத்திரை மூன்று; நெட்டெழுத்துக்கு மாத்திரை இரண்டு; குற்றெழுத்துக்கு மாத்திரை ஒன்று; மெய்யெழுத்துக்கும் குற்றியலுகரத்துக்கும் குற்றியலிகரத்துக்கும் ஆய்தத்துக்கும் தனித்தனி மாத்திரை அரை.

உயிர்மெய்யெழுத்திற்கு மெய்ம்மாத்திரையொழிய ஏறிய உயிர்மாத்திரையே மாத்திரையாம்.

**37.** பண்டமாற்றிலும் விளியிலும் இசையிலும் புலம்பலிலும், உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் தமக்குச் சொன்ன அளவைக் கடந்து நீண்டொலிக்கும்.

உ-ம். தயிரோஒஒ.

### பயிற்சி.

1. மாத்திரையாவது யாது?
2. உயிர்மெய்யெழுத்துக்கு மாத்திரை எத்தனை?
3. அரைமாத்திரைபெறும் எழுத்துக்கள் யாவை?
4. எழுத்துக்கள் எப்பொழுது தமக்குச் சொன்ன அளவைக் கடந்து நீண்டொலிக்கும்?
5. அடியிற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றின் மாத்திரைகளையும் தனித்தனியே கூட்டி எழுதுக.

| | |
|---|---|
| சிற்றம்பலம். | நாராயணன். |
| வெள்ளாறு. | குழூஉக்குறி. |
| இருபஃது. | இலக்கணம். |
| சோணாடு. | திருவரங்கம். |

## மொழிமுதலெழுத்துக்கள்.

**38.** பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், உயிரேறிய க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ என்னும் ஒன்பது மெய்யெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்.

உ-ம். அடை, ஆடை, இடு, ஈகை, உப்பு, ஊற்று, எவன், ஏவல், ஐயம், ஒன்று, ஓரம், ஔவியம்.

**39.** மேற்கூறிய ஒன்பது மெய்களில் க, ச, த, ந, ப, ம என்னும் ஆறுமெய்களும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களோடும் மொழிக்கு முதலில் வரும்.

உ-ம். கடு, காடு, கிணறு, கீற்று, குடம், கூந்தல், கெண்டை, கேள்வி, கைதவம், கொற்றவன், கோயில், கௌவை.

சங்கு, சாவி, சிறுமை, சீப்பு, சுக்கு, சூல், செம்பு, சேனை, சைவம், சொல், சோறு, சௌரியம்.

தங்கை, தாய், திரள், தீமை, துடி, தூது, தெப்பம், தேர்ச்சி, தையல், தொண்டு, தோட்டம், தௌவை.

நலம், நாடு, நிலம், நீர், நுரை, நூல், நெல், நேர்மை, நைதல், நொடி, நோன்பு, நௌவி.

பதி, பாடு, பிஞ்சு, பீடு, புகழ், பூண், பெண், பேதை, பையல், பொறுமை, போது, பௌவம்.

மதி, மாசு, மிளகு, மீன், முயல், மூங்கில், மெழுகு, மேழி, மைந்தர், மொழி, மோனை, மௌவல்.

**40.** வகரம் அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்னும் எட்டு உயிரெழுத்துக்களோடு மொழிக்கு முதலில் வரும்.

உ–ம். வண்டு, வாழை, விழல், வீடு, வெற்றி, வேள்வி, வையம், வௌவால்.

**41.** யகரம் அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் ஆறு உயிரெழுத்துக்களோடு மொழிக்கு முதலில் வரும்.

உ–ம். யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம்.

**42.** ஞகரம் அ, ஆ, இ, எ, ஏ ஒ என்னும் ஆறு உயிரெழுத்துக்களோடு மொழிக்கு முதலில் வரும்.

உ–ம். ஞமலி, ஞாலம், ஞிமிறு, ஞெண்டு, ஞேயம், ஞொள்கல்.

## மொழியிறுதி எழுத்துக்கள்.

**43.** எகரம் ஒழிந்த மற்றைப் பதினோருயிர்களும் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள ஆகிய பதினொரு மெய்களும் மொழிக்கு இறுதியில் வரும்.

உ–ம். பல, பலா, இடி, தீ, பந்து, பூ, சே, மனை, நொ, போ, கௌ, உரிஞ், மண், வெரிந், மரம், வேய், வேர், வேல், தெவ், காழ், வாள், பொன்.

### பயிற்சி.

1. பன்னிரண்டு உயிரெழுத்துக்களோடும் மொழிக்கு முதலில் வரும் மெய்யெழுத்துக்கள் எவை?

2. வகரம், எந்த எந்த உயிர்களோடு மொழிக்கு முதலில் வரும்?

3. வகரமும், யகரமும், ஞகரமும் மொழிக்கு முதலில் வந்ததற்கு நந்நான்கு உதாரணங்கள் கூறுக.

4. மொழிக்கு இறுதியில் வாராத மெய்யெழுத்துக்கள் எவை?

5. ஆ, ஈ, ஊ, ஏ, ஒ இவைகள் ஈருகவந்ததற்கு இரண்டு இரண்டு உதாரணங்கள் கூறுக.

## போலி.

**44.** சில சொற்களில் ஒரெழுத்து இருந்தவிடத்து வேறோர் எழுத்துவந்து பொருள் வேறுபாடின்றி நின்றால் அது போலி எனப்படும். அப்போலி, மொழிக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும்.

குறிப்பு.—போலநிற்பது போலி.

## மொழிமுதற்போலி.

**45.** அகரத்திற்குமுன் யகரம் வந்தால் ஐகாரத்தை ஒத்தொலிக்கும்.

உ-ம். ஐயன்—அய்யன்.

**46.** அகரத்துக்குமுன் வகரம் வந்தால் ஔகாரத்தை ஒத்தொலிக்கும்.

உ-ம். ஔவை—அவ்வை.

**47.** சில சொற்களின் முதலிலுள்ள அகரம், சகர ஞகர யகரங்கள்வரின் ஐகாரத்தை ஒத்தொலிக்கும்.

உ-ம். பசல்—பைசல், மஞ்சு—மைஞ்சு, மயல்—மையல்.

**48.** சில சொற்களின் முதலிலுள்ள நகரத்திற்கு ஞகரம் போலியாக வரும்.

உ-ம். நாயிறு—ஞாயிறு, நண்டு—ஞண்டு, நயம்—ஞயம்.

## மொழியிடைப்போலி.

**49.** சில சொற்களின் இடையிலுள்ள அகரம், சகர ஞகர யகரங்கள்வரின் ஐகாரத்தை ஒத்தொலிக்கும்.

உ-ம். அரசு—அரைசு, கழஞ்சு—கழைஞ்சு, அரயன்—அரையன்.

**50.** சில சொற்களின் இடையிலுள்ள தகரத்துக்குச் சகரம் போலியாக வரும்.

உ-ம். பித்து—பிச்சு, வைத்த—வைச்ச.

**51.** சில சொற்களின் இடையிலுள்ள நகர தகரங்களுக்கு ஞகர சகரங்கள் முறையே போலியாக வரும்.

உ-ம். உய்ந்தனன்—உய்ஞ்சனன், நீந்தினுன்—நீஞ்சினுன்.

குறிப்பு.—இச்சொற்களின் முதலில் ஐகாரம் இருக்கின் அதற்கு அகரம் போலியாக வரும்.

உ-ம். ஐந்து-அஞ்சு, மைந்தன்-மஞ்சன்.

**52.** தொடர்மொழி ஐகாரத்தின்கீழ்நின்ற நகரத்துக்கு ஞகரம் போலியாகும்.

உ-ம். ஐந்நூறு-ஐஞ்ஞூறு.

## மொழியிறுதிப்போலி.

**53.** இரண்டு குறிலையடுத்த அஃறிணைப்பெயரின் ஈற்றிலுள்ள மகரத்துக்கு னகரம் போலியாக வரும்.

உ-ம். கலம்-கலன், முகம்-முகன்.

**54.** சில சொற்களின் ஈற்று லகரத்துக்கு ரகரம் போலியாகும்.

உ-ம். பந்தல்-பந்தர், சாம்பல்-சாம்பர்.

**55.** சில குற்றியலுகரங்களுக்கு அர் என்பது போலியாகும்.

உ-ம். வண்டு-வண்டர், இடக்கு-இடக்கர், சிறகு-சிறகர்.

### பயிற்சி.

1. போலியாவது யாது?

2. முதலிடைகடைப்போலிகளுக்கு இரண்டு இரண்டு உதாரணங்கள் கூறுக.

3. குற்றியலுகரம் போலிபெற்றுவருவதற்கு இரண்டு உதாரணங்கள் கூறுக.

4. மனம், மானம், குளம், கூளம், சடம், சட்டம், மதம், மாதம், அகம், ஆகம் இவற்றிலுள்ள மகரத்திற்கு னகரம் போலியாக வருமா? காரணத்துடன் விடை கூறுக.

## எழுத்துக்களின் சாரியை.

**56.** மெய்யெழுத்துக்கள் அகரச்சாரியையும், உயிர் நெட்டெழுத்துக்கள் காரச்சாரியையும், ஐ, ஔ இரண்டும் காரச்சாரியையோடு கான்சாரியையும், உயிர்க்குற்றெழுத்தும் உயிர்மெய்க்குற்றெழுத்தும் கரம், காரம், கான் என்ற சாரியைகளும் பெறும். குற்றெழுத்தோடு கான்சாரியை புணரும்போது இடையில் ஆய்தம் தோன்றும்.

மெய் சாரியைபெற்றே வரும். உயிர்மெய் நெடில் சாரியை பெறுமலே வரும்.

உ–ம். க, ங; ஆகாரம், ஈகாரம்; ஐகாரம், ஐகான், ஔகாரம், ஔகான்; அகரம், அகாரம், அஃகான்; ககரம், ககாரம், கஃகான்.

### ஸம்ஸ்கிருத எழுத்துக்கள்.

**57.** ஜ, ஶ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்னும் ஸம்ஸ்கிருத எழுத்துக்கள் தமிழில்வந்து வழங்குகின்றன.

உ–ம். ஜயம், அஶ்வம், விஷம், ஸமயம், ஹாரம், பக்ஷி.

### பயிற்சி.

1. சாரியைபெற்றேவரும் எழுத்துக்கள் எவை?
2. சாரியை பெறுமலேவரும் எழுத்துக்கள் எவை?
3. மூன்று சாரியைகளும் பெறும் எழுத்துக்கள் எவை?
4. அ, ஐ, கை, ப் இவைகளுக்குச் சாரியைகூட்டி எழுதுக.
5. தமிழில் வந்து வழங்கும் ஸம்ஸ்கிருத எழுத்துக்கள் எவை?

---

## 2. பதவியல்.

**58.** எழுத்துத் தனித்தாவது, இரண்டு முதலாகத் தொடர்ந்தாவது ஒரு பொருளைத் தந்தால் அது பதமாம். பதமெனினும் மொழியெனினும் சொல்லெனினும் ஒக்கும்.

குறிப்பு.—ஓர் எழுத்துத் தன்னைமாத்திரம் உணர்த்தும்போது எழுத்தாம். அதுவே பிறபொருளை உணர்த்தும்போது பதமாம்.

உ–ம். ஓரெழுத்துமொழிகள்—மா, வா.
எழுத்துத்தொடர்மொழிகள்—மணம், நட.

**59.** அப்பதம், பகாப்பதமெனவும் பகுபதமெனவும் இரண்டு வகைப்படும்.

### பகாப்பதம்.

**60.** பகாப்பதமாவது, ஒரு சொல்லைப் பகுத்தால் பகுதி விகுதி முதலிய பிரயோஜனமில்லாமல் ஒருபொருளைத் தரும் பதமாம்.

**61.** அது பெயர்ப்பகாப்பதம், வினைப்பகாப்பதம், இடைப்பகாப்பதம், உரிப்பகாப்பதம் என நான்கு வகைப்படும்.

உ–ம். பெயர்ப்பகாப்பதம் —பூ, மண்.
விஃனப்பகாப்பதம் —வா, உண்.
இடைப்பகாப்பதம்—மற்று, ஏ.
உரிப்பகாப்பதம் —நனி, மிக.

### பகுபதம்.

**62.** பகுபதமாவது, சொல்லேப்பகுத்தால் பகுதி விகுதி முதலாகப் பகுக்கப்படும் இயல்பையுடைய பதமாம்.

**63.** அது, பெயர்ப்பகுபதம் விஃனப்பகுபதம் என இரண்டு வகைப்படும்.

குறிப்பு.—இடைச்சொல்லிலும் உரிச்சொல்லிலும் பகுபதங்கள் இல்லே.

உ–ம். பெயர்ப்பகுபதம் —பொன்னன்.
தெரிநிலேவிஃனப்பகுபதம்—நடந்தான்.
குறிப்புவிஃனப்பகுபதம் —பெரியன்.

**64.** தெரிநிலேவிஃன, தொழிலேயும் காலத்தையும் வெளிப்படையாகத் தெரிவிப்பது. குறிப்புவிஃன தொழிலேயும் காலத்தையும் குறிப்பாகத் தெரிவிப்பது. (65–ம் பக்கம் பார்க்க).

### பகுபத உறுப்புக்கள்.

**65.** பகுபதவுறுப்புக்கள், பகுதி, விகுதி, இடைநிலே, சாரியை, சந்தி, விகாரம் என ஆறும்.

**66.** பகுபதம் இந்த ஆறு உறுப்புக்களில் பகுதி விகுதி என்னும் இரண்டு முதலியவைகளிஞல் முடிவு பெறும்.

உ–ம். பெயர்ப்பகுபதம்.

கூனன் = கூன் + அன்–எனப் பகுதி, விகுதி என்னும் இரண்டு உறுப்புக்களால் முடிந்தது.

அறிஞன் = அறி + ஞ் + அன்–எனப் பகுதி, விகுதி, இடைநிலே என்னும் மூன்று உறுப்புக்களால் முடிந்தது.

குழையள் = குழை + ய் + அள்–எனப் பகுதி, விகுதி, சந்தி என்னும் மூன்று உறுப்புக்களால் முடிந்தது.

குழையினள் = குழை + ய் + இன் + அள்–எனப் பகுதி, விகுதி, சாரியை, சந்தி, என்னும் நான்கு உருப்புக்களால் முடிந்தது.

குறிப்பு.—பெயர்ப்பகுபதம் ஆறு உறுப்புக்கஃளயும் பெற்று வருவதில்லே,

### வினைப்பகுபதம்.

கேளாய் = கேள் + ஆய்—எனப் பகுதி, விகுதி, என்னும் இரண்டு உறுப்புக்களால் முடிந்தது.

உண்டான் = உண் + ட் + ஆன்—எனப் பகுதி, விகுதி, இடைநிலை என்னும் மூன்று உறுப்புக்களால் முடிந்தது.

உண்டனன் = உண் + ட் + அன் + அன்—எனப் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை என்னும் நான்கு உறுப்புக்களால் முடிந்தது.

பிடித்தனன் = பிடி + த் + த் + அன் + அன்—எனப் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி என்னும் ஐந்து உறுப்புக்களால் முடிந்தது.

நடந்தனன் = நட + த் + த் + அன் + அன்—எனப் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி என்னும் ஐந்து உறுப்புக்களோடு சந்தியால் வந்த தகரவொற்று நகரவொற்றாதலாகிய மெலித்தல் விகாரமும் பெற்று ஆறு உறுப்புக்களால் முடிந்தது.

### பயிற்சி.

1. ஓரெழுத்தொருமொழி, பெயர்ப்பகாப்பதம், வினைப்பகாப்பதம், இடைப்பகாப்பதம், உரிப்பகாப்பதம், பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் இவைகளுக்குத் தனித்தனியே மும்மூன்று உதாரணங்கள் கூறுக.

2. அடியிற்கண்ட பகுபதங்களின் உறுப்புக்களைத் தனித்தனியே பிரித்துக்காட்டி விளக்குக:—

பொன்னன், வேலன், வலைஞன், படித்தான், சென்றான், வந்தனன்.

3. எந்த எந்தச் சொல்லில் பகுபதம் இல்லை?

4. பகுபதங்களில் அவசியமிருக்கவேண்டிய உறுப்புக்கள் எவை?

5. இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு உறுப்புக்களால் முடிந்த வினைப்பகுபதம் இரண்டு இரண்டு எழுதுக.

### பகுதி.

**67.** பகுதிகளாவன, பகுபதங்களின் முதலில் நிற்கும் பகாப்பதங்களாம்.

**68.** பெயர்ப்பகுபதங்களுக்கு, பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறுவகைப் பெயர்ச்சொற்களும், சிறுபான்மை சுட்டிடைச் சொற்களும், வினாவிடைச் சொற்களும், பிற மற்று முதலிய வேறு இடைச்சொற்களும் பகுதிகளாக வரும்.

உ–ம். பொன்னன் —பொருளடியாகப் பிறந்த பெயர்.
ஊரன் —இடமடியாகப் பிறந்த பெயர்.
வேனிலான்—காலமடியாகப் பிறந்த பெயர்.
கண்ணன் —சினையடியாகப் பிறந்த பெயர்.
கரியன் —குணமடியாகப் பிறந்த பெயர்.
கொல்லன் —தொழிலடியாகப் பிறந்த பெயர்.
அவன் —சுட்டடியாகப் பிறந்த பெயர்.
எது —வினவடியாகப் பிறந்த பெயர்.
மற்றவன் —வேறு இடைச்சொல்லடியாகப்பிறந்தபெயர்.

## தெரிநிலைவினைப்பகுதிகள்.

**69.** தெரிநிலைவினைப் பகுபதங்களுக்கு நட, வா, உண் முதலிய வினைச்சொற்கள் பகுதிகளாம். சிறுபான்மை, பெயர்ச்சொற்களும் இடைச்சொற்களும் உரிச்சொற்களும் பகுதிகளாக வரும்.

உ–ம். நட, நடந்தான்–வினைச்சொல் பகுதியாக வந்தது.
சித்திரம், சித்திரித்தான்–பெயர்ச்சொல் பகுதியாக வந்தது.
போல், போன்றான்–இடைச்சொல் பகுதியாக வந்தது.
சால், சான்றான்–உரிச்சொல் பகுதியாக வந்தது.

## பிறவினைப்பகுதிகள்.

**70.** வினைப்பகுதிகளின்மேல் வி, பி, து, சு முதலிய விகுதிகள் வந்தால் பிறவினைப்பகுதிகளாம்.

உ–ம். அறி–அறிவி, நட–நடப்பி, நட–நடத்து, பாய்–பாய்ச்சு.

**71.** சில வினைப்பகுதிகள், இடையிலிருக்கும் மெல்லொற்று வல்லொற்றாகத் திரிதலானும், நடுவில் ஓர் ஒற்றுத் தோன்றுதலானும் பிறவினையாவதும் உண்டு.

உ–ம். எழும்பு–எழுப்பு, உருகு–உருக்கு.

## விகுதி.

**72.** விகுதிகளாவன, பகுபதங்களின் ஈற்றில் நிற்கும் இடைப்பகாப்பதங்களாம்.

**73.** அவை பெயர்விகுதி, தொழிற்பெயர்விகுதி, பண்புப்பெயர்விகுதி, வினைமுற்றுவிகுதி, பெயரெச்சவிகுதி வினையெச்சவிகுதி, பிறவினைவிகுதி முதலாகப் பலவாம்.

1. ஆண்பாற் பெயர்விகுதி—அன், ஆன் முதலியன.

உ-ம். பொன்னன், ஆதிரையான்.

2. பெண்பாற் பெயர்விகுதி—அள், ஆள், இ முதலியன.

உ-ம். தொடியள், குழையாள், அரசி.

3. பலர்பாற்பெயர்விகுதி—அர், ஆர், கள் முதலியன.

உ-ம். அறிஞர், குழையார், கோக்கள்.

4. ஒன்றன்பாற் பெயர்விகுதி—து.

உ-ம். அது.

5. பலவின்பாற் பெயர்விகுதி—அ முதலியன.

உ-ம். குழையன, அவை.

6. தொழிற்பெயர்விகுதி—தல், அல், அம், ஐ, மை, து முதலியன.

உ-ம். அடைதல், ஆடல், ஆட்டம், நடை; வந்தமை, வந்தது.

குறிப்பு.—மைவிகுதி; வந்தமை வருகின்றமை என இறந்தகால நிகழ்கால இடைநிலைகளோடும், து விகுதி, வந்தது, வருகின்றது, வருவது என முக்கால இடைநிலைகளோடும் வரும்.

கட்டு, பிடி எனப் பகுதிமாத்திரம் நின்றுதொழிற்பெயராவனவும், கோள், கேடு எனப் பகுதி திரிந்து தொழிற்பெயராவனவும் உண்டு. இவை, முறையே முதனிலைத் தொழிற்பெயரெனவும் முதனிலை திரிந்த தொழிற்பெயரெனவும் வழங்கும். தொழிலையே உணர்த்தும் சண்டை, சூது, பட்டினி முதலிய பெயர்கள், பகுதியடியாகப் பிறவாமையால், முதனிலையில்லாத் தொழிற்பெயர்களெனப்படும்.

7. பண்புப்பெயர்விகுதி—மை, ஐ, அம் முதலியன.

உ-ம். நன்மை, தொல்லை, நலம்.

குறிப்பு.—அன்பு, அழகு, சுவை முதலியன விகுதி பெறாமல் பண்பை உணர்த்தும் பெயர்களாம்.

8. வினைமுற்றுவிகுதி—அன், ஆன், அள், ஆள், அர், ஆர், து, அ முதலியன.

உ-ம். நடந்தனன், நடந்தான், நடந்தனள், நடந்தாள், நடந்தனர், நடந்தார், நடந்தது, நடந்தன.

9. பெயரெச்சவிகுதி—அ, உம்.

உ-ம். வந்த, நடக்கும்.

குறிப்பு.—மூவிடத்தும் ஐம்பால்களிலும் விகுதிகள் வருதலை வினையியலில் கண்டுகொள்க.

10. வினையெச்சவிகுதி–உ, இ, ய், ஆல், கால் முதலியன.

உ–ம். நடந்து, ஓடி, போய், நடந்தால், நடந்தக்கால்.

11. பிறவினைவிகுதி–வி, பி, கு, சு, டு, து, பு, று.

உ–ம். செய்வி, படிப்பி, போக்கு, பாய்ச்சு, உருட்டு, நடத்து, பரப்பு, பயிற்று.

**74.** செம்மை முதலிய பண்புப்பெயர்கள், விகுதிப் புணர்ச்சியிலும் பதப்புணர்ச்சியிலும் ஈறுபோதல் முதலிய விகாரங்களைப் பெற்றுவரும்.

உ–ம். கருமை + அன் = கரியன்.
கருமை + குதிரை = கருங்குதிரை.

## இடைநிலை.

**75.** இடைநிலை, பெயரிடைநிலை வினையிடைநிலை என இரண்டு வகைப்படும்.

குறிப்பு.—பெயரிடைநிலைகள் காலம் காட்டா; வினையிடைநிலைகள் காலம் காட்டும்.

**76.** பெயர்ப்பகுபதத்தைப் பகுதி விகுதியாகப் பிரிக்கும்போது இடையே யாதேனும் ஓரெழுத்திருந்தால் அது பெயரிடைநிலையாம்.

உ–ம். வலைச்சி, கலைஞன்–இவைகளில் சகர ஞகரங்கள் பெயரிடைநிலைகள்.

**77.** வினையிடைநிலை, இறந்தகால இடைநிலை நிகழ்கால இடைநிலை எதிர்கால இடைநிலை என மூன்று வகைப்படும்.

1. த், ட், ற், இன்–இந்நான்கும் இறந்தகால இடைநிலைகளாம்.

உ–ம். படித்தான், உண்டான், சென்றான், எண்ணினான்.

குறிப்பு.—இன் இடைநிலை, போனான் என இகரம் குறைந்தும், ஓடியது என னகரம் குறைந்தும் வருதலும் உண்டு.

2. கிறு, கின்று, ஆநின்று – இம்மூன்றும் நிகழ்கால இடைநிலைகளாம்.

உ–ம். படிக்கிறான், செல்கின்றான், உண்ணாநின்றான்.

3. ப், வ்—இவ்விரண்டும் எதிர்கால இடைநிலைகளாம்.

உ—ம். நடப்பான், வருவான்.

**78.** சில வினைச்சொற்களில் வேறு சில இடைநிலைகள் காலங்காட்டுவதும் உண்டு.

உ—ம். போயது—யகரம் இறந்தகாலம் காட்டியது.

**79.** கு, டு, று என்னும் எழுத்துக்களை ஈறுகவுடைய சில குறிவினைப்பகுதிகள் தம் ஒற்றிரட்டி இறந்தகாலங் காட்டும்.

உ—ம். புகு—புக்கான்; விடு—விட்டான்; பெறு—பெற்றான்.

**80.** சில வினைச்சொற்களில் விகுதியே காலங்காட்டும். அவை, ஏவல் வினைமுற்றும், வியங்கோள் வினைமுற்றும், செய்யுமென் வினைமுற்றும், செய்யுமென்வாய்பாட்டுப் பெயரெச்சமும், இகர யகரவீற்றுச் செய்தென் வாய் பாட்டு வினையெச்சமும், செய, செயின் என்னும் வாய் பாட்டு வினையெச்சங்களுமாம்.

## சாரியை.

**81.** சாரியையாவன, பதத்தோடு பதமும் விகுதியும் வேற்றுமையுருபுகளும் புணரும்போது அவைகளைச் சார்ந்துவரும் அன் முதலிய இடைச்சொற்களாம்.

## சந்தி.

**82.** சந்தியாவன, மேலே புணரியலிற் சொல்லப்படும் தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் மூன்று புணர்ச்சி விகாரங்களுமாம்.

## விகாரம்.

**83.** விகாரங்களாவன, வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல், முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை என்னும் செய்யுள் விகாரங்கள் ஒன்பதுமாம்.

## பயிற்சி.

1. அடியிற்கண்டவைகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே இரண்டிரண்டு உதாரணங்கள் கூறுக:—

1. பொருளடியாகப் பிறந்த பெயர்.
2. தொழிலடியாகப் பிறந்த பெயர்.
3. குணமடியாகப் பிறந்த பெயர்.

2. பெயரடியாகப் பிறந்த வினைப்பகுபதம் மூன்று எழுதுக.

3. பெயரிடைநிலைக்கும் வினையிடைநிலைக்கும் வேறுபாடு என்ன?

4. தொழிற்பெயர்கள் எத்தனை வகைப்படும்? ஒவ்வொன்றிற்கும் மும்மூன்று உதாரணங்கள் கூறுக.

5. கற்றார், பெற்றார், ஆயிற்று, வரும், நட, வாழ்க இவைகளில் எவை காலங்காட்டின?

6. பகுபத உறுப்புக்கள் ஆறினையும் பெற்றுவரும் பகுபதம் எது? இரண்டு உதாரணங்கள் கூறுக.

7. சந்திக்கும் விகாரத்திற்கும் வேறுபாடு என்ன?

8. செய்யுள் விகாரம் ஒன்பதுக்கும் ஒவ்வோர் உதாரணம் கூறுக.

## வடசோல்.

**84.** ஸம்ஸ்கிருதச்சொல் தமிழில்வந்து வழங்கும் போது வடசொல் எனப்படும்.

**85.** அவ்வடசொல், தற்சமம், தற்பவம் என இரண்டு வகைப்படும்.

**86.** ஸம்ஸ்கிருதச்சொல் தன் ஒலியில் மாறுபடாமல் தமிழில்வந்து வழங்குமாயின் அது தற்சமம்.

உ-ம். கமலம், காரணம்.

குறிப்பு.—தத் + சமம் (தத் = அதனோடு, சமம் = ஒத்திருப்பது).

**87.** ஸம்ஸ்கிருதச்சொல் தனக்குரிய ஒலியில் வேறு பட்டுத் தமிழில்வந்து வழங்குவது தற்பவமாம்.

உ-ம். ஜலம்—சலம்; வேஷம்—வேடம்.

குறிப்பு.—தத் + பவம் (தத் = அதினின்றும், பவம் = உண்டானது).

**88.** ஸம்ஸ்கிருதத்திற்கே உரிய சிறப்பு எழுத்துக்கள் தமிழில்வந்து வழங்கும்போது தத்தமக்கேற்ற தமிழ் எழுத்துக்களாகத் திரிந்து வழங்கும். அவற்றுள்,

1. ஜகாரம் மொழிக்கு முதலில் சகரமாகவும் இடையில் சகர யகரங்களாகவும் திரியும்.

உ-ம். ஜலம்—சலம்; விஜயம்—விசயம்; புஜம்—புயம்.

2. ஶகாரம் மொழிக்கு முதலில் சகரமாகவும் இடையில் சகரமாகவும் யகரமாகவும் திரியும்.

உ-ம். ஶம்பு—சம்பு; தேஶம்—தேசம், தேயம்.

3. ஷகாரம் மொழிக்கு முதலில் சகரமாகவும் இடையில் டகரமாகவும் திரியும்.

உ-ம். ஷண்முகம்-சண்முகம்; வேஷம்-வேடம்.

4. க்ஷகாரம் இரண்டு ககரங்களாகவும் இரண்டு சகரங்களாகவும், டகர சகரங்களாகவும் திரியும்.

உ-ம். பக்ஷம்-பக்கம்; பிக்ஷை-பிச்சை; சாக்ஷி-சாட்சி.

குறிப்பு.—மொழிக்கு முதலில் வரும்போது ஒரு ககரம் அல்லது ஒரு சகரமே நிற்கும்.

உ-ம். க்ஷணம்-கணம்; க்ஷேமம்-சேமம்.

5. ஸகாரம் சகரமாகவும் தகரமாகவும் திரியும்.

உ-ம். ஸபை-சபை; மாஸம்-மாதம்.

6. ஹகாரம் மொழிக்கு முதலில் கெடும்; இடையில் ககரமாகத் திரியும்.

உ-ம். ஹரன்-அரன்; மோஹம்-மோகம்.

**89.** மொழியீற்று ஆகாரம் ஐகாரமாகவும் ஈகாரம் இகரமாகவும் திரியும்.

உ-ம். கலா-கலை; தயா-தயை; புரீ-புரி; நதீ-நதி.

பயிற்சி.

1. வடசொல்லாவது யாது?
2. வடசொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. தற்சமமாவது யாது?
4. தற்பவமாவது யாது?
5. தற்சமம், தற்பவம் இவைகளுக்குத் தனித்தனியே மும்மூன்று உதாரணங்கள் கூறுக.

---

## 3. புணரியல்.

### (1) உயிரீற்றுப்புணரியல்.

**90.** புணர்ச்சியாவது, நிலைமொழியீறும் வருமொழி முதலும் ஒன்றுபடப் புணர்வதாம். இதற்குச் சந்தி என்றும் பெயர்.

**91.** நிலைமொழியாவது முதலில் நிற்கும்மொழி; வருமொழியாவது நிலைமொழியை அடுத்துவந்து அதனோடு சேரும் மொழியாம்.

உ.-ம். **இராமன் வந்தான்—இதில், இராமன் நிலைமொழி; வந்தான் வருமொழி.**

**92.** புணர்ச்சி, வேற்றுமைப்புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என இரண்டு வகைப்படும்.

**93.** வேற்றுமைப்புணர்ச்சியாவது, இரண்டாம் வேற்றுமைமுதல் ஏழாம் வேற்றுமை வரையிலுள்ள ஆறு வேற்றுமை உருபுகளும் மொழிகளுக்கு இடையே வெளிப்பட்டும் மறைந்தும் நிற்கப் பதங்கள் பொருந்தும் புணர்ச்சியாம்.

குறிப்பு.—**வேற்றுமையுருபு வெளிப்பட்டு நிற்பது வேற்றுமைவிரி என்றும் வேற்றுமையுருபு மறைந்து நிற்பது வேற்றுமைத் தொகை என்றும் பெயர் பெறும்.**

| | | | |
|---|---|---|---|
| உ-ம். | உ-ம் வேற்றுமை | தொகை | — நீர் குடித்தான். |
| | | விரி | — நீரைக் குடித்தான். |
| | ௩-ம் வேற்றுமை | தொகை | — கல் எறிந்தான். |
| | | விரி | — கல்லால் எறிந்தான். |
| | ௪-ம் வேற்றுமை | தொகை | — கூலி வேலை. |
| | | விரி | — கூலிக்கு வேலை. |
| | ௫-ம் வேற்றுமை | தொகை | — மலைவீழ் அருவி. |
| | | விரி | — மலையின்வீழ் அருவி. |
| | ௬-ம் வேற்றுமை | தொகை | — கண்ணன் கோயில். |
| | | விரி | — கண்ணனது கோயில். |
| | ௭-ம் வேற்றுமை | தொகை | — வீடு புகுந்தான். |
| | | விரி | — வீட்டில் புகுந்தான். |

**94.** அல்வழிப்புணர்ச்சியாவது, வேற்றுமையல்லாத வழியில் சொற்கள் புணர்வதாம். அது தொகைநிலைத் தொடர் ஐந்தும், தொகாநிலைத்தொடர் ஒன்பதுமாகப் பதினான்கு வகைப்படும்.

**95.** தொகைநிலைத்தொடர், வினைத்தொகை, பண்புத் தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என ஐந்தாம். (86—ம் பக்கம் பார்க்க.)

உ–ம். 1. வினைத்தொகை — செய்தொழில்
2. பண்புத்தொகை — செங்கரும்பு
இருபெயரொட்டுப் பண்புத்தொகை — சாரைப்பாம்பு
3. உவமைத்தொகை — மதிமுகம்
4. உம்மைத்தொகை — இராப்பகல்
5. அன்மொழித்தொகை — பொற்றொடி (வந்தாள்)

} தொகைநிலைத் தொடர்கள் ஐந்து.

**96.** தொகாநிலைத்தொடர் எழுவாய்த்தொடர், விளித்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், தெரிநிலை வினைமுற்றுத்தொடர், குறிப்பு வினைமுற்றுத் தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர் என ஒன்பதாம்.

உ–ம்.

1. எழுவாய்த்தொடர் .. — கண்ணன் வந்தான்
2. விளித்தொடர் .. — கண்ணா வா
3. பெயரெச்சத்தொடர் .. — வந்த மனிதன்
4. வினையெச்சத்தொடர் .. — கண்டு போனான்
5. தெரிநிலை வினைமுற்றுத்தொடர் — வந்தான் இராமன்
6. குறிப்பு வினைமுற்றுத்தொடர் — குழையன் கண்ணன்
7. இடைச்சொற்றொடர் .. — மற்றொன்று
8. உரிச்சொற்றொடர் .. — நனிபேதை
9. அடுக்குத்தொடர் .. — பாம்புபாம்பு

} தொகாநிலைத் தொடர்கள் ஒன்பது.

**97.** தொகைநிலைத்தொடராவது, உருபுகள் இடையே மறைந்து நிற்க இரண்டு முதலிய சொற்கள் ஒரு சொற்றன்மைப்பட்டுத் தொடர்வதாம். (ஒரு சொற்றன்மைப்படுதல்=சொற்கள் பிளவுபடாமல் நிற்றல்.)

**98.** தொகாநிலைத்தொடராவது இடையே உருபுகள் கெடாமல் சொற்கள் பிளவுபட்டு நின்று தொடர்வதாம். (89-ம் பக்கம் பார்க்க.)

**99.** இப்படி சொற்கள் வேற்றுமை வழியானும் அல்வழியானும் புணருமிடத்து இயல்பாகவேனும் விகாரமாகவேனும் புணரும்.

**100.** இயல்பு புணர்ச்சியாவது நிலைமொழியும் வருமொழியும் விகாரமின்றிப் புணர்வதாம்.

உ–ம். வந்த + மனிதன் = வந்தமனிதன்.
பொன் + பெரிது = பொன்பெரிது.

**101.** விகாரப்புணர்ச்சியாவது, நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் விகாரங்களுள் ஒன்றையேனும் பலவற்றையேனும் பெற்றுப் புணர்வதாம்.

**102.** தோன்றல் விகாரமாவது, நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது இடையில் எழுத்தாவது சாரியையாவது தோன்றுவதாம்.

உ—ம். வாழை + பழம் = வாழைப்பழம்.
புளி + காய் = புளியங்காய்.

**103.** திரிதல் விகாரமாவது, நிலைமொழி ஈற்றெழுத்தாவது வருமொழி முதலெழுத்தாவது அல்லது இரண்டுமாவது திரிதலாம்.

உ—ம். கல் + பலகை = கற்பலகை.
பொன் + தீது = பொன்றீது.
கல் + தீமை = கற்றீமை.

**104.** கெடுதல் விகாரமாவது, நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது உள்ள எழுத்துக் கெடுதலாம்.

உ—ம். மரம் + வேர் = மரவேர்.

**105.** நிலைமொழியும் வருமொழியும் புணர்தல், உயிரெழுத்தோடு உயிரெழுத்தும், உயிரெழுத்தோடு மெய்யெழுத்தும், மெய்யெழுத்தோடு உயிரெழுத்தும், மெய்யெழுத்தோடு மெய்யெழுத்தும் ஆக நான்கு வகைப்படும்.

குறிப்பு.—புணர்ச்சிவிதிகள் கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்திக் கூறப்படும்.—

1. உயிர் (12) + உயிர் (12).

2. உயிர் (12) + மெய் = { வலி = க, ச, த, ப. / மெலி = ஞ, ந, ம. / இடை = ய, வ. }

3. மெய் = { ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள. } + உயிர் (12).

4. மெய் = { ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள. } + மெய் = { வலி = க, ச, த, ப. / மெலி = ஞ, ந, ம. / இடை = ய, வ. }

முதல் இரண்டு வகைகளும் உயிரீற்றுப் புணரியலிலும், பின்னிரண்டும் மெய்யீற்றுப் புணரியலிலும் கூறப்படும்.

## உயிர்முன் உயிர்.

**106.** உயிரெழுத்தோடு உயிரெழுத்து இணங்கி நில்லாதாகையால் இடையே ஒரு மெய்யெழுத்துத் தோன்றும். அப்படித் தோன்றும் மெய்யெழுத்துக்கு உடம்படுமெய் என்று பெயர்.

குறிப்பு.—உடம்படுமெய்யாவது வரும் உயிருக்கு உடம்பாக அடுக்கும் மெய்; அன்றி, இரண்டு உயிரையும் உடன்படுத்தும் மெய் எனினுமாம். அப்பொழுது உடன்படுமெய் உடம்படுமெய்யென மருவிற்றெனக் கொள்ளவேண்டும்.

**107.** இ, ஈ, ஐ என்னும் மூன்றுயிர்களுக்குமுன் உயிர்வந்தால் இடையே யகரம் உடம்படுமெய்யாக வரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| உ–ம். | கிளி | + அழகு | = | கிளியழகு. |
| | தீ | + எரிந்தது | = | தீயெரிந்தது. |
| | மலை | + உயர்ந்தது | = | மலையுயர்ந்தது. |

**108.** அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் ஏழு உயிர்களுக்குமுன் உயிர் வந்தால் இடையே வகரம் உடம்படுமெய்யாக வரும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ–ம். | பல | + | அரசர் | = | பலவரசர். |
| | நிலா | + | எழுந்தது | = | நிலாவெழுந்தது. |
| | வடு | + | அகன்றது | = | வடுவகன்றது. |
| | பூ | + | அழகிது | = | பூவழகிது. |
| | நொ | + | அழகா | = | நொவ்வழகா. |
| | போ | + | என்றான் | = | போவென்றான். |
| | கௌ | + | அழகிது | = | கௌவழகிது. |

**109.** ஓரெழுத்தொருமொழியாகிய ஏ, சே, தே என்னும் பெயர்சொல் எகாரத்துக்குமுன் உயிர்வந்தால் வகரம் தோன்றும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ–ம். | ஏ | + | அழகு | = | ஏவழகு. |
| | சே | + | அழகு | = | சேவழகு. |
| | தே | + | அழகு | = | தேவழகு. |

**110.** பண்புச்சொல்லின் விகாரமாகிய சே என்பதற்கு முன் உயிர்வந்தால், யகரமும் வகரமும் தோன்றும்.

உ–ம். சே + அடி = சேயடி; சேவடி.

**111.** இடைச்சொல் ஏகாரத்திற்குமுன் உயிர்வரின் யகரம் உடம்படுமெய்யாக வரும்.

உ-ம். அவனே + அழகன் = அவனேயழகன்.

**112.** எகர வினாமுன்னும் மூன்று சுட்டெழுத்துக் களின் முன்னும் உயிரும் யகரமும் வந்தால் வகரமும், மற்றைய மெய்வந்தால் வந்த மெய்யும் தோன்றும்.

உ-ம். எ + உயிர் = எவ்வுயிர்.
எ + யானை = எவ்யானை.
எ + காலம் = எக்காலம்.
எ + நாள் = எந்நாள்.
எ + வலி = எவ்வலி.
அ + உயிர் = அவ்வுயிர்.
அ + யானை = அவ்யானை.
அ + காலம் = அக்காலம்.
அ + நாள் = அந்நாள்.
அ + வலி = அவ்வலி.

இவ்வாறே பிறமெய்களையும் கூட்டுக.

**113.** குறு, சிறு, நடு, புது, வெறு என்னும் பண்படி களின்முன் உயிர்வந்தால் உகரமேறியமெய் இரட்டும்.

உ-ம். குறு + உடைவாள் = குற்றுடைவாள்.
சிறு + அப்பன் = சிற்றப்பன்.
நடு + ஆறு = நட்டாறு.
புது + உருக்கு நெய் = புத்துருக்கு நெய்.
வெறு + இலை = வெற்றிலை

குறிப்பு.—நடுவூர் என்று ஆவதும் உண்டு.

**114.** அரு, கரு, பெரு என்பன உயிர்வரின் முதல் நீண்டேவரும்.

உ-ம். அரு + உயிர் = ஆருயிர்.
கரு + எருமை = காரெருமை.
பெரு + ஆசை = பேராசை.

**115.** குற்றியலுகரத்தின்முன் உயிர்வந்தால் உகரம் கெட்டு அது ஏறிய மெய்யில் வந்தஉயிர் ஏறும்.

உ-ம். முரசு + அதிர்ந்தது = முரசதிர்ந்தது.
நாடு + ஆண்டான் = நாடாண்டான்.

**116.** குற்றியலுகரம் வடமொழியாயின் அவ்வுகரம் உயிர்வரின் கெடாது; உடம்படுமெய் தோன்றும்.

உ-ம். இந்து + எழுந்தது = இந்துவெழுந்தது.

பயிற்சி.

1. இயல்பு புணர்ச்சிக்கு இரண்டு உதாரணங்கள் கூறுக.
2. தொகைநிலைத்தொடர்கள் எத்தனை?
3. தோன்றல் முதலிய மூன்று விகாரங்களும் ஒரே தொடரில் வந்ததற்கு இரண்டு உதாரணங்கள் எழுதுக.
4. உடம்படுமெய்யென்பதற்குப் பொருள் என்ன?
5. எந்த ஏகார ஈற்றின்முன் வகரம்மாத்திரம் உடம்படுமெய் யாக வரும்?
6. பண்படிகள் உயிர்வர ஒற்று இரட்டியதற்கு மூன்று உதாரணங்கள் கூறுக.
7. பண்படிகள் முதல் நீண்டதற்கு இரண்டு உதாரணங்கள் கூறுக.
8. குற்றியலுகரம் உயிர்வரக் கெட்டதற்கு நான்கு உதாரணங்கள் எழுதுக.
9. குற்றியலுகரம் எப்படியிருந்தால் உயிர்வரின் கெடாது?
10. கலையுணர்ச்சி, வருகவென்றான், சேயடி, எம்மான், சிற்றுண்டி, பேருதவி, ஆங்காங்கு, அவ்யானை இந்தத் தொடர்களைப் பிரித்து இங்ஙனம் புணர்ந்ததற்கு விதி கூறுக.

உயிர்முன் வல்லெழுத்து.

**117.** உயிரெழுத்துக்களின்முன் வரும் க, ச, த, ப என்பவை பெரும்பாலும் இரட்டிக்கும்.

குறிப்பு.—வல்லெழுத்து ஆறனுள், டகர றகரங்கள் மொழிக்கு முதலாகா.

உ-ம். மெல்ல + சென்றான் = மெல்லச்சென்றான்.
பாக்கு + பை = பாக்குப்பை,

அகரவீற்றுச் சிறப்புவிதி.

**118.** அகர ஈற்றுப் பெயரெச்சத்தின் முன்னும், பலவகை வினைமுற்றுக்களின் முன்னும், ஆறும் வேற்றுமை உருபின் முன்னும், பலவின்பாற் பெயரின் முன்னும் வரும் வல்லினம் இயல்பாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| உ—ம். வந்த | + | குதிரை | = | வந்தகுதிரை. |
| அரிய | + | பொருள் | = | அரியபொருள். |
| வந்தன | + | பசுக்கள் | = | வந்தனபசுக்கள். |
| கரியன | + | குதிரைகள் | = | கரியனகுதிரைகள். |
| வாழ்க | + | பொன்ணு | = | வாழ்கபொன்ணு. |
| தன | + | கைகள் | = | தனகைகள். |
| பல | + | குதிரைகள் | = | பலகுதிரைகள். |

**119.** விகாரப்பட்ட என்ன என்னும் வினுவின்முன் வலிமிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| உ—ம். என்ன | + | பொருள் | = | என்னபொருள். |
| என்ன | + | கொடுத்தான் | = | என்னகொடுத்தான். |

## ஆகாரவீற்றுச் சிறப்புவிதி.

**120.** அல்வழியில் ஆ, மா என்பவற்றின்முன்னும், ஆகாரவீற்றுப் பலவின்பால் வினைமுற்றின் முன்னும், ஆ என்னும் வினுவிடைச்சொல்லின் முன்னும் வரும் வல்லெழுத்து இயல்பாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| உ—ம். ஆ | + | சிறிது | = | ஆசிறிது. |
| மா | + | பெரிது | = | மாபெரிது. |
| உண்ணு | + | குரங்குகள் | = | உண்ணுகுரங்குகள். |
| அவனு | + | கொண்டான் | = | அவனுகொண்டான். |

## இகரவீற்றுச் சிறப்புவிதி.

**121.** இகரவீற்றுச்சொற்களின்முன் வரும் வல்லினம், அல்வழியில் எழுவாய்த் தொடரிலும் வினைமுற்றுத் தொடரிலும் உம்மைத்தொகையிலும் வினைத்தொகையிலும் இயல்பாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| உ—ம். அரிசி | + | சிறிது | = | அரிசிசிறிது. |
| வருதி | + | கொற்ரு | = | வருதிகொற்ரு. |
| மாசி | + | பங்குனி | = | மாசிபங்குனி. |
| தெளி | + | பொருள் | = | தெளிபொருள். |

**122.** படி என்னும் இடைச்சொல் வினையை அடுத்து வரும்போது அதன்முன் வலி மிகாது; சுட்டுவினுவை அடுத்துவரும்போது மிகுதலும் மிகாமையும் உண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| உ—ம். வரும்படி | + | சொன்னுன் | = | வரும்படிசொன்னுன். |
| அப்படி | + | சொன்னுன் | = | அப்படிச்சொன்னுன்; அப்படிசொன்னுன். |
| எப்படி | + | சொன்னுன் | = | எப்படிச்சொன்னுன்; எப்படிசொன்னுன். |

குறிப்பு.—ஒரே தொடரில் இயல்பாயும் விகாரமாயும் வருவதற்கு விகற்பித்தலென்று பெயர்.

## முற்றுகரவீற்றுச் சிறப்புவிதி.

**123.** மூன்றும் வேற்றுமை உருபு, ஆறும் வேற்றுமை உருபு, இயல்பும் விகாரமுமாகிய எண்ணுப் பெயர்கள், வினைத்தொகை, சுட்டுப்பெயர், வினாப்பெயர் ஆகிய இவற்றின் ஈறாகிய முற்றியலுகரத்தின்முன் வல்லினம் இயல்பாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| உ–ம். அவனொடு | + | சென்றான் | = | அவனொடுசென்றான். |
| எனது | + | தோள் | = | எனதுதோள். |
| ஒரு | + | கை | = | ஒருகை. |
| இரு | + | செவி | = | இருசெவி. |
| அறு | + | தொழில் | = | அறுதொழில். |
| எழு | + | கடல் | = | எழுகடல். |
| ஏழு | + | கடல் | = | ஏழுகடல். |
| விடு | + | கணை | = | விடுகணை. |
| அது | + | காண் | = | அதுகாண். |
| இது | + | காண் | = | இதுகாண். |
| எது | + | பெரிது | = | எதுபெரிது. |

**124.** அளவு என்னும் பண்புச்சொல்லின்முன் வரும் வல்லினம் இயல்பாம்.

உ–ம். அவ்வளவு + கூலி = அவ்வளவுகூலி.
அவ்வளவு + கொடுத்தான் = அவ்வளவுகொடுத்தான்.

**125.** சிறு என்னும் பண்படியின்முன் பெரும்பாலும் வலி மிகாது.

உ–ம். சிறு + துரும்பு = சிறுதுரும்பு.

குறிப்பு.—சிறுத்தொண்டர் எனவும் வருதல் காண்க.

**126.** அரு, கரு, குறு, நெடு, பெரு, வெறு என்னும் பண்படிகளாகிய முற்றுகரங்களுக்குமுன் வல்லினம் வந்தால் இனவெழுத்துத் தோன்றும்.

| | | | | |
|---|---|---|---|---|
| உ–ம். அரு | + | கலம் | = | அருங்கலம். |
| கரு | + | குழல் | = | கருங்குழல். |
| குறு | + | கை | = | குறுங்கை. |
| நெடு | + | கணக்கு | = | நெடுங்கணக்கு. |
| பெரு | + | தீனி | = | பெருந்தீனி. |
| வெறு | + | பேச்சு | = | வெறும்பேச்சு |

## குற்றுகரவீற்றுச் சிறப்புவிதி.

**127.** வன்றொடர் அல்லாத குற்றியலுகரங்களுக்கு முன் வல்லெழுத்து வந்தால் அல்வழியில் இயல்பாம்.

உ—ம். நாடு + பெரிது = நாடுபெரிது.
மிளகு + சிறிது = மிளகுசிறிது.
கண்டு + கொண்டான் = கண்டுகொண்டான்.
செய்து + கொடுத்தான் = செய்துகொடுத்தான்.
எஃகு + பெரிது = எஃகுபெரிது.

**128.** வேற்றுமையில், இடைத்தொடர் ஆய்தத் தொடர்க் குற்றுகரங்களின்முன் வல்லெழுத்து மிகாது.

உ—ம். மார்பு + கடுமை = மார்புகடுமை.
எஃகு + கடுமை = எஃகுகடுமை.

**129.** வேற்றுமையில் ஒற்றிடையேமிகாத நெடிற்றொடர்முன்னும் உயிர்த்தொடர்முன்னும் வலி மிகாது.

உ—ம். நாகு + கால் = நாகுகால்.
வரகு + தாள் = வரகுதாள்.

## ஊகாரவீற்றுச் சிறப்புவிதி.

**130.** பூ என்னும் பெயர்முன் வல்லினம்வரின் பொது விதியால் மிகுதலேயன்றி அவற்றிற்கினமாகிய மெல்லெழுத்தும் தோன்றும்.

உ—ம். பூ + கொடி = பூங்கொடி.
பூ + தோட்டம் = பூந்தோட்டம்.

## ஏகார ஓகாரவீற்றுச் சிறப்புவிதி.

**131.** இடைச்சொற்களாகிய ஏகார ஓகாரங்களுக்கு முன் வல்லெழுத்து இயல்பாம்.

உ—ம். அவனே + செய்தான் = அவனேசெய்தான்.
அவனோ + கண்டான் = அவனோகண்டான்.

## ஐகாரவீற்றுச் சிறப்புவிதி.

**132.** ஐகாரவீற்றுச்சொற்களின்முன் வரும் வல்லினம் அல்வழியில் எழுவாய்த்தொடரிலும் வினைமுற்றுத் தொடரிலும் உம்மைத்தொகையிலும் வினைத்தொகையிலும் இயல்பாம்.

உ-ம். யானை + பெரிது = யானைபெரிது.
வந்தனை + கொற்ரு = வந்தனைகொற்ரு.
யானை + குதிரை = யானைகுதிரை.
உரை + கல் = உரைகல்.

**133.** தனை என்னும் பண்புச்சொல்லின்முன் வரும் வல்லினம் இயல்பாம்.

உ-ம். அத்தனை + பேச்சு = அத்தனைபேச்சு.
அத்தனை + கொடுத்தான் = அத்தனைகொடுத்தான்.

குறிப்பு.—உயிரீற்றின்முன் மெல்லெழுத்தும் இடையெழுத்தும் புணர்தல் பொதுப்புணரியலில் கூறப்படும்.

## பயிற்சி.

1. இகரவீற்றுப் பெயர்ச்சொற்களின்முன் வல்லினம் வேற்றுமையில் மிக்கதற்கு நான்கு உதாரணமும், அல்வழியில் மிக்கதற்கு இரண்டு உதாரணமும் கூறுக.

2. விகற்பித்தல் என்ருல் என்ன? ஓர் உதாரணம் கூறுக.

3. குற்றியலுகரவீற்றின்முன் வல்லெழுத்து மிக்கதற்கு இரண்டு உதாரணம் எழுதுக.

4. எந்த எந்தத் தொடர்க் குற்றியலுகரவீற்றின்முன் வேற்றுமையில் வல்லெழுத்து மிகும்? நான்கு உதாரணங்கள் எழுதுக.

5. எந்த எந்தத் தொடர்க் குற்றியலுகரவீற்றின்முன் அல்வழியில் வல்லெழுத்து மிகும்? இரண்டு உதாரணம் கூறுக.

6. முற்றியலுகரத்தின்முன் வல்லெழுத்து மிக்கதற்கு இரண்டு உதாரணங்கள் கூறுக.

7. ஐகாரவீற்றுச் சொற்களின்முன் வல்லினம் அல்வழியில் மிக்கதற்கு இரண்டு உதாரணமும், மிகாததற்கு இரண்டு உதாரணமும் கூறுக.

8. வந்தகுதிரை, எந்தக்குதிரை, விளாக்குறிது, மாபெரிது, ஓடிப்போனுன், காடிக்கஞ்சி, சிறியபொருள், சிறிதுபொருள், கடுங்கோபம், மிளகுபொடி, அவனே கொடுப்பான், அவனெடு சொன்னுன், அவனேடு சொன்னுன், தனது கைகள், தன கைகள், இந்தத் தொடர்களைப் பிரித்து இங்ஙனம் புணர்ந்ததற்கு விதி கூறுக.

9. பின்வருவனவற்றைச் சேர்த்து எழுதுக.—

நடவா + குதிரை. சிறு + கூடை.
கடுமை + சொல். பூ + சோலை.

## (2) மெய்யீற்றுப்புணரியல்.

### மெய்ம்முன் உயிர்.

**134.** மெய்யெழுத்தின்முன் உயிர்வந்தால் அவ்வுயிர் மெய்யெழுத்தோடு கூடும்.

உ—ம். மரம் + உயர்ந்தது = மாமுயர்ந்தது.
பால் + அருந்தினன் = பாலருந்தினன்.

**135.** தனிக்குற்றெழுத்தைச் சேர்ந்த மெய்யின்முன் உயிர்வந்தால் அந்தமெய் இரட்டிக்கும்.

உ—ம். கல் + உயர்ந்தது = கல்லுயர்ந்தது.
பொன் + ஓலை = பொன்னோலை.

### மெய்ம்முன் மெய்.

**136.** மெய்யெழுத்துக்குமுன் மெய்யெழுத்து வரும்போது சிலவிடத்தில் நிலைமொழியீற்று மெய்ம்மாத்திரம் திரிதலும், சிலவிடத்தில் வருமொழிமுதலிலுள்ள மெய்ம்மாத்திரம் திரிதலும், சிலவிடத்தில் இரண்டும் திரிதலும் உண்டு.

உ—ம். பொன் + குடம் = பொற்குடம்.
பொன் + நகை = பொன்னகை.
பொன் + தகடு = பொற்றகடு.

குறிப்பு.—மொழிக்கு இறுதியில் வரும் பதினொரு மெய்களில் ஞகரம் உரிஞ் என்னும் ஒரு சொல்லிலும், நகரம், பொருந், வெரிந் என்னும் இரண்டு சொற்களிலும் மாத்திரமே வருவன; ஆதலின், ஞகர நகரங்கள் ஒழிந்த மற்றை ஒன்பது மெய்யீற்று மொழிகளுக்கே சிறப்பு விதிகள் கூறப்படும்.

அவற்றுள், ணகர னகரங்கள் செய்கையில் ஒத்திருத்தலின் அவை இரண்டினையும் சேர்த்தும், யகர ரகர ழகரங்கள் செய்கையில் ஒத்திருத்தலின் அம்மூன்றினையும் சேர்த்தும், லகர ளகரங்கள் செய்கையில் ஒத்திருத்தலின் அவ்விரண்டினையும் சேர்த்தும் விதிகள் கூறப்படும். எனவே, மெய்ம்முன் மெய்வருவதற்கு,

1. ண், ன் + { வலி = க, ச, த, ப. / மெலி = ஞ, ந, ம. / இடை = ய, வ. }

2. ம் + { உயிர் (12). / வலி = க, ச, த, ப. / மெலி = ஞ, ந, ம. / இடை = ய, வ. }

3. ய், ர், ழ் + { வலி = க, ச, த, ப. / மெலி = ஞ, ந, ம. / இடை = ய, வ. }

4. ல், ள் + { வலி = க, ச, த, ப. / மெலி = ஞ, ந, ம. / இடை = ய, வ. }

5. வ் + { வலி = க, ச, த, ப. / மெலி = ஞ, ந, ம. / இடை = ய, வ. }

என, இம்முறையாக விதிகள் கூறப்படும்.

## ணகர னகரவீறு.

**137.** ணகர னகரங்கள் வல்லினம் வந்தால் வேற்றுமையில் டகர றகரங்களாம்; அல்வழியில் இயல்பாம். மெல்லினமும் இடையினமும் வரின் இருவழியிலும் இயல்பாம்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| மண் | + குடம் | = மட்குடம். | வேற்றுமை. |
| பொன் | + குடம் | = பொற்குடம். | |
| மண் | + பெரிது | = மண்பெரிது. | அல்வழி. |
| பொன் | + பெரிது | = பொன்பெரிது. | |
| மண் | + மாட்சி | = மண்மாட்சி. | வேற்றுமை. |
| பொன் | + மிகுதி | = பொன்மிகுதி. | |
| மண் | + மலிந்தது | = மண்மலிந்தது. | அல்வழி. |
| பொன் | + மிக்கது | = பொன்மிக்கது. | |
| மண் | + வன்மை | = மண்வன்மை. | வேற்றுமை. |
| பொன் | + வன்மை | = பொன்வன்மை. | |
| மண் | + வலிது | = மண்வலிது. | அல்வழி. |
| பொன் | + வலிது | = பொன்வலிது. | |

**138.** உயர்திணைப்பெயர் பொதுப்பெயர்களின் ஈற்றிலுள்ள ணகர னகரங்கள் வல்லெழுத்து வந்தால் இருவழியிலும் இயல்பாம்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். கந்தன் | + பெரியன் | = கந்தன்பெரியன். | அல்வழி. |
| ஆண் | + பெரியன் | = ஆண்பெரியன். | |
| ஆண் | + பெரிது | = ஆண்பெரிது. | |
| சாத்தன் | + பெரியன் | = சாத்தன்பெரியன். | |
| சாத்தன் | + பெரிது | = சாத்தன்பெரிது. | |
| நான் | + சிறியேன் | = நான்சிறியேன். | |
| கந்தன் | + கை | = கந்தன்கை. | வேற்றுமை. |
| ஆண் | + கை | = ஆண்கை. | |
| சாத்தன் | + புறம் | = சாத்தன்புறம். | |

குறிப்பு.—பொதுப்பெயராவது உயர்திணை அஃறிணை இரண்டிலும் வரும் பெயராம்.

**139.** தனிக்குறிலணையாத ணகர னகரங்கள், வருமொழி முதலில் வந்த நகரம் திரியும்போது கெடும்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். ஊண் | + நன்று | = ஊணன்று. | அல்வழி. |
| கோன் | + நல்லன் | = கோனல்லன். | |
| ஊண் | + நலம் | = ஊணலம். | வேற்றுமை. |
| கோன் | + நன்மை | = கோனன்மை. | |

## மகர ஈறு.

**140.** மொழியீற்றுமகரம் வேற்றுமையில் நாற்கணமும் வரக் கெடும்.

உ-ம். மரம் + அடி = மரவடி.
மரம் + கிளை = மரக்கிளை.
மரம் + நார் = மரநார்.
மரம் + வேர் = மரவேர்.

குறிப்பு.—நாற்கணமாவன:—உயிர்க்கணம், வன்கணம், மென்கணம், இடைக்கணம்.

**141.** மொழியீற்றுமகரம், அல்வழியில் பண்புத்தொகையிலும் உவமைத்தொகையிலும் நாற்கணமும் வரக் கெடும்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். வட்டம் | + ஆழி | = வட்டவாழி. | பண்புத் தொகை. |
| வட்டம் | + பலகை | = வட்டப்பலகை. | |
| வட்டம் | + மேடை | = வட்டமேடை. | |
| வட்டம் | + வடிவம் | = வட்டவடிவம். | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பவளம் | + | இதழ் | = | பவளவிதழ் | உவமைத்தொகை. |
| கமலம் | + | கண் | = | கமலக்கண். | |
| கமலம் | + | முகம் | = | கமலமுகம். | |
| பவளம் | + | வாய் | = | பவளவாய். | |

**142.** மொழியீற்றுமகரம், வல்லினம் வந்தால் அல்வழியில் எழுவாய்த்தொடரிலும் உம்மைத்தொகையிலும் செய்யும் என்னும் பெயரெச்சத்தொடரிலும் வினைமுற்றுத்தொடரிலும் இடைச்சொற்றொடரிலும் வரும் வல்லெழுத்துக்கு இனமாகத்திரியும்; உயிரும் இடையினமும் வந்தால் இயல்பாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ—ம். | பாதம் | + | சிவந்தது | = | பாதஞ்சிவந்தது. |
| | பணம் | + | காசு | = | பணங்காசு. |
| | வரும் | + | குதிரை | = | வருங்குதிரை. |
| | வந்தனம் | + | சிறியேம் | = | வந்தனஞ்சிறியேம். |
| | பாலும் | + | தேனும் | = | பாலுந்தேனும். |
| | மரம் | + | உயர்ந்தது | = | மரமுயர்ந்தது. |
| | மரம் | + | வளர்ந்தது | = | மரம்வளர்ந்தது. |

**143.** மொழியீற்றுமகரம், மெல்லினம்வரின் இருவழியிலும் கெடும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ—ம். | மரம் | + | நார் | = | மரநார். |
| | மரம் | + | நீண்டது | = | மரநீண்டது. |

### ய, ர, ழ ஈறு.

**144.** ய, ர, ழ ஒற்றுக்களின்முன் வரும் வல்லெழுத்துக்கள் வேற்றுமையிலும், அல்வழியில் பண்புத்தொகை உவமைத்தொகைகளிலும் இரட்டிக்கும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உ—ம். | நாய் | + | கால் | = | நாய்க்கால். | வேற்றுமை. |
| | தேர் | + | குதிரை | = | தேர்க்குதிரை. | |
| | தமிழ் | + | சங்கம் | = | தமிழ்ச்சங்கம். | |
| | மெய் | + | கீர்த்தி | = | மெய்க்கீர்த்தி. | அல்வழி பண்புத்தொகை. |
| | கார் | + | பருவம் | = | கார்ப்பருவம். | |
| | தமிழ் | + | பாடம் | = | தமிழ்ப்பாடம். | |
| | வேய் | + | தோள் | = | வேய்த்தோள். | அல்வழி உவமைத்தொகை. |
| | கார் | + | குழல் | = | கார்க்குழல். | |
| | யாழ் | + | சொல் | = | யாழ்ச்சொல். | |

**145.** ய, ர, ழ ஒற்றுக்களின்முன் வரும் வல்லெழுத்து எழுவாய்த்தொடரிலும் வினைமுற்றுத்தொடரிலும் உம்மைத்தொகையிலும் வினைத்தொகையிலும் இயல்பாம்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| வேய் + பெரிது | = வேய்பெரிது. | | எழுவாய்த்தொடர். |
| கார் + கரிது | = கார்கரிது. | | |
| யாழ் + சிறிது | = யாழ்சிறிது. | | |
| வந்தாய் + கொற்ரு | = வந்தாய்கொற்ரு. | | வினை முற்றுத் தொடர். |
| சொன்ஞர் + பெரியோர் | = சொன்ஞர்பெரியோர். | | |
| வாழ் + கொற்ரு | = வாழ்கொற்ரு. | | |
| பேய் + பிசாசு | = பேய்பிசாசு. | | உம்மைத்தொகை. |
| மனிதர் + தேவர் | = மனிதர்தேவர். | | |
| இகழ் + புகழ் | = இகழ்புகழ். | | |
| தேய் + பிறை | = தேய்பிறை. | | வினைத்தொகை. |
| வளர் + பிறை | = வளர்பிறை. | | |
| வீழ் + பொருள் | = வீழ்பொருள். | | |

## லகர ளகர ஈறு.

**146.** லகர ளகரங்கள் வல்லினம் வந்தால் வேற்றுமையில் றகர டகரங்களாகும்; அல்வழியில் இயல்பாகும்.

உ—ம்.

| | | |
|---|---|---|
| கால் + குறிது | = கால்குறிது. | அல்வழி. |
| வாள் + கூரிது | = வாள்கூரிது. | |
| வேல் + கூர்மை | = வேற்கூர்மை. | வேற்றுமை. |
| முள் + கூர்மை | = முட்கூர்மை. | |

**147.** உயர்திணைப்பெயர் பொதுப்பெயர்களின் ஈற்றிலுள்ள லகர ளகரங்கள் வல்லெழுத்துவரின் இருவழியும் இயல்பாகும்.

அல்வழி.

உ—ம். தோன்றல் + பெரியன் = தோன்றல் பெரியன்.
வேள் + சிறியன் = வேள் சிறியன்.

வேற்றுமை.

தோன்றல் + பெருமை = தோன்றல் பெருமை.
வேள் + பெருமை = வேள் பெருமை.

**148.** லகர ளகரங்கள் மெல்லினம் வந்தால் இருவழியிலும் னகர ணகரங்களாகத் திரியும்.

உ—ம்.

| | | |
|---|---|---|
| கல் + மாடம் | = கன்மாடம். | வேற்றுமை. |
| எள் + மூட்டை | = எண்மூட்டை. | |
| கல் + மிகுந்தது | = கன்மிகுந்தது. | அல்வழி. |
| முள் + முறிந்தது | = முண்முறிந்தது. | |

**149.** லகர ளகரங்கள் இடையினம் வரில் இருவழியி லும் இயல்பாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| உ-ம். | வேல் + யாது | = | வேல்யாது. | அல்வழி. |
| | வேள் + வலியன் | = | வேள்வலியன். | |
| | கல் + யானை | = | கல்யானை. | வேற்றுமை. |
| | வேள் + வலிமை | = | வேள்வலிமை. | |

**150.** தனிக்குற்றெழுத்தைச் சாராத லகர ளகரங் கள், அல்வழியில், வருமொழி முதலிலுள்ள தகரம் றகர டகரங்களாகத் திரியும்போது கெடும்.

உ-ம். வேல் + தீது = வேறீது.
வாள் + தீது = வாடீது.

**151.** தனிக்குற்றெழுத்தைச் சாராத லகர ளகரங் கள், வருமொழி முதலிலுள்ள நகரம் னகர ணகரங்களா கத் திரியும்போது, இருவழியிலும் கெடும்.

| | | | | |
|---|---|---|---|---|
| உ-ம். | தோன்றல் + நல்லன் | = | தோன்றனல்லன். | அல்வழி. |
| | வேள் + நல்லன் | = | வேணல்லன். | |
| | கோல் + நலம் | = | கோனலம். | வேற்றுமை. |
| | நாள் + நலம் | = | நாணலம். | |

## வகர ஈறு.

**152.** அவ், இவ், உவ் என்னும் சுட்டுப்பெயர்களின் ஈற்று வகரம் அல்வழியில் வல்லினம் வந்தால் ஆய்தமா கத்திரியும்; மெல்லினம் வந்தால் வந்த எழுத்தாகத் திரி யும்; இடையினம் வந்தால் இயல்பாகும்.

அல்வழி.

உ-ம். அவ் + கடிய = அஃகடிய.
இவ் + கடிய = இஃகடிய.
உவ் + கடிய = உஃகடிய.
அவ் + ஞான்றன = அஞ்ஞான்றன.
அவ் + வாழ்ந்தன = அவ்வாழ்ந்தன.

## வருமொழி முதலில் தகர நகரங்கள்.

**153.** தகரம், ணகர ளகரங்களுக்குமுன் டகரமாக வும், லகர னகரங்களுக்குமுன் றகரமாகவும் திரியும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ-ம். மண் | + | தீது | = | மண்டீது. | அல்வழி. |
| கள் | + | தீது | = | கட்டீது. | |
| அல் | + | திணை | = | அஃறிணை. | |
| கான் | + | தீது | = | கான்றீது. | |
| ஆண் | + | தலை | = | ஆண்டலை. | வேற்றுமை. |
| கள் | + | தீமை | = | கட்டீமை. | |
| கல் | + | தீமை | = | கற்றீமை. | |
| மான் | + | தேர் | = | மான்றேர். | |

**154.** நகரம், ணகர ளகரங்களுக்குமுன் ணகரமாகவும், லகர னகரங்களுக்குமுன் னகரமாகவும் திரியும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ-ம். மண் | + | நீண்டது | = | மண்ணீண்டது. | அல்வழி. |
| முள் | + | நீண்டது | = | முண்ணீண்டது. | |
| கல் | + | நன்று | = | கன்னன்று. | |
| பொன் | + | நன்று | = | பொன்னன்று. | |
| மண் | + | நலம் | = | மண்ணலம். | வேற்றுமை. |
| முள் | + | நீட்சி | = | முண்ணீட்சி. | |
| கல் | + | நன்மை | = | கன்னன்மை. | |
| பொன் | + | நன்மை | = | பொன்னன்மை. | |

குறிப்பு.—மெய்யீற்றின்முன் மெல்லெழுத்தும் இடையெழுத்தும் புணர்தல் பொதுப்புணரியலில் கூறப்படும்.

## ப்யிற்சி.

1. ணகர னகரங்களைச் சேர்த்தும், லகர ளகரங்களைச் சேர்த்தும் விதி சொல்லியதற்குக் காரணம் என்ன?

2. னகரம் வல்லினம்வர வேற்றுமையில் இயல்பானதற்கு இரண்டு உதாரணம் எழுதுக.

3. ஊணன்று, கோனல்லன் இவற்றை எவ்வெவ்விதமாகப் பிரிக்கலாம்? பிரித்துக்காட்டி இங்ஙனமானதற்கு விதியும் கூறுக.

4. மகரம், வந்த வல்லெழுத்துக்கு இனமாகத் திரிந்ததற்கு மூன்று உதாரணங்கள் எழுதுக.

5. ய, ர, ழ ஒற்றுக்களின்முன் வரும் வல்லினம் எப்பொழுது இரட்டிக்கும்? எப்பொழுது இயல்பாகும்? ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் காட்டுக.

6. லகரமும் ளகரமும் கெட்டதற்கு இவ்விரண்டு உதாரணம் கூறுக.

7. வகரவொற்று மெல்லெழுத்து வந்தால் எவ்வாருகும்? இரண்டு உதாரணம் கூறுக.

8. ணகர னகரங்களின்முன் தகரம் எவ்வாறு திரியும்?

9. கான்மிக்கது, ஆண்மாருட்டம், வாட்டானை, வேறீது: இவற்றை இரண்டு பொருள்படப் பிரித்தெழுதி இங்ஙனம் புணர்ந்ததற்கு விதி கூறுக.

10. கல் + சிறிது. மனம் + களித்தது.
மண் + சட்டி. மனம் + களிப்பு.
குறு + தாள். வேல் + பெரிது.

இவற்றைச் சேர்த்தெழுதிப் புணர்ச்சிவிதியும் கூறுக.

## (3) பொதுப்புணரியல்.

**155.** எல்லா ஈற்றின்முன்னும் வரும் மெல்லின இடையினங்கள் இருவழியிலும் இயல்பாம்.

உ—ம்.
இள + ஞாயிறு = இளஞாயிறு.
பனை + நீண்டது = பனைநீண்டது.
பொன் + மெலிது = பொன்மெலிது.
வேர் + யாது = வேர்யாது.
வேர் + வலிது = வேர்வலிது.
} அல்வழி.

வலி + ஞமலி = வலிஞமலி.
பனை + நார் = பனைநார்.
பூ + மணம் = பூமணம்.
கான் + யாறு = கான்யாறு.
வாள் + வலிமை = வாள்வலிமை.
} வேற்றுமை.

**156.** தனிக்குற்றெழுத்தைச் சேர்ந்த யகரத்தின் முன்னும், தனி ஐகாரத்தின் முன்னும், மெல்லெழுத்துக்கள் இரட்டிக்கும்.

உ—ம்.
மெய் + ஞானம் = மெய்ஞ்ஞானம்.
மெய் + நீண்டது = மெய்ந்நீண்டது.
மெய் + மாண்டது = மெய்ம்மாண்டது.
கை + ஞான்றது = கைஞ்ஞான்றது.
கை + நன்று = கைந்நன்று.
கை + மாண்டது = கைம்மாண்டது.
} அல்வழி.

மெய் + ஞாற்சி = மெய்ஞ்ஞாற்சி.
மெய் + நீட்சி = மெய்ந்நீட்சி.
மெய் + மாட்சி = மெய்ம்மாட்சி.
கை + ஞாற்சி = கைஞ்ஞாற்சி.
கை + நலம் = கைந்நலம்.
கை + மலை = கைம்மலை.
} வேற்றுமை.

**157.** உயர்திணைப்பெயர் பொதுப்பெயர்களின் ஈற்றிலுள்ள உயிரெழுத்துக்களின் முன்னும், ய, ர ஒற்றுக்களின் முன்னும் வரும் வல்லெழுத்துக்கள் இருவழியிலும் இயல்பாம்.

உயர்திணைப்பெயர்.

உ–ம். நம்பி + குறியன் = நம்பிகுறியன்.
சேய் + பெரியன் = சேய்பெரியன். } அல்வழி.
அவர் + தீயர் = அவர்தீயர்.

பொதுப்பெயர்.

சாத்தி + குறியள் = சாத்திகுறியள்.
சாத்தி + குறிது = சாத்திகுறிது. } அல்வழி.
தாய் + கொடியள் = தாய்கொடியள்.
தாய் + கொடிது = தாய்கொடிது.

உயர்திணைப்பெயர்.

நம்பி + கை = நம்பிகை.
சேய் + படை = சேய்படை. } வேற்றுமை.
அவர் + தலை = அவர்தலை.

பொதுப்பெயர்.

சாத்தி + கால் = சாத்திகால். } வேற்றுமை.
தாய் + கை = தாய்கை.

**158.** உயிரெழுத்துக்களை இறுதியாகவுடைய அஃறிணைப்பெயர்கள் அன்மொழியாகியும் ஆகுபெயராகியும் உயர்திணையை யுணர்த்தின், அவற்றின்முன் வரும் வல்லெழுத்து இருவழியிலும் இயல்பாம்.

உ–ம். பொற்றொடி + கூறினாள் = பொற்றொடிகூறினாள்.
பொற்றொடி + கை = பொற்றொடிகை.
பாவை + கூறினாள் = பாவைகூறினாள்.
பாவை + கை = பாவைகை.

**159.** விளிப்பெயர்களின் ஈற்றிலுள்ள உயிரெழுத்துக்களின் முன்னும் ய, ர, ழ ஒற்றுக்களின் முன்னும் வரும் வல்லெழுத்துக்கள் இயல்பாம்.

உ–ம். வேந்தே + கேள் = வேந்தேகேள்.
நங்காய் + கொடு = நங்காய்கொடு.

**160.** இடைச்சொல், உரிச்சொல், வடசொற்களின் ஈற்றிலுள்ள உயிரெழுத்துக்களின்முன் வரும் வல்லெழுத்து இயல்பாம்.

உ-ம். அம்மா + பெரிது = அம்மாபெரிது.
நனி + பேதை = நனிபேதை.
ஆதி + பகவன் = ஆதிபகவன்.

**161.** உயிரீற்றுச் சில மரப்பெயர்முன் வல்லினம் வரின் இடையே இன மெல்லெழுத்துத் தோன்றும்.

உ-ம். விள + கனி = விளங்கனி.
மா + பழம் = மாம்பழம்.

**162.** இகர உகரங்களையும் லகரத்தையும் ஈற்றிலுடைய சில மரப்பெயர்களின்முன் வல்லெழுத்துவரின் அம் சாரியை தோன்றும்.

உ-ம். புளி + காய் = புளியங்காய்.
புன்கு + காய் = புன்கங்காய்.
ஆல் + காய் = ஆலங்காய்.

**163.** ஐகார ஈற்றுச் சில மரப்பெயர், வல்லெழுத்து வரின் ஐ கெட்டு அம் சாரியை பெறும்.

உ-ம். தாழை + பூ = தாழம்பூ.

**164.** டகர றுகர ஈறுகளையுடைய நெடிற்றொடர்க்குற்றியலுகரங்களுக்கு முன்னும், உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களுக்கு முன்னும், வேற்றுமையில், நாற்கணமும் வந்தால் உகரமேறிய மெய் இரட்டிக்கும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உ-ம். | காடு | + | ஆறு | = | காட்டாறு. | நெடிற்றொடர். |
| | காடு | + | குதிரை | = | காட்டுக்குதிரை. | |
| | காடு | + | மரம் | = | காட்டுமரம். | |
| | காடு | + | வாழ்க்கை | = | காட்டுவாழ்க்கை. | |
| | ஆறு | + | ஓரம் | = | ஆற்றோரம். | |
| | ஆறு | + | கால் | = | ஆற்றுக்கால் | |
| | ஆறு | + | மேடு | = | ஆற்றுமேடு. | |
| | ஆறு | + | வெள்ளம் | = | ஆற்றுவெள்ளம். | |
| | துறடு | + | ஆணி | = | துறட்டாணி. | உயிர்த்தொடர். |
| | துறடு | + | கோல் | = | துறட்டுக்கோல். | |
| | துறடு | + | மூங்கில் | = | துறட்டுமூங்கில். | |
| | துறடு | + | வாய் | = | துறட்டுவாய். | |
| | மிடறு | + | ஒலி | = | மிடற்றொலி. | |
| | மிடறு | + | பாட்டு | = | மிடற்றுப்பாட்டு. | |
| | கிணறு | + | நீர் | = | கிணற்றுநீர். | |
| | வயிறு | + | வலி | = | வயிற்றுவலி. | |

**165.** இம்மெய்கள் பண்புத்தொகையிலும் இரட்டிக்கும்.

உ—ம். மூடு + பூச்சி = மூட்டுப்பூச்சி.
எறு + பன்றி = எற்றுப்பன்றி.
குருடு + கண் = குருட்டுக்கண்.
முயிறு + எறும்பு = முயிற்றெறும்பு.

**166.** எருது என்னும் துகரவீற்றையுடைய உயிர்த்தொடரிலும் உகரமேறிய மெய் இரட்டும்.

உ—ம். எருது + மாடு = எருத்துமாடு.

**167.** மேற்சொல்லிய நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றுகரங்களிலுள்ள ஒற்று, இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும் ஏழாம் வேற்றுமைத் தொகையிலும், இரட்டாவாம்.

உ—ம். நாடு + ஆண்டான் = நாடாண்டான்.
காடு + சென்றான் = காடுசென்றான்.
தறடு + எறிந்தான் = தறடெறிந்தான்.
கிணறு + இறங்கினான் = கிணறிறங்கினான்.

**168.** சில மென்றொடர்க் குற்றியலுகரம் வேற்றுமையில் வன்றொடர்க் குற்றியலுகரமாதலும், அதனோடு அம் சாரியை பெறுதலும் உண்டு.

உ—ம். இரும்பு + உலக்கை = இருப்புலக்கை.
கரும்பு + சாறு = கருப்பஞ்சாறு.

**169.** அன்று இன்று என்று என்னும் மென்றொடரும், நேற்று என்னும் வன்றொடரும் ஐகாரச்சாரியை பெறும்.

உ—ம். அன்று + கு = அன்றைக்கு.
இன்று + கு = இன்றைக்கு.
என்று + கு = என்றைக்கு.
நேற்று + கு = நேற்றைக்கு.

## திசைப்பெயர்.

**170.** கிழக்கு என்பது பிறபெயரோடு புணரும்போது, ஈற்றுயிர்மெய்யும் ககர வொற்றும் அகரவுயிருங் கெட்டு முதல் நீளும்.

உ—ம். கிழக்கு + கடல் = கீழ்கடல்.
கிழக்கு + பால் = கீழ்பால்.
கிழக்கு + திசை = கீழ்திசை.

**குறிப்பு.**—கீழ்த்திசை, கீழைச்சேரி, கீழைவீடு எனவும் வரும்.

**171.** தெற்கு என்பது மேற்கு கிழக்கு என்பவைகளோடும் பிறபெயரோடும் புணர்ந்தால் நிலைமொழியீற்று உயிர்மெய் கெட்டு, றகரம் னகரமாகத் திரியும்.

உ–ம். தெற்கு + மேற்கு = தென்மேற்கு.
தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு.
தெற்கு + நாடு = தென்னாடு.
தெற்கு + மொழி = தென்மொழி.

**172.** மேற்கு என்பது பிறபெயர்களோடு புணரும்போது நிலைமொழியீறு கெட்டு றகரம் லகரமாகத் திரியும்.

உ–ம் மேற்கு + புறம் = மேல்புறம்.
மேற்கு + ஊர் = மேலூர்.

குறிப்பு.—மேலைப்புலம், மேலைவயல் எனவும் வரும்.

**173.** வடக்கு என்பது, மேற்கு கிழக்கு என்னும் பெயர்களோடும் பிற பெயர்களோடும் புணரும்போது நிலைமொழி ஈற்று உயிர்மெய்யும் ககரவொற்றும் கெடும்.

உ–ம். வடக்கு + மேற்கு = வடமேற்கு.
வடக்கு + கிழக்கு = வடகிழக்கு.
வடக்கு + மலை = வடமலை.
வடக்கு + நாடு = வடநாடு.

## எண்ணுப்பெயர்.

**174.** ஒன்று என்னும் எண் வருமொழியோடு புணரும்போது ஈற்றுயிர்மெய்கெட்டு னகரம் ரகரமாகத்திரிய, வந்தது மெய்யாயின், உகரச்சாரியை பெறும்; உயிராயின் உகரம் பெறாது முதல் நீளும்.

உ–ம். ஒன்று + குதிரை = ஒருகுதிரை.
ஒன்று + நாள் = ஒருநாள்.
ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்.
ஒன்று + அம்பு = ஓரம்பு.

**175.** இரண்டு என்னும் எண் இகரமும் ரகர ஒற்றுமே நின்று மற்றைய எழுத்தெல்லாம் கெட, உகரம் பெறும்; உயிர்வரின் உகரம் பெறாது முதல் நீளும்.

உ–ம். இரண்டு + கழஞ்சு = இருகழஞ்சு.
இரண்டு + நாள் = இருநாள்.
இரண்டு + ஆயிரம் = ஈராயிரம்.
இரண்டு + உயிர் = ஈருயிர்.

**176.** மூன்று என்னும் எண் உயிர்வரின் ஈற்றுயிர்மெய்யும் னகரமுங் கெடுதலும், மெய்வரின் முதல்குறுகி ஈறு கெட்டு, னகரம் வருகிற மெய்யாகத் திரிதலுமாம்.

உ-ம். மூன்று + ஆயிரம் = மூவாயிரம்.
மூன்று + கலம் = முக்கலம்.
மூன்று + நாழி = முந்நாழி.
மூன்று + வட்டி = முவ்வட்டி.

**177.** மூன்று என்னும் எண், வகரம் வந்தால், முதல் குறுகாமையுமாம்.

உ-ம். மூன்று + வகை = மூவகை.

**178.** நான்கு என்னும் எண் ஈறுகெட்டு னகரம் லகரமாகத் திரியும்.

உ-ம். நான்கு + ஆயிரம் = நாலாயிரம்.
நான்கு + பத்து = நாற்பது.

**179.** ஐந்து என்னும் எண் மெய்வரின் ஈறுகெட்டு நகரம் வருகிற மெய்யாதலும், அதற்கினமாதலும், உயிர் வரின் கெடுதலுமாம்.

உ-ம். ஐந்து + மூன்று = ஐம்மூன்று.
ஐந்து + கலம் = ஐங்கலம்.
ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்.

**180.** ஆறு என்னும் எண் முதல் குறுகலும் இயல்புமாம்.

உ-ம். ஆறு + தொழில் = அறுதொழில்.
ஆறு + முகம் = அறுமுகம்.

**181.** உயிர்முதன்மொழிவரின் முதல் குறுகாது பொதுவிதி பெறும்.

உ-ம். ஆறு + ஆயிரம் = ஆறாயிரம்.

**182.** ஏழு என்னும் எண், உயிர்வரின் ஈற்றுகரம் கெடுதலும், மெய்வரின் முதல்குறுகலும், குறுகாமையுமாம்.

உ-ம். ஏழு + ஆயிரம் = ஏழாயிரம்.
ஏழு + கடல் = எழுகடல்; ஏழு கடல்.

**183.** எட்டு என்னும் எண், உயிரும் மெய்யும் முதலாகிய எண்ணுப்பெயர்கள் வந்தால், ஈறுகெட்டு, டகரம் ணகரமாம்; மற்றை மெய்ம்முதற்பெயரும் உயிர்முதற் பெயரும் வந்தால், வழக்கத்தில் இயல்பாம்.

உ-ம். எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம்.
எட்டு + நூறு = எண்ணூறு.
எட்டு + மாடு = எட்டுமாடு.
எட்டு + இலை = எட்டிலை.

**184.** ஒன்பது என்னும் எண்ணின்முன் எண்களல்லாத மற்ற உயிர்முதன்மொழிகளும் மெய்ம்முதன்மொழிகளும் வந்தால், பொதுவிதி பெறும்.

உ-ம். ஒன்பது + ஆடு = ஒன்பதாடு.
ஒன்பது + பாட்டு = ஒன்பதுபாட்டு.

**185.** ஒன்பது என்னும் எண்முன் பத்து என்பது வந்தால், பதுகெட்டு னகரம் ணகரமாகி முதலிலிருக்கும் ஒகரம் தகர ஒற்றிலேறி வருமொழியாகிய பத்து நூறாகத்திரியும்.

உ-ம். ஒன்பது + பத்து = தொண்ணூறு. (தொள்+நூறு= தொண்ணூறு என்று கொண்டு, தொளையுண்டநூறு, அதாவது பத்துக் குறைந்தநூறு என்று உரைப்பாரும் உளர்.)

**186.** ஒன்பது என்பதன்முன் நூறு வந்தால், பது கெட்டு னகரம் ளகரமாகி நிலைமொழி ஒகரம் தகரவொற்றிலேறி வருமொழி ஆயிரமாகத் திரியும்.

உ-ம். ஒன்பது + நூறு = தொள்ளாயிரம். இக்காலத்தில் இது தொளாயிரம் என வழங்குகிறது.

குறிப்பு.—தொள் + ஆயிரம் = தொள்ளாயிரம் என்றுகொண்டு முன்னர்த் தொண்ணூற்றுக்கு உரைத்ததுபோல உரைத்தலுமுண்டு.

**187.** பத்து என்னும் எண்முன் இரண்டு என்பது வந்தால், ஈற்றுயிர்மெய்கெட்டு, தகர ஒற்று னகரமாகும்.

உ-ம். பத்து + இரண்டு = பன்னிரண்டு.

**188.** பத்து என்பதன்முன் ஒன்று, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு இவ்வேழெண்களும் உம்மைத் தொகையிலும், ஆயிரம் என்பது பண்புத்தொகையிலும் வந்தால் ஈற்று உயிர்மெய் கெட்டு இன் சாரியை தோன்றும்.

உ-ம். பத்து + ஒன்று = பதினொன்று, பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து, பதினாறு, பதினேழு, பதினெட்டு, பதினாயிரம்.

**189.** இரண்டுமுதல் எட்டீறாகிய எண்களின்முன் பத்தென்னும் எண் வந்தால், பத்தின் இடையில் நின்ற தகரம் கெடும்.

உ—ம். இரண்டு + பத்து = இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது, எழுபது, எண்பது.

**190.** இருபதுமுதல் எண்பதீருகிய எண்களின்முன் ஒன்றுமுதல் ஒன்பது எண்ணும் அவற்றை அடுத்த பிற பெயரும் வந்தால், நிலைமொழியீற்றுக்கு அயலில் தகர ஒற்றுத் தோன்றும்.

உ—ம். இருபது + ஒன்று = இருபத்தொன்று; இருபது + இரண்டு = இருபத்திரண்டு; முப்பத்துநான்கு, அறுபத்தேழரை, எண்பத்தொன்பது பாய்.

**191.** இருபதுமுதல் எண்பதீருகிய எண்களின் முன்னும், ஒன்பது என்பதன் முன்னும் ஆயிரம் வந்தால், இடையில் இன் சாரியை தோன்றும்.

உ—ம். இருபது + ஆயிரம் = இருபதினுயிரம், அறுபதினுயிரம், எண்பதினுயிரம், ஒன்பதினுயிரம்.

**192.** ஒன்பது ஒழிந்த ஒன்றுமுதல் பத்தீருகிய ஒன்பது எண்களும் இரட்டித்து வந்தால், நிலைமொழியின் முதலெழுத்து அல்லாதவைகளெல்லாம் கெடும்; நிலைமொழிமுதலில் நிற்கும் நெடில் குறுகும்; வருமொழிமுதலில் உயிர்வரின், வகரம் தோன்றும்; மெய்வரின் வந்த மெய் மிகும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உ—ம். | ஒன்று | + | ஒன்று | = | ஒவ்வொன்று. |
| | இரண்டு | + | இரண்டு | = | இவ்விரண்டு. |
| | மூன்று | + | மூன்று | = | மும்மூன்று. |
| | நான்கு | + | நான்கு | = | நந்நான்கு. |
| | ஐந்து | + | ஐந்து | = | ஐவைந்து. |
| | ஆறு | + | ஆறு | = | அவ்வாறு. |
| | எழு | + | எழு | = | எவ்வேழு. |
| | எட்டு | + | எட்டு | = | எவ்வெட்டு. |
| | ஒன்பது | + | ஒன்பது | = | ஒவ்வொன்பது. |
| | பத்து | + | பத்து | = | பப்பத்து. |

**193.** உயர்ந்த எண்முன் தாழ்ந்த எண் வந்தால், ஏகாரச்சாரியை வரும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ—ம். | ஒன்று | + | கால் | = | ஒன்றேகால். |
| | இரண்டு | + | முக்கால் | = | இரண்டேமுக்கால். |

**194.** ஒன்றுமுதலாகிய எண்களின்முன் அரை என்னும் எண்வந்தால், அவை சாரியை பெறுவாம்.

உ-ம். ஒன்று + அரை = ஒன்றரை.
இரண்டு + அரை = இரண்டரை.
ஏழு + அரை = ஏழரை.

**195.** இரண்டு முதலிய எண்கள் பொதுவிதியால் முடிதலும் உண்டு.

உ-ம். இரண்டுகை, மூன்றுபடி, ஏழுகடல், எட்டுத்திசை.

வடமொழிச்சந்தி.

**196.** தமிழில் வந்து வழங்கும் வடமொழிச்சந்திகளுள் தீர்க்கசந்தியும், குணசந்தியும் முக்கியமானவை.

தீர்க்கசந்தி.

**197.** அ ஆ முன் அ ஆ வரின், இரண்டும் கெட, ஓர் ஆகாரம் தோன்றும்.

உ-ம். குண + அகுணம் = குணாகுணம்.
பரம + ஆனந்தம் = பரமானந்தம்.
கங்கா + அமிர்தம் = கங்காமிர்தம்.
கருணா + ஆகரன் = கருணாகரன்.

**198.** இ ஈ முன் இ ஈ வரின், இரண்டும் கெட, ஓர் ஈகாரம் தோன்றும்.

உ-ம். கரி + இந்திரன் = கரீந்திரன்.
கிரி + ஈசன் = கிரீசன்.
மஹீ + இந்திரன் = மஹீந்திரன்.
கௌரீ + ஈசன் = கௌரீசன்.

**199.** உ ஊ முன் உ ஊ வரின், இரண்டும் கெட ஓர் ஊகாரம் தோன்றும்.

உ-ம். குரு + உபதேசம் = குரூபதேசம்.
மேரு + ஊர்த்துவம் = மேரூர்த்துவம்.
ஸ்வயம்பூ + உபதேசம் = ஸ்வயம்பூபதேசம்.
ஸ்வயம்பூ + ஊர்ஜிதன் = ஸ்வயம்பூர்ஜிதன்.

குணசந்தி.

**200.** அ ஆ முன் இ ஈ வரின், இரண்டுங்கெட ஓர் ஏகாரம் தோன்றும்.

உ–ம். தேவ + இந்திரன் = தேவேந்திரன்.
தேவ + ஈசன் = தேவேசன்.
நரா + இந்திரன் = நரேந்திரன்.
ரமா + ஈசன் = ரமேசன்.

**201.** அ ஆ முன் உ ஊ வரின், இரண்டும் கெட ஓகாரம் தோன்றும்.

உ–ம். சூரிய + உதயம் = சூரியோதயம்.
ஞான + ஊர்ஜிதன் = ஞானோர்ஜிதன்.
கங்கா + உற்பத்தி = கங்கோற்பத்தி.
தயா + ஊர்ஜிதன் = தயோர்ஜிதன்.

பயிற்சி.

1. வருமொழி முதல் மெல்லெழுத்து எப்பொழுது மிகும்? ஒவ்வோர் எழுத்தும் மிக்கதற்கு இரண்டு இரண்டு உதாரணம் கூறுக.

2. தொடித்தோள், பைந்தொடிதோள், பாவைகூத்து, பாவைக் கூத்து. இங்ஙனம் இயல்பாயும் விகாரமாயும் வந்ததற்கு விதி கூறுக.

3. தாய் பெரியள்; சேய் பெரியன்; சாத்திகால்; பசுபதி: இவைகளில் உயிர்முன் வலி இயல்பானதற்கு விதி கூறுக.

4. காடு + ஆறு; காடு + அடைந்தான்; மா + தோப்பு; பலா + தோப்பு; மேற்கு + தெரு; வடக்கு + தெரு; வடக்கு + சிறகு; வாழை + பூ; தாழை + பூ; சேறு + நீர்; ஊறு + நீர்; இரண்டு + அரை; இரண்டு + முக்கால்: இவைகளைச் சேர்த்தெழுதிப் புணர்ச்சி விதி கூறுக.

5. குணசந்திக்கும் தீர்க்கசந்திக்கும் இரண்டு இரண்டு உதாரணம் எழுதுக.

# II. சொல்லதிகாரம்.

## 1. பெயரியல்.

### சொல்.

**1.** சொல்லென்பது இருதிணை ஐம்பாற்பொருள்களை மூன்றிடத்தும் வெளிப்படையாகவேனும் குறிப்பாக வேனும் உணர்த்துவதாம்.

### திணை.

**2.** திணை—உயர்திணை அஃறிணை என இரண்டு வகைப் படும்.

**குறிப்பு.**—திணை = குலம்; ஜாதி. உயர்வாகியதிணை உயர்திணை. உயர்வல்லாததிணை அஃறிணை; அல் + திணை = அஃறிணை.

**3.** மக்கள் தேவர் நரகர் உயர்திணை; மற்ற உயிருள் ளனவும் இல்லாதனவுமான எல்லாம் அஃறிணை.

உ–ம். மனிதன், இந்திரன், நரகன்—உயர்திணை.
விலங்கு, பறவை, மரம், கல்—அஃறிணை.

**4.** உயர்திணைக்குரிய இம்மூவகையாருடைய உடம் பையும் உயிரையும் வெவ்வேருகக் கூறுமிடத்து அவை யும் அஃறிணையாம்.

உ–ம். உடம்பு பருத்தது, உயிர் வந்தது.

**5.** கடவுளை உயர்திணையாகவும் அஃறிணையாகவும் சொல்லலாம்.

உ–ம். கடவுள் எங்கும் இருக்கிருர்; கடவுள் எங்கும் இருக்கிறது.

### பால்.

**6.** பாலாவது பகுப்பு அல்லது பிரிவு; அது இங்கே திணையின் பகுப்பு. அது ஆண்பால், பெண்பால், பலர் பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்து வகைப் படும்.

உ–ம். ஆண்பால் — இராமன், அரசன்.
பெண்பால் — சீதை, அரசி.
பலர்பால் — அரசர், அரசியர், மனிதர்.
ஒன்றன்பால் — அது, குழையது.
பலவின்பால் — அவை, குழையன.

குறிப்பு.—மைந்தர், ஆடவர் முதலிய ஆண் பன்மையும், பெண்டிர் மங்கையர் முதலிய பெண் பன்மையும், அவர் மனிதர் முதலிய அவ்விருவர் பன்மையும் பலர்பாலாகும்.

**7.** ஆண்பால், பெண்பால், பலர்பால் இவை மூன்றும் உயர்திணைக்குரியன. ஒன்றன்பால், பலவின்பால் இவ்விரண்டும் அஃறிணைக்குரியன.

**8.** ஆணும் பெண்ணுமல்லாத பேட்டை ஆண் தன்மை மிகுந்திருந்தால் ஆணாகவும், பெண் தன்மை மிகுந்திருந்தால் பெண்ணாகவும் சொல்லலாம். இவ்விருவகைப் பேட்டையும் அஃறிணையாக வழங்குவதும் உண்டு.

உ–ம். பேடி இவன்; பேடி இவள்; பேடி இது.

## எண்.

**9.** எண்ணென்பது பொருளின் அளவாம். அது ஒருமை, பன்மையென இரண்டு வகைப்படும்.

**10.** ஒன்றைக்குறிப்பது ஒருமை.

உ–ம். மனிதன், மங்கை, அது.

**11.** ஒன்றுக்கு மேற்பட்டவைகளைக் குறிப்பது பன்மை.

உ–ம். மனிதர், அவை.

**12.** ஆண்பாலும் பெண்பாலும் ஒன்றன்பாலும் ஒருமைக்குரியன; பலர்பாலும் பலவின்பாலும் பன்மைக்குரியன.

**13.** ஒருவன் ஒருத்தி என்கிற பெயரன்றி இரண்டு மூன்று முதலான எண்களின் அடியாக ஆண்பாற்பெயரும் பெண்பாற்பெயரும் வரமாட்டா.

குறிப்பு.—இரண்டு முதலிய எண்ணுப்பெயர்கள் பன்மையாதலால், ஒருமைக்குரிய ஆண்பாற்பெயரும் பெண்பாற்பெயரும் அவற்றின் அடியாகப் பிறவா.

**14.** ஒருவர் என்ற சொல் உயர்திணை ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவில் பன்மைவினையைக் கொள்ளும்.

உ–ம். ஆடவருள் ஒருவர் அறத்தின்வழி நிற்பர்.
பெண்டிருள் ஒருவர் கொழுநன்வழி நிற்பர்.

**15.** ஒருமையைக்காட்டும் 'து' விகுதியையாவது பன்மையைக்காட்டும் 'வை' விகுதியையாவது பெறாத அஃறி

ணைப்பெயர்கள் அத்திணைக்குரிய இரண்டு பால்களுக்கும் பொதுவாம். இவைகள் பால்பகா அஃறிணைப்பெயரென்றும் அஃறிணையியற்பெயரென்றும் சொல்லப்படும்.

*உ-ம். மரம் வளர்ந்தது; மரம் வளர்ந்தன.
குதிரை வந்தது; குதிரை வந்தன.

TB
P31
N4

## இடம்.

**16.** இடமாவது-ஸ்தானம். அது தன்மை முன்னிலை படர்க்கை என மூன்று வகைப்படும்.

**17.** பேசும் பொருள் தன்மை; பேசும் பொருளால் எதிர்முகமாக்கப்பட்டுக் கேட்கும் பொருள் முன்னிலை; பேசப்படும் பொருள் படர்க்கை.

**18.** தன்மைப்பெயரும் முன்னிலைப்பெயரும் ஒருமை பன்மைகளை மாத்திரம் காட்டும். படர்க்கைப்பெயர் திணை பால் அனைத்தையும் காட்டும்.

| உ-ம். | | ஒருமை. | | பன்மை. |
|---|---|---|---|---|
| தன்மை. | | நான், யான். | | நாம், யாம். |
| முன்னிலை. | | நீ. | | நீர். |
| படர்க்கை. | ஆண் பால். | அரசன். மனிதன். | பலர்பால். | அரசர். மங்கையர். அவர். |
| | பெண் பால் | சீதை. அரசி. | | |
| | ஒன்றன் பால். | அது. குழையது. | பலவின்பால். | அவை. குழையன. |

குறிப்பு.—நாம் என்பது நாங்கள் என்றும் யாம் என்பது யாங்கள் என்றும் நீர் என்பது நீங்கள் என்றும் வழங்கும்.

**19.** தன்மைப்பெயரும் முன்னிலைப்பெயரும் எல்லாம், தான், தாம் என்னும் பெயர்களும் இருதிணைக்கும் பொதுவாம்.

---

* முதலாவது இலக்கணத்தில் ஒன்றன்பாலுக்கு 'மரம்' என்றும், பலவின்பாலுக்கு 'மரங்கள்' என்றும் உதாரணங்கள் காட்டப்பட்டுள்ளன. பாலர்களுக்கு விளங்குதற்பொருட்டு அங்ஙனம் கூறப்பட்டன. உபாத்தியாயர்கள் மாணுக்கர்களுக்கு இதனை நன்கு விளக்க வேண்டும்.

84552

**20.** எல்லாம் என்னும் பன்மைப்பெயர் இருதிணைக்கும் மூன்று இடங்களுக்கும் பொதுவாய் வரும்.

உ-ம். நாமெல்லாம்; நீரெல்லாம்.
அவரெல்லாம்; அவையெல்லாம்.

பயிற்சி.

1. திணை என்பது என்ன?

2. பால் என்னும் சொல்லுக்குப் பொருள் என்ன?

3. உயர்திணை அஃறிணை இரண்டுக்கும் பொதுவாகவரும் பெயர்களுக்கு மூன்று உதாரணம் எழுதுக.

4. ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவான பெயர்கள் இரண்டு எழுதுக.

5. அஃறிணை இரண்டு பாலுக்கும் பொதுவான பெயர்கள் மூன்று எழுதுக.

6. அஃறிணையில் ஆண்பாலைக்குறிக்கும் பெயர்ச்சொற்கள் இரண்டும் பெண்பாலைக் குறிக்கும் பெயர்ச்சொற்கள் இரண்டும் கூறுக.

7. ஒருமைக்குரிய பால்கள் எவை?

8. திணை பால் அனைத்தையும் காட்டும் பெயர்கள் எவை?

9. அடியில் வருவனவற்றுள் ஆண்பாலுக்குப் பெண்பாலும், பெண்பாலுக்கு ஆண்பாலும் கூறுக:—

தோழன், பெருமான், தச்சன், தேவி, குணவான், இடையன், பொன்னி, காதலி, பேரன், வலைச்சி, முடவன், உத்தமி.

10. இரண்டுமுதலிய எண்களினடியாக ஆண்பாற்பெயரும் பெண்பாற்பெயரும் ஏன் பிறவா?

11. மூவிடங்களுக்கும் பொதுவான பெயர் எது?

12. அடியிற்கண்ட வாக்கியங்களிலுள்ள பெயர்ச்சொற்களுக்குத் திணை, பால், எண், இடம் இவற்றைக் குறிப்பிடுக:—

(1) இராமன் நல்ல பிள்ளை.
(2) காட்டில் மரங்கள் வளர்கின்றன.
(3) பசு பால் தரும்.
(4) நீங்கள் எங்கே போனீர்கள்?
(5) நான் புத்தகம் வாங்கினேன்.
(6) ஈசன் அருள் புரிவான்.

## சொல்லின் வகை.

**21.** சொல்—பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

**22.** தமிழுக்குரிய இந்நால்வகைச் சொற்கள் தவிர, திசைச்சொல் வடசொல் எனத் தமிழில் வந்து வழங்கும் சொற்கள் இருவகையாம்.

## திசைச் சொல்.

**23.** திசைச்சொல்லாவது, செந்தமிழ் வழங்காத பிற நாடுகளிலிருந்து வந்து செந்தமிழ் நாட்டில் வழங்கும் சொல்லாம்.

உ—ம். தாயைத் தள்ளை என்பது குட்டநாட்டுச்சொல். தந்தையை அச்சன் என்பது குடநாட்டுச்சொல். மாமரத்தைக் கொக்கு என்பது துளுவநாட்டுச்சொல். சொல்லுதலைச் செப்புதல் என்பது தெலுங்கநாட்டுச்சொல்.

குறிப்பு.—ரஸ்தா, காடிகானா, ரோட்டு, டிக்கெட்டு, பெஞ்சு, பீரோ, ஷாப் முதலாகப் பிறபாஷைகளிலிருந்து வந்து வழங்குவனவெல்லாம் திசைச்சொற்களே.

## வடசொல்.

**24.** வடசொல்லாவது ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொல்லாம். அது தற்சமம் தற்பவம் என இருவகைப்படும்.

குறிப்பு.—இவற்றின் விவரம் 20-ம் பக்கத்தில் காண்க.

## பெயர்ச்சொல்.

**25.** பெயர்ச்சொல்லாவது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பொருளையுணர்த்திக் காலத்தைக் காட்டாமல் வேற்றுமை உருபுகளை ஏற்கும் சொல்லாம்.

உ—ம். பொருட்பெயர் — மனிதன், மாடு, பலகை, கல்.
இடப்பெயர் — சிதம்பரம், ஆகாயம், வழி.
காலப்பெயர் — வேனில், ஐப்பசி, இரவு, பகல்.
சினைப்பெயர் — கை, வேர், கிளை, கண்.
பண்புப்பெயர் — செம்மை, சிறுமை, அன்பு, அழகு.
தொழிற்பெயர் — நடத்தல், உண்ணல்.

குறிப்பு.—வினையாலணையும்பெயர்களும் சில தொழிற்பெயர்களும் காலத்தைக் காட்டும். (17-ம் பக்கம் பார்க்க)

**26.** வினையாலணையும்பெயராவது, வினைமுற்று பெயர்த் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்று வருவதாம்.

உ-ம். வந்தானை, வந்தவனை.

**27.** நடமுதலிய பகுதிகள் தல் அல் முதலிய விகுதிகளைப்பெற்றுத் தொழிலின் பெயரை உணர்த்தினால், அவை தொழிற்பெயராம்.

**28.** பெயர்கள் இடுகுறியென்றும் காரணமென்றும் இருவகைப்படும்.

**29.** இடுகுறிப்பெயராவது ஒரு காரணமும் பற்ருது ஒரு பொருளை உணர்த்தும் பெயராம்.

உ-ம். மரம், பனை.

**30.** காரணப்பெயராவது யாதேனும் ஒரு காரணம் பற்றி ஒரு பொருளை உணர்த்தும் பெயராம்.

உ-ம். கணக்கன், அணி, வளை.

**31.** அப்பெயர்கள் இயற்பெயரென்றும் ஆகுபெயரென்றும் இருவகைப்படும்.

**32.** இயற்பெயராவது ஒரு பொருளுக்கு இயல்பாயுள்ள பெயராம்.

உ-ம். பனை, புலி.

**33.** ஆகுபெயராவது ஒருபொருளின் இயற்பெயர், அப்பொருளோடு சம்பந்தமுடைய வேருெரு பொருளுக்குப் பழையவழியால் ஆகிவருவதாம்.

குறிப்பு.—ஒன்றன்பெயர் மற்ருென்றுக்கு ஆகிவருதலால், அது ஆகுபெயரெனப்பட்டது.

**34.** அவ்வாகுபெயர்—பொருளாகுபெயர், இடவாகுபெயர், காலவாகுபெயர், சினையாகுபெயர், குணவாகுபெயர், தொழிலாகுபெயர், அளவையாகுபெயர், சொல்லாகுபெயர், தானியாகுபெயர், கருவியாகுபெயர், காரியவாகுபெயர், கர்த்தாவாகுபெயர், உவமையாகுபெயர் எனப் பலவகைப்படும்.

குறிப்பு.—பொருளாகுபெயர் முதலாகுபெயரென்றும், கருவியாகுபெயர் காரணவாகுபெயரென்றும், குணவாகுபெயர் பண்பாகு பெயரென்றும் சொல்லவும்படும்.

உ—ம்.

1. தாமரைபோலும் முகம்; இங்கே தாமரையென்னும் முதற் பொருளின் பெயர் அதன் சினையாகிய மலருக்காதலால் பொருளாகு பெயர்.

2. ஊரடங்கிற்று; இங்கே ஊரென்னும் இடப்பெயர் அங்கிருக்கிற மனிதருக்காதலால் இடவாகுபெயர்.

3. காரறுத்தது; இங்கே காரென்னும் மழைக்காலப்பெயர் அக்காலத்தில் விளையும் பயிருக்காதலால் காலவாகுபெயர்.

4. வெற்றிலை நட்டான்; இங்கே வெற்றிலையென்னும் சினைப் பெயர் அதன் முதலாகிய கொடிக்காதலால் சினையாகுபெயர்.

5. நீலஞ்சூடினாள்; இங்கே நீலமென்னும் நிறக்குணப்பெயர் அதனையுடைய குவளைமலருக்காதலால் குணவாகுபெயர்.

6. வற்றலோடு உண்டான்; இங்கே வற்றலென்னும் தொழிற் பெயர் அதனைப்பொருந்திய உணவிற்காதலால் தொழிலாகுபெயர்.

7. (*a*) காலாலே நடந்தான்; இங்கே காலென்னும் எண்ணலளவைப்பெயர் அவ்வளவைக்கொண்ட உறுப்பிற்காதலால் எண்ணலளவையாகுபெயர்.

(*b*) இரண்டுவீசை தந்தான்; இங்கே வீசையென்னும் எடுத்தலளவைப்பெயர் அவ்வளவைக்கொண்ட பொருட்காதலால் எடுத்தலளவையாகுபெயர்.

(*c*) நாழியுடைந்தது; இங்கே நாழியென்னும் முகத்தலளவைப்பெயர் அவ்வளவைக் கருவிக்காதலால் முகத்தலளவையாகு பெயர்.

(*d*) ஒரு முழம் தந்தான்; இங்கே முழம் என்னும் நீட்டலளவைப்பெயர் அவ்வளவைக்கொண்ட பொருளுக்காதலால் நீட்டலளவையாகுபெயர்.

8. அவன் சொல்லை அறிந்தேன்; இங்கே சொல்லென்னும் பெயர் அதன்பொருளுக்காதலால் சொல்லாகுபெயர்.

9. விளக்கு முறிந்தது; இங்கே விளக்கென்னும் தானியின் பெயர் அதற்குத் தானமாகிய தண்டிற்காதலால் தானியாகுபெயர்.

குறிப்பு.—தானி = தானத்திலுள்ளது; தானம் = இடம்.

10. திருவாசகம் படித்தான்; இங்கே வாசகமென்னும் கருவிப் பெயர் அதன் காரியமாகிய ஒரு நூலுக்காதலால் கருவியாகுபெயர்.

11. அலங்காரம் கற்றான்; இங்கே அலங்காரமென்னும் காரியத்தின்பெயர் அதனை உணர்த்துதற்குக் கருவியாகிய நூலுக்காதலால் காரியவாகுபெயர்.

12. திருவள்ளுவர் படித்தான்; இங்கே திருவள்ளுவரென்னும் கர்த்தாவின்பெயர் அவராற் செய்யப்பட்ட நூலுக்காதலால் கருத்தாவாகுபெயர்.

13. பாவை வந்தாள்; இங்கே பாவை என்னும் உவமையின் பெயர் அதனை உவமையாகக்கொண்ட பெண்ணுக்காதலால் உவமையாகுபெயர்.

## பயிற்சி.

1. திசைச்சொல்லுக்கும் வடசொல்லுக்கும் நான்கு நான்கு உதாரணங்கள் கூறுக.
2. காரணப்பெயருக்கு நான்கு உதாரணம் கூறுக.
3. சினையாகுபெயருக்கு இரண்டு உதாரணம் கூறுக.
4. சினையாகுபெயருக்கு எதிரான ஆகுபெயர் எது?
5. தானியாகுபெயருக்கு இரண்டு உதாரணம் கூறுக. அதற்கு எதிரான ஆகுபெயர் எது? அதற்கும் இரண்டு உதாரணம் கூறுக.
6. காரணவாகுபெயருக்கு மூன்று உதாரணம் எழுதுக.
7. காரணவாகுபெயருக்கு எதிரான ஆகுபெயர் எது? அதற்கு இரண்டு உதாரணம் கூறுக.
8. வினையாலணையும்பெயருக்கும் தொழிற்பெயருக்கும் வேறுபாடு என்ன?
9. திசைச்சொல்லுக்கு மூன்று உதாரணம் கூறுக.
10. காலம்காட்டும் பெயர்ச்சொல் எது? இரண்டு உதாரணம் எழுதுக.
11. இயற்பெயருக்கு நான்கு உதாரணம் கூறுக.
12. திருவாய்மொழி படித்தான். ஒருசேர் கொடு.
இலக்கணம் வாங்கினேன். காளை வந்தான்.
இரண்டு கொடுத்தான். உலகம் மகிழும்.

இவைகளில் வந்துள்ளவை இன்ன இன்ன ஆகுபெயர்களென்று குறிப்பிடுக.

## வேற்றுமை.

**35.** பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமையாம். அது எட்டு வகைப்படும்.

அவையாவன:—முதல்வேற்றுமை, இரண்டாம்வேற்றுமை, மூன்றாம்வேற்றுமை, நான்காம்வேற்றுமை, ஐந்தாம்வேற்றுமை, ஆறாம்வேற்றுமை, ஏழாம்வேற்றுமை, எட்டாம்வேற்றுமை என்பனவாம்.

**36.** முதல்வேற்றுமையின் உருபு திரிபில்லாமலிருக்கிற பெயரேயாம். இது எழுவாய்வேற்றுமை எனவும் சொல்லப்படும். வினையையும் பெயரையும் வினாவையும் கொள்ளவருதல் இதன் பொருளாம்.

உ–ம். கந்தன் வந்தான். இராமன் அரசன். இவன் யார்?

**37.** இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ என்பதாம். அதன்பொருள் ஆக்கல், அழித்தல், அடைதல், நீக்கல், ஒத்தல், உடைமை முதலியனவாம். இதனைச் செயப்படுபொருள் வேற்றுமையென்றுஞ் சொல்வதுண்டு.

உ–ம். வீட்டைக் கட்டினான் — ஆக்கப்படுபொருள்.
கோட்டையை இடித்தான் — அழிக்கப்படுபொருள்.
செல்வத்தைப் பெற்றான் — அடையப்படுபொருள்.
சினத்தைவிட்டான் — நீக்கப்படுபொருள்.
யானையைப்போன்றான் — ஒக்கப்படுபொருள்.
பொன்னை உடையான் — உடைமைப்பொருள்.

**38.** மூன்றாம் வேற்றுமையின் உருபு ஆல், ஆன், ஒடு, ஓடு என்பனவாம். அவைகளின்பொருள், கருவிப்பொருளும் கருத்தாப்பொருளும் உடனிகழ்ச்சிப் பொருளுமாம். ஆல், ஆன் உருபுகள் கருவி கருத்தாப்பொருள்களிலும், ஒடு, ஓடு உருபுகள் உடனிகழ்ச்சிப்பொருளிலும் வரும். இது கருவி வேற்றுமை என்றும் சொல்லப்படும்.

குறிப்பு.—கருவி எனினும் காரணமெனினும் ஒக்கும். கருத்தா எனினும் செய்பவனெனினும் வினைமுதலெனினும் ஒக்கும்.

**39.** கருவி, முதற்கருவி, துணைக்கருவி என இருவகைப்படும்.

**40.** முதற்கருவியாவது செயப்படுபொருளோடு ஒற்றுமையுடையது.

குறிப்பு—அதாவது தானே செயப்படுபொருளாகி அதினின்றும் வேறுபடாதது.

உ–ம். மண்ணாற்செய்த குடம்.

**41.** துணைக்கருவியாவது முதற்கருவி காரியப்படுமளவும் அதற்குத் துணையாய் உடன் நிகழ்வது.

உ—ம். தண்டசக்கரங்களால் ஆகிய குடம்.

**42.** கருத்தா, இயற்றுதற்கருத்தா, ஏவுதற்கருத்தா என இருவகைப்படும்.

**43.** இயற்றுதற்கருத்தாவாவது கருவியைத் தொழிற்படுத்துவது.

உ—ம். தச்சனாலாகிய கோயில்.

**44.** ஏவுதற்கருத்தாவாவது இயற்றுதற்கருத்தாவின் தொழிலை உண்டாக்கும் தொழிலையுடையது.

உ—ம். அரசனாலாகிய கோயில்.

குறிப்பு.—முதல்வேற்றுமைக்கருத்தா செய்வினையிலும் மூன்றாம் வேற்றுமைக்கருத்தா செயப்பாட்டுவினையிலும் வரும்.

**45.** உடனிகழ்ச்சிப் பொருளாவது வினைகொண்டு முடியும் பொருளின் தொழிலைத் தன்னிடத்தும் உடனிகழ்வதாக உடைய பொருளாம்.

உ—ம். தகப்பனோடு மகன் வந்தான். இதற்குத் தகப்பனும் வந்தான்; மகனும் வந்தான் என்பது பொருள்.

**46**. நான்காம் வேற்றுமையின் உருபு கு என்பதாம். அதன்பொருள், கொடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை முதலியவற்றில் இதற்கு இது வென்பதாம்.

உ—ம். யாசகருக்குப் பொருள் கொடுத்தான் — கொடை.
பாம்புக்குப் பகை கருடன் — பகை.
பாண்டவர்க்கு நண்பன் கண்ணன் — நேர்ச்சி.
அரசனுக்குரியது செங்கோல் — தகுதி.
கடுக்கனுக்குப் பொன் — அதுவாதல்.
கூலிக்கு வேலை செய்தான் — பொருட்டு.
இராமனுக்குத் தம்பி பரதன் — முறை.

**47.** ஐந்தாம் வேற்றுமையின் உருபு இன், இல் என்பனவாம். அவை, நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்னும் பொருள்களில் வரும்.

உ—ம். மலையின்வீழருவி — நீங்கல்.
தாயிற் சிறந்த தெய்வமில்லை — ஒப்பு.
சீகாழியின் வடக்குச் சிதம்பரம் — எல்லை.
கல்வியிற் பெரியன் கம்பன் — ஏது.

**48.** ஆறும் வேற்றுமையின் உருபு அது, உடைய என்பனவாம். அவற்றின்பொருள் கிழமைப் பொருளாம்.

குறிப்பு.—கிழமை = சம்பந்தம்.

**49.** கிழமை—தற்கிழமை, பிறிதின்கிழமை என இரண்டு வகைப்படும்,

**50.** தற்கிழமையாவது தன்னோடு ஒற்றுமையுடைய பொருளின் சம்பந்தம்.

**51.** பிறிதின்கிழமையாவது தன்னின் வேறாகிய பொருளின் சம்பந்தம்.

**52.** ஆறும்வேற்றுமைத்தற்கிழமை பண்பு, உறுப்பு, ஒன்றன்கூட்டம், பலவினீட்டம், திரிபினாக்கம் எனஐந்து வகைப்படும்.

உ–ம். பாலினது வெண்மை —பண்புத்தற்கிழமை.
அரசனது வரவு —தொழில்தற்கிழமை.
தனது கை —உறுப்புத்தற்கிழமை.
மனிதரது கூட்டம் —ஒன்றன்கூட்டத்தற்கிழமை.
படைகளினது தொகுதி—பலவினீட்டத்தற்கிழமை.
நெல்லினது பொரி —திரிபினாக்கத்தற்கிழமை.

**53.** ஆறும் வேற்றுமைப் பிறிதின்கிழமை, பொருள், இடம், காலம் என மூன்றுவகைப்படும்.

உ–ம். இராமனது பசு —பொருட்பிறிதின்கிழமை
கந்தனது வீடு —இடப்பிறிதின்கிழமை.
கண்ணனது திருநாள்—காலப்பிறிதின்கிழமை.

**54.** ஏழாம் வேற்றுமையின் உருபு, இல், கண், இடம் முதலியனவாம். அவற்றின்பொருள் இடப்பொருளாம். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறும் தற்கிழமையிலும் பிறிதின்கிழமையிலும் இடமாய் நிற்கும். இது இடவேற்றுமை என்றும் பெயர் பெறும்.

உ–ம். மணியில் ஒளி —பொருள்தற்கிழமை.
மரத்தில் பறவை —பொருள்பிறிதின்கிழமை.
ஊரில் வீடு —இடத்தற்கிழமை.
வீட்டில் நாய் —இடப்பிறிதின்கிழமை.
வாரத்தில் ஒருநாள் —காலத்தற்கிழமை.
சித்திரையில் தேரோட்டம்—காலப்பிறிதின்கிழமை.
விரலில் நகம் —சினைத்தற்கிழமை.

விரலில் மோதிரம் —சினைப்பிறிதின்கிழமை.
இளமையில் அழகு —குணத்தற்கிழமை.
இளமையிற் செல்வம் —குணப்பிறிதின்கிழமை.
ஆட்டத்தில் அபிநயம் —தொழில்தற்கிழமை.
ஆட்டத்தில் பாட்டு —தொழிற்பிறிதின்கிழமை.

**55.** எட்டாம்வேற்றுமையின் உருபுகள், ஈறுதிரிதல், ஈறுகெடுதல், ஈறுமிகுதல், ஈற்றயலெழுத்துத்திரிதல், இயல்பாதல்முதலியன. பொருள் படர்க்கைப்பொருளை முன்னிலையாக அழைத்தலாம். இதற்கு விளிவேற்றுமை என்றும் பெயர்.

உ—ம். அம்மை —அம்மா; ஈறுதிரிதல்.
அரசன் —அரச; ஈறுகெடுதல்.
மகன் —மகனே; மிகுதல்.
மக்கள் —மக்காள்; ஈற்றயலெழுத்துத்திரிதல்.
தங்கை கேள்—இயல்பு.

**56.** பொதுப்பெயரின் ஈற்றிலுள்ள ஐகாரம், ஆ என்றும் ஆய் என்றும் திரியும்.

உ—ம். அன்னை—அன்னா; அன்னாய்.

**57.** சில இடங்களில் இவ்வைகாரம் ஏகாரமாகவும் திரியும்.

உ—ம். அன்னை—அன்னே.

**58.** உயர்திணை அஃறிணைப்பெயர்களின் ஈற்று ஐகாரம், ஆய் எனத் திரியும்.

உ—ம். நங்கை—நங்காய்; நாரை—நாராய்.

**59.** னகரவீற்றுப்பெயரில், ஈறுகெடுதலும் ஈறுகெட்டு அயல்நீளுதலும் அதனோடு ஓகாரம் மிகுதலும் ஏகாரம் மிகுதலும் இயல்பாதலும் அதனோடு ஏகாரம் மிகுதலும் ஈறுகெட்டு அயலகரம் ஏகாரமாதலும் விளியுருபாம்.

உ—ம். அப்ப, அப்பா, அப்பாவோ, ஐயாவே, அப்பன், அப்பனே, ஐயே.

**60.** அண்மைவிளியில் இயல்பும் ஈறுகெடுதலும், சேய்மைவிளியில் ஈறுநீளுதலும் ஈறுகெட்டு அயல்நீளுதலும் ஆகும்.

குறிப்பு.—அண்மை = சமீபம்; சேய்மை = தூரம்.

உ—ம்.

அண்மைவிளி. { தம்பி—இயல்பு.
ஐய —ஈறுகெடுதல்.

சேய்மைவிளி. { தம்பீ — ஈறுநீண்டது.
அப்பா — ஈறுகெட்டு அயல்நீண்டது.

**61.** தன்மைப்பெயரும் முன்னிலைப்பெயரும் சுட்டுப் பெயரும் வினாப்பெயரும், தான், தாம் என்னும் பெயர் களும் விளி ஏலாவாம்.

**62.** நான் என்னும் சொல் முதல்வேற்றுமையில்மட் டும் வரும்.

**63.** வேற்றுமை உருபு ஏற்கும்போது யான், யாம், நாம் என்னும் தன்மைப்பெயர்கள் என், எம், நம் என வும், நீ, நீர் என்னும் முன்னிலைப்பெயர்கள் நின், உன், நும், உம் எனவும், தான், தாம் என்னும் படர்க்கைப் பெயர்கள் தன், தம் எனவும் திரிந்துவரும் இவை நான் காம் வேற்றுமை உருபு ஏற்கும்போது அகரச்சாரியை பெறும். இவற்றிலுள்ள ஒற்று, நான்காம் வேற்றுமை யிலும் ஆறாம் வேற்றுமையிலும் இரட்டாவாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| **முதல் வேற்றுமை.** | | யான். | யாம். | நாம். |
| **இரண்டாம்** | ,, | என்னை. | எம்மை. | நம்மை. |
| **மூன்றாம்** | ,, | என்னால். | எம்மால். | நம்மால். |
| **நான்காம்** | ,, | எனக்கு. | எமக்கு. | நமக்கு. |
| **ஐந்தாம்** | ,, | என்னின். | எம்மின். | நம்மின். |
| **ஆறாம்** | ,, | எனது. | எமது. | நமது. |
| **ஏழாம்** | ,, | என்னில். | எம்மில். | நம்மில். |
| **விளி** | ,, | —— | —— | —— |

| | | | |
|---|---|---|---|
| **முதல் வேற்றுமை.** | | நீ. | நீர். |
| **இரண்டாம்** | ,, | உன்னை, நின்னை. | உம்மை, நும்மை. |
| **மூன்றாம்** | ,, | உன்னால், நின்னால். | உம்மால், நும்மால். |
| **நான்காம்** | ,, | உனக்கு, நினக்கு. | உமக்கு, நுமக்கு. |
| **ஐந்தாம்** | ,, | உன்னின், நின்னின். | உம்மின், நும்மின். |
| **ஆறாம்** | ,, | உனது, நினது. | உமது, நுமது |
| **ஏழாம்** | ,, | உன்னில், நின்னில். | உம்மில், நும்மில் |
| **விளி** | ,, | —— | —— |

| | | | |
|---|---|---|---|
| **முதல் வேற்றுமை.** | | தான். | தாம். |
| **இரண்டாம்** | ,, | தன்னை. | தம்மை. |
| **மூன்றாம்** | ,, | தன்னால். | தம்மால். |
| **நான்காம்** | ,, | தனக்கு. | தமக்கு. |
| **ஐந்தாம்** | ,, | தன்னின். | தம்மின். |
| **ஆறாம்** | ,, | தனது. | தமது. |

| | | |
|---|---|---|
| ஏழாம் வேற்றுமை. | தன்னில். | தம்மில். |
| விளி ,, | ——— | ——— |

**64.** மகரவீற்றுப்பெயர்கள் உருபு ஏற்கும்போது, மகரம் கெட, அத்து என்னும் சாரியை பெறும். பெறுமிடத்து, சாரியைமுதல் அகரம் கெடும்.

உ—ம். மரம் + ஐ = மர + அத்து + ஐ = மரத்தை.

**65.** எல்லாம் என்னும் பெயர் வேற்றுமையுருபு ஏற்ருல், ஈற்றிலுள்ள மகரங்கெட, அற்று என்னும் சாரியையும் உருபும் மேல் உம்மும் பெறும்.

உ—ம. எல்லாம் + ஐ = எல்லா + அற்று + ஐ + உம் = எல்லாவற்றையும்.

**66.** பல சில என்பவை வேற்றுமையுருபு ஏற்கும்போது அற்றுச்சாரியை பெறும்.

உ—ம். பலவற்றை; சிலவற்றை.

**67.** டகர றகர ஈறுகளையுடைய நெடிற்றொடர்க்குற்றியலுகரமும், உயிர்த்தொடர்க்குற்றியலுகரமும் வேற்றுமையுருபு ஏற்கும்போது அக்குற்றியலுகரம் ஏறிய மெய்கள் இரட்டும்.

உ—ம். நாடு — நாட்டை. ஆறு — ஆற்றை.
உதடு — உதட்டை. வயிறு — வயிற்றை.

**68.** எல்லைப்பொருளில்வரும் இன் என்னும் ஐந்தாம் வேற்றுமைஉருபும் ஆரும் வேற்றுமைஉருபும் பெயர்ச்சொல்லைக்கொண்டு முடியும்.

உ—ம். சென்னையின் வடக்குத் திருவொற்றியூர், மரத்தினது கிளை.

**69.** மற்ற வேற்றுமையுருபுகள் வினைச்சொல்லைக் கொண்டு முடியும். விளிப்பெயர் ஏவல்வினையைக்கொண்டு முடியும்.

உ—ம். குதிரை ஓடிற்று. பட்டணத்தினின்று வந்தான்.
பழத்தைத் தின்றுன். வீட்டில் இருக்கிறுன்.
பிரம்பால் அடித்தான். அண்ணு! வா.
அவனுக்குக் கொடுத்தான்.

**70.** நான்காம் வேற்றுமைஉருபும் ஏழாம் வேற்றுமைஉருபும் வினையோடு கூடிவரும் பெயர்ச்சொல்லைக் கொண்டும் முடியும்.

உ—ம். நோய்க்குக் கொடுக்கும் மருந்து; பள்ளிக்கூடத்தில் இருக்கிற பிள்ளைகள்.

## காரகம்.

**71.** ஆறும் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் ஒழிந்த மற்றை வேற்றுமைகள் வினைகொண்டு முடியிற் காரகம் என்னப்படும்.

உ—ம். அரசன்வந்தான் —முதல்வேற்றுமைக்காரகம்.
வீட்டைக்கட்டினான் —இரண்டாம்வேற்றுமைக்காரகம்.
வாளால்வெட்டினான் —மூன்றாம்வேற்றுமைக்காரகம்.
அரசனுக்குக்கொடுத்தான் —நான்காம்வேற்றுமைக்காரகம்.
மலையினின்றிறங்கினான் —ஐந்தாம்வேற்றுமைக்காரகம்.
நாட்டின்கட்சென்றான் —ஏழாம்வேற்றுமைக்காரகம்.

## பயிற்சி.

1. எந்த எந்த வேற்றுமைக்கு உவமைப்பொருள் உரியது?

2. பொருள் பெற்றான்; ஊர் சென்றான்; அத்தைமகன்; தேரேறினான். இவற்றிலுள்ள பெயர்கள் இன்ன வேற்றுமையில் இன்ன பொருளில் வந்தனவென்று கூறுக.

3. முதல்வேற்றுமைக் கருத்தாவுக்கும் மூன்றாம்வேற்றுமைக் கருத்தாவுக்கும் வேறுபாடு என்ன?

4. பொற்குடம் என்பதற்கு என்ன என்ன பொருள் சொல்லலாம்? அப்போது என்ன என்ன வேற்றுமையாகும்?

5. ஒன்றன் கூட்டத்திற்கும் பலவினீட்டத்திற்கும் வேறுபாடு என்ன? விளக்கி எழுதுக.

6. சினை, தற்கிழமையாகவும் பிறிதின்கிழமையாகவும் இடமானதற்கு இரண்டிரண்டு உதாரணம் கூறுக.

7. 'ஆட்டத்தில் அபிநயம்' என்பது எப்படி தற்கிழமையாகும்?

8. 'ஆட்டத்தில் பாட்டு' என்பது எப்படி பிறிதின்கிழமையாகும்?

9. தன்மைக்கும் முன்னிலைக்கும் எட்டாம் வேற்றுமை இல்லையென்பது எதனால் விளங்கும்?

10. விளியுருபுகளில், இயல்பும் விகாரமும் எப்பொழுது எப்பொழுது வரும்?

11. அன்னே! ஐயே! என்பவை என்ன என்ன வேறுபாடுகள் அடைந்து விளிவேற்றுமை ஆயின?

12. வேற்றுமையுருபு ஏற்கும்போது இரண்டுவிதமாகத் திரியும் பெயர்கள் இரண்டு கூறுக.

13. அகரவீற்றுச் சொற்கள் வேற்றுமையுருபு ஏற்கும்போது எவ்வாறாகும்?

14. பெயரைக்கொண்டு முடியும் வேற்றுமைகள் எவை?

15. காரகம் என்றால் என்ன?

---

## 2. வினையியல்.

**72.** வினைச்சொல்லாவது ஒரு பொருளின் தொழிலை உணர்த்தும் சொல்லாம்.

**73.** அது, செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் என்னும் ஆறு பொருள்களையும் உணர்த்தும்.

குறிப்பு.—செயப்படுபொருள் குன்றாவினை மாத்திரம் இந்த ஆறு பொருள்களையும் உணர்த்தும்.

உ-ம். வனைந்தான் — என்றபோது குயவனாகிய செய்பவனும், மண்ணாகிய முதற்கருவியும், தண்டமும் திரிகையுமாகிய துணைக் கருவிகளும், வனைதற்கு ஆதாரமான இடமும், வனைதலாகிய செயலும், இறந்தகாலமும், குடமாகிய செயப்படுபொருளும் ஆகிய இவ்வாறினையும் காட்டியது உணர்க.

**74.** செயப்படுபொருள் குன்றியவினையாயின் செயப்படுபொருள் ஒழிந்த மற்ற ஐந்தையே காட்டும்.

உ-ம். வந்தான்—இதுசெயப்படுபொருள் ஒழிந்த மற்ற ஐந்தினையும் தருதல் காண்க.

**75.** முற்று வினைச்சொல்லில் பகுதியாற் செயலும், இடைநிலை முதலியவற்றால் காலமும், விகுதியாற் செய்பவனும், எச்சவினைச்சொல்லில் பகுதியால் செயலும், இடைநிலை முதலியவற்றால் காலமும் வெளிப்படையாகவும் மற்றவை குறிப்பாகவும் வரும்.

உ-ம். உண்டான், உண்ட, உண்டு.

குறிப்பு. — 'இடைநிலை முதலியவற்றால்' என்றமையால் சில வினைச்சொற்களில் வேறு இடைநிலைகள் காலங்காட்டுதலும், பகுதி இரட்டித்துக் காலங்காட்டுதலும், விகுதி காலங்காட்டுதலும் கொள்க.

உ-ம். 19-ம் பக்கத்தில் காண்க.

### வினையின் பாகுபாடுகள்.

**76.** வினை, தெரிநிலை குறிப்பு என இரண்டு வகைப்படும்.

**77.** தெரிநிலை வினையாவது செயலும் காலமும் வெளிப்படையாகத் தெரியநிற்பது.

உ-ம். வந்தான்.

**78.** குறிப்பு வினையாவது பெயர்ப்பகுபதங்கள் வினைத்தன்மைப்பட்டுக் காலத்தைக் குறிப்பாக உணர்த்துவதாம்.

உ-ம். அரசன் பெரியன். (14-ம் பக்கம் பார்க்க.)

**79.** தெரிநிலைவினை, தன்வினை பிறவினையென்றும், செயப்படுபொருள் குன்றியவினை செயப்படுபொருள் குன்றாவினையென்றும், செய்வினை செயப்பாட்டுவினையென்றும் பகுக்கப்படும்.

**80.** மேற்கூறிய தன்வினை முதலியவற்றில் ஒவ்வொன்றும் முதனிலை, தொழிற்பெயர், வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என ஐந்து வகைப்படும்.

குறிப்பு. — ஆகையால், தெரிநிலைவினைவிகற்பம் முப்பதாதல் காண்க.

உ-ம்.

| | முதனிலை. | தொழிற்பெயர். | வினைமுற்று. | பெயரெச்சம். | வினையெச்சம். |
|---|---|---|---|---|---|
| தன்வினை. | உண். | உண்ணல். | உண்டான். | உண்ட. | உண்டு. |
| பிறவினை. | உண்பி. | உண்பித்தல். | உண்பித்தான். | உண்பித்த. | உண்பித்து. |
| செயப்படு பொருள் குன்றிய வினை. | நட. | நடத்தல். | நடந்தான். | நடந்த. | நடந்து. |
| செயப்படு பொருள் குன்றா வினை. | உண். | உண்ணல். | உண்டான். | உண்ட. | உண்டு. |
| செய்வினை. | உண். | உண்ணல். | உண்டான். | உண்ட. | உண்டு. |
| செயப்பாட்டு வினை. | உண்ணப்படு. | உண்ணப்படல். | உண்ணப்பட்டது. | உண்ணப்பட்ட. | உண்ணப்பட்டு. |

**81.** முதனிலை முதலாக மேற்சொல்லிய வினையின் பகுப்பு ஐந்தனுள் முதனிலை ஒழிந்த மற்ற நான்கும் தனித்தனியே உடன்பாடு எதிர்மறை என இரண்டிரண்டு வகைப்படும்.

குறிப்பு. — உடன்பாட்டுத்தெரிநிலை இருபத்துநான்கும் எதிர்மறைத்தெரிநிலை இருபத்துநான்குமாக நாற்பத்தெட்டாதல் காண்க. உடன்பாட்டு வினைகளை மேலேகாட்டிய கட்டத்தில் காண்க.

உ—ம்.

| எதிர்மறை. | தொழிற் பெயர். | வினை முற்று. | பெய ரெச்சம். | வினை யெச்சம். |
|---|---|---|---|---|
| தன்வினை. | உண் ணாமை. | உண்ணான். | உண்ணாத. | உண்ணாமல். |
| பிறவினை. | உண்பி யாமை. | உண்பி யான். | உண்பியாத. | உண்பி யாமல். |
| செயப்படுபொருள் குன்றியவினை. | நடவாமை. | நடவான். | நடவாத. | நடவாது. |
| செயப்படுபொருள் குன்றாவினை. | உண் ணாமை. | உண்ணான். | உண்ணாத. | உண்ணாமல். |
| செய்வினை. | உண் ணாமை. | உண்ணான். | உண்ணாத. | உண்ணாமல். |
| செயப்பாட்டுவினை. | உண்ணப் படாமை. | உண்ணப் படான். | உண்ணப் படாத. | உண்ணப் படாமல். |

**82.** உடன்பாட்டுவினையாவது தொழில் நிகழ்ச்சியை உணர்த்தும் வினையாம்.

**83.** எதிர்மறைவினையாவது தொழில் நிகழாமையை உணர்த்தும் வினையாம்.

**84.** தன்வினை பிறவினையும், செயப்படுபொருள் குன்றியவினை செயப்படுபொருள் குன்றாவினையும் செய் வினையேயாம்.

**85.** செயப்படுபொருள் குன்றியவினை ஒழிந்த மற்ற வினைப்பகுதிகளோடு இடையே அகரச்சாரியை வர, படு என்னும் விகுதிசேர்ந்தால் செயப்பாட்டுவினையாம்.

உ—ம். காண் + அ + படு = காணப்படு.

**86.** சில பகுதிகள் குச்சாரியையோடு அகரம் பெறுதலும் உண்டு.

உ–ம். அழை + கு + அ + படு = அழைக்கப்படு.

**87.** சில வினைச்சொற்கள் பொதுவினையாகவரும்.

1. தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவினை.

உ–ம். வெளுத்தான்.

2. உடன்பாட்டுவினைக்கும் எதிர்மறைவினைக்கும் பொதுவினை.

உ–ம். செய்யாய்.

3. செயப்படுபொருள் குன்றியவினைக்கும் செயப்படுபொருள் குன்றாவினைக்கும் பொதுவினை.

உ–ம். வெளுத்தான்.

4. செய்வினைக்கும் செயப்பாட்டுவினைக்கும் பொதுவினை.

உ–ம். விண்டகமலம்; புலி கொன்றயானை.

## பயிற்சி.

1. வினைச்சொல் எத்தனை வகைப்படும்?

2. வினைச்சொல் என்ன என்ன பொருளை உணர்த்தும்?

3. தெரிநிலை வினைச்சொல்லில் எந்த எந்த உறுப்பால் என்ன என்ன பொருளை அறியலாம்?

4. தெரிநிலை வினைவிகற்பம் மூப்பதாதல் எங்ஙனம்? உதாரணங் காட்டுக.

5. பகுதிக்கு வேறுபெயர் என்ன? அந்தப்பெயர் எதனால் வந்தது?

6. பகுதி முதலாகச் சொல்லிய ஐந்தனுள் பகுதிக்கு எந்தப் பாகுபாடு இல்லை?

7. தன்வினையும், பிறவினையும், செய்வினை செயப்பாட்டு வினைகளுள் எதில் அடங்கும்?

8. எவ்வகைவினைக்குச் செயப்பாட்டுவினை இல்லை?

9. பின்வருவனவற்றில் ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு உதாரணங்கள் கூறுக:—தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவான வினை; செயப்படுபொருள் குன்றியவினைக்கும் செயப்படுபொருள் குன்றாவினைக்கும் பொதுவானவினை; உடன்பாட்டுவினைக்கும் எதிர்மறைவினைக்கும் பொதுவானவினை.

10. அடியிற்கண்ட பகுதிகளின் அடியாகப் பிறக்கும் தொழிற்பெயர், வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் இவற்றைக் குறிப்பிடுக:—அறி, ஆள், உழு, நில், காண்.

## வினைச்சொற்களின் பகுப்பு.

**88.** தெரிநிலையும் குறிப்புமாகிய வினைச்சொற்கள், வினைமுற்று பெயரெச்சம் வினையெச்சம் என மூவகைப் படும்.

| உடன்பாடு. | எதிர்மறை. |
|---|---|
| 1. தெரிநிலைவினைமுற்று. | 1. தெரிநிலைவினைமுற்று. |
| குறிப்புவினைமுற்று. | குறிப்புவினைமுற்று. |
| 2. தெரிநிலைப்பெயரெச்சம். | 2. தெரிநிலைப்பெயரெச்சம். |
| குறிப்புப்பெயரெச்சம். | குறிப்புப்பெயரெச்சம். |
| 3. தெரிநிலைவினையெச்சம். | 3. தெரிநிலைவினையெச்சம். |
| குறிப்புவினையெச்சம். | குறிப்புவினையெச்சம். |

### (உடன்பாடு.)

**89.** வினைமுற்றுவது, பால்காட்டும் விகுதியோடுகூடி முற்றிநின்று பெயரைக்கொண்டு முடியும் வினையாம்.

### தெரிநிலைவினைமுற்று.

**90.** தெரிநிலைவினைமுற்றுவது பால்காட்டும் விகுதி யோடுகூடி முற்றிநின்று, செயலையுங் காலத்தையும் வெளிப்படையாகத்தோற்றிப் பெயரைக்கொண்டு முடி வதாம்.

**91.** அன், ஆன், என்னும் இரண்டு விகுதிகளையும் இறுதியிலுடைய வினைகள் ஆண்பாற்படர்க்கை வினை முற்றுக்களாம்.

உ—ம். நடந்தனன், நடந்தான்.

**92.** அள், ஆள் என்னும் இரண்டு விகுதிகளையும் இறு தியிலுடைய வினைகள் பெண்பாற்படர்க்கை வினைமுற் றுக்களாம்.

உ—ம். நடந்தனள், நடந்தாள்.

**93.** அர், ஆர் என்னும் இரண்டு விகுதிகளையும் இறு தியிலுடைய வினைகள் பலர்பாற்படர்க்கை வினைமுற்றுக் களாம்.

உ—ம். நடந்தனர், நடந்தார்.

**94.** து, று இவ்விருவிகுதிகளையும் இறுதியிலுடைய வினைகள் ஒன்றன்பாற்படர்க்கை வினைமுற்றுக்களாம்.

உ-ம். வந்தது, ஆயிற்று.

**95.** அ என்னும் விகுதியையுடைய வினைகள் பலவின்பாற்படர்க்கை வினைமுற்றுக்களாம்.

உ-ம். வந்தன.

### குறிப்புவினைமுற்று.

**96.** குறிப்பு வினைமுற்றுவது, பொருளாதியாறும் அடியாகப்பிறந்த பெயர்கள், வினைகொண்டு முடியுஞ் சொற்களுக்குப் பயனிலையாகவந்து குறிப்பாகக் காலத்தை யுணர்த்துவதாம்.

உ-ம். குழையன், குழையள், குழையர், குழையது, குழையன.

பட்டினத்தான், பட்டினத்தாள், பட்டினத்தார், பட்டினத்தது, பட்டினத்தன.

மற்றவைகளும் இப்படியே.

### இருதிணைப்பொதுவினைகள்.

**97.** தன்மைவினைமுற்றும், முன்னிலைவினைமுற்றும், ஏவல்வினைமுற்றும், வியங்கோள்வினைமுற்றும், வேறு, இல்லை, உண்டு என்னும் குறிப்புவினைமுற்றுக்களும், பெயரெச்சமும், வினையெச்சமும் இருதிணைக்கும் பொதுவாம்.

### தன்மைவினைமுற்றுக்கள்.

**98.** என் என்னும் விகுதியை இறுதியிலுடைய வினைகள் தன்மை ஒருமை வினைமுற்றுக்களாம்.

உ-ம். நடந்தேன் — தெரிநிலை.
குழையேன் — குறிப்பு.

**99.** ஓம் என்னும் விகுதியை இறுதியிலுடைய வினைகள் தன்மைப்பன்மை வினைமுற்றுக்களாம்.

உ-ம். நடந்தோம் — தெரிநிலை.
குழையோம் — குறிப்பு.

**100.** அம், ஆம், எம் என்னும் மூன்று விகுதிகளும் செய்யுளில் தன்மைப்பன்மை வினைமுற்றில் வரும்.

உ-ம். வந்தனம், வந்தாம், வந்தேம் — தெரிநிலை.
தாரினம், தாரினும், தாரினேம் — குறிப்பு.

## முன்னிலைவினைமுற்றுக்கள்.

**101.** ஐ, ஆய் என்னும் இருவிகுதிகளை இறுதியிலுடைய வினைகள் முன்னிலை ஒருமை வினைமுற்றுக்களாம்.

உ–ம். நடந்தனை, நடந்தாய் — தெரிநிலை.
பெரியை, பெரியாய் — குறிப்பு.

**102.** இர், ஈர் என்னும் விகுதிகளை இறுதியிலுடைய வினைமுற்றுக்கள் முன்னிலைப்பன்மை வினைமுற்றுக்களாம்.

உ–ம். வந்தனிர், வந்தீர் — தெரிநிலை.
குழையினிர், குழையீர் — குறிப்பு.

## ஏவல்வினைமுற்று.

**103.** ஏவல்வினைமுற்றாவது முன்னின்றானை, 'இது செய்' என்று கட்டளையிடுவது. அது எதிர்காலத்தில் மட்டும் வரும்.

**104.** ஆய், இ என்னும் விகுதிகளை இறுதியிலுடைய வினைகள் ஏவல் ஒருமை வினைமுற்றுக்களாம்.

உ–ம். உண்ணாய்; செய்தி.

**105.** உம், ஈர், மின் என்னும் விகுதிகளை இறுதியிலுடைய வினைகள் ஏவற்பன்மை வினைமுற்றுக்களாம்.

உ–ம். உண்ணும்; உண்ணீர்; உண்மின்.

**106.** ஏவல் ஒருமையில் விகுதி குன்றியும் வரும்.

உ–ம். நட, படி, பார்.

குறிப்பு. — முன்னிலைவினைமுற்றுக்கும் ஏவல்வினைமுற்றுக்கும் வேறுபாடு: — முன்னிலை வினைமுற்று முன்னின்றான் தொழிலை உணர்த்துவது; அது முக்காலத்தும் வரும். ஏவல்வினைமுற்று முன்னின்றானைக் கட்டளையிடுவது; அது எதிர்காலத்தில்மட்டும் வரும். ஏவலெல்லாம் முன்னிலை; முன்னிலையெல்லாம் ஏவல் அல்ல.

## வியங்கோள்வினைமுற்று.

**107.** க, இ என்னும் எதிர்காலங்காட்டும் இவ்விரு விகுதிகளை ஈற்றிலுடைய வினைமுற்றுக்கள் வியங்கோள் வினைமுற்றுக்களாம். அவை மூவிடத்தும் ஐம்பாலிலும் எதிர்காலத்தை உணர்த்திவரும்.

| உ–ம். | | ஒருமை. | | பன்மை. |
|---|---|---|---|---|
| தன்மை. | | யான் வாழ்க.<br>யான் வாழி. | | யாம் வாழ்க.<br>யாம் வாழி. |
| முன்னிலை. | | நீ வாழ்க.<br>நீ வாழி. | | நீர் வாழ்க.<br>நீர் வாழி. |
| படர்க்கை. | ஆண் பால். | அவன் வாழ்க.<br>அவன் வாழி. | பலர்பால். | அவர் வாழ்க.<br>அவர் வாழி. |
| | பெண் பால். | அவள் வாழ்க.<br>அவள் வாழி. | | |
| | ஒன்றன் பால். | அது வாழ்க.<br>அது வாழி. | பலவின் பால். | அவை வாழ்க.<br>அவை வாழி. |

குறிப்பு. — ஏவல்வினைமுற்றுக்கும் வியங்கோள்வினைமுற்றுக்குமுள்ள வேறுபாடு:—ஏவல், கட்டளைப்பொருளில் முன்னிலையில் மட்டும் வரும்; வியங்கோள், வாழ்த்து முதலிய பல பொருள்களில் ஐம்பாலிலும் மூவிடத்திலும் வரும்.

**108.** தன்மை எழுவாயோடு முன்னிலை எழுவாயாவது படர்க்கை எழுவாயாவது அல்லது அவ்விரண்டுமாவது சேர்ந்து ஒருவினைகொண்டு முடியுமானால் தன்மைக்குரிய ஓம் விகுதிகொண்டு முடியும்.

உ–ம். நானும் நீயும் போனோம்.
நானும் அவனும் போனோம்.
நானும் நீயும் அவனும் போனோம்.
நானும் குதிரையும் போனோம்.

**109.** முன்னிலை எழுவாயோடு படர்க்கை எழுவாய் சேர்ந்து ஒருவினைகொண்டு முடியுமானால், முன்னிலைக்குரிய ஈர் என்னும் விகுதிகொண்டு முடியும்.

உ–ம். நீயும் அவனும் போனீர்.
நீயும் குதிரையும் போனீர்.

**110.** உயர்திணை எழுவாயோடு அஃறிணை எழுவாய் ஒரு வினைகொண்டு முடியும்போது உயர்திணைப் பலர்பால் வினைமுற்றைக்கொண்டு முடியும்.

உ–ம். அவனும் குதிரையும் போனார்கள்.

**111.** வேறு, இல்லை, உண்டு என்பன இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாகிய குறிப்புவினைமுற்றுக்களாம்.

உ–ம். நான், நாம், நீ, நீர், அவன், அவள், அவர், அது, அவை. } வேறு. இல்லை. உண்டு.

பயிற்சி.

1. வினைமுற்றாவது யாது?
2. இருதிணைக்கும் பொதுவான வினைகள் எவை?
3. முன்னிலை வினைமுற்றுக்கும் ஏவல் வினைமுற்றுக்கும் வேறுபாடு என்ன?
4. ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் வேறுபாடு என்ன?
5. தன்மையெழுவாயோடு படர்க்கையெழுவாய் சேர்ந்து வந்தால் எவ்வாறு முடியும்?
6. முன்னிலையெழுவாயோடு படர்க்கையெழுவாய் சேர்ந்து வந்தால் எவ்வாறு முடியும்?
7. உயர்திணையெழுவாயோடு அஃறிணையெழுவாய்சேர்ந்து வந்தால் எவ்வாறு முடியும்?
8. இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவான வினைகள் எவை?

## தெரிநிலைப்பெயரெச்சம்.

**112.** பால்காட்டும் முற்றுவிகுதி பெறாத குறைச்சொல்லாய்ப் பெயரைக்கொண்டு முடியும் வினைச்சொல் பெயரெச்சமாம்.

குறிப்பு.—இறந்தகாலப்பெயரெச்சங்கள் செய்த என்னும் வாய்பாடு என்றும், நிகழ்காலப்பெயரெச்சங்கள் செய்கின்ற என்னும் வாய்பாடு என்றும், எதிர்காலப்பெயரெச்சங்கள் செய்யும் என்னும் வாய்பாடு என்றும் சொல்லப்படும்.

உ–ம். உண்ட; உண்கின்ற; உண்ணும்.

**113.** செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் வினைமுற்றாகவும் வரும். அது, படர்க்கையில், ஆண்பாலி லும் பெண்பாலிலும் ஒன்றன்பாலிலும் பலவின்பாலிலும் வரும்.

உ—ம். அவன் வரும், அவள் வரும்,
அது வரும், அவை வரும்.

**114.** செய்யும் என்னும் பெயரெச்சத்திலும் செய்யும் என்னும் வினைமுற்றிலும் இறுதியிலுள்ள உயிர்மெய் கெடு தலும் உண்டு.

உ—ம். ஆகும்பொருள் = ஆம்பொருள்.
குணம்ஆகும் = குணமாம்.

**115.** செய்யும் என்னும் எவற்பன்மை வினைமுற்றி லும் இறுதி உயிர்மெய் கெடுதலும் உண்டு.

உ—ம். போகும் + பெரியோரே = போம்பெரியோரே.

## குறிப்புப்பெயரெச்சம்.

**116.** அ, இய என்னும் விகுதிகள் பண்படி புணர்ந்து முடிவது குறிப்புப்பெயரெச்சமாம்.

உ—ம். செய்யதாமரை; புதியமனிதன்.

## தெரிநிலைவினையெச்சம்.

**117.** பால்காட்டும் விகுதியின்றி வினையைக்கொண்டு முடியும் வினைச்சொல் வினையெச்சமாம்.

உ—ம். உண்டு; உண்ண; உண்ணின்.

குறிப்பு.—இறந்தகாலவினையெச்சங்கள் செய்து என்னும் வாய் பாடு என்றும், நிகழ்காலவினையெச்சங்கள் செய என்னும் வாய்பாடு என்றும், எதிர்காலவினையெச்சங்கள் செயின் என்னும் வாய்பாடு என்றும் சொல்லப்படும்.

**118.** இறந்தகால வினையெச்சவிகுதிகள் உ, இ, ய் என்பனவாம்.

உ—ம். செய்து, ஓடி, போய்.

**119.** நிகழ்கால வினையெச்சவிகுதி அ என்பதாம்.

உ—ம். செய்ய, படிக்க.

**120.** எதிர்கால வினையெச்சவிகுதிகள் இன், ஆல், கால் முதலியன.

உ–ம். **உண்ணின், உண்டால், உண்டக்கால்.**

**121.** செய்து என்னும் வினையெச்சம் தன்வினைமுதலின் வினையையே கொண்டு முடியும்.

உ–ம். **கண்ணன் உண்டு வந்தான்.**

**122.** செய என்னும் வினையெச்சமும், செயின் என்னும் வினையெச்சமும் தம் வினைமுதல் வினையையும் வேறு வினைமுதல் வினையையும் கொண்டு முடியும்.

| | |
|---|---|
| உ–ம். **அவன் உண்ண வந்தான். அவன் உண்டால் போவான்.** | **தன் வினைமுதல் வினையைக்கொண்டு முடிந்தன.** |
| **கண்ணன் வரப் பார்த்தேன். கண்ணன் வந்தாற் போவேன்.** | **வேறு வினைமுதல் வினையைக்கொண்டு முடிந்தன.** |

**123.** செய என்னும் எச்சம் செய்து என்னும் எச்சமாகத் திரிந்தாலும் அதன் பொருள் வேறுபடாது,

உ–ம். **கண்ணன் வந்து இராமன் போனான்**—என்பதற்குக் **கண்ணன்வர இராமன் போனான்** என்பதே பொருள்.

## குறிப்புவினையெச்சம்.

**124.** பண்படியாகத் தோன்றி அகர ஈறாக நின்று வினையைக்கொண்டு முடிவது குறிப்புவினையெச்சமாம்.

உ–ம். **மெல்லச்சென்றான்; வலியச்சொன்னான்.**

### பயிற்சி.

1. விகுதியால் காலங்காட்டும் பெயரெச்சம் எது?
2. இறந்தகாலப்பெயரெச்சங்கள் எந்த வாய்பாட்டில் அடங்கும்?
3. எந்த வாய்பாட்டுப்பெயரெச்சம் வினைமுற்றாக வரும்?
4. பெயரெச்சம் வினைமுற்றாதற்கு இரண்டு உதாரணம் கூறுக.
5. செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று எதில் எதில் வாராது?
6. செய்யும் என்னும் வினைமுற்றில் ஈற்றுயிர்மெய் கெட்டதற்கு இரண்டு உதாரணம் கூறுக.
7. குறிப்புப்பெயரெச்சத்திற்கு இரண்டு உதாரணம் கூறுக.

8. முக்காலத்திற்கும் உரிய வினையெச்ச வாய்பாடு எது?

9. எந்த எந்த வினையெச்சங்கள் தம் கருத்தாவின் வினையையும் பிற கருத்தாவின் வினையையும் கொண்டு முடியும்?

10. குறிப்பு வினையெச்சத்திற்கு நான்கு உதாரணங்கள் கூறுக.

## (எதிர்மறை.)

### எதிர்மறைத்தெரிநிலைவினைமுற்று.

**125.** நட முதலிய வினைப்பகுதிகள் எதிர்மறை ஆகாரவிகுதி புணர்ந்து அனைத்தும் ஓர் பகுதியாகி அதன்மேல் இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்குமுரிய விகுதிகள் புணர்ந்து வந்தால், எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்றுக்களாம். இந்த ஆகாரவிகுதி உயிர்வரின் கெடும்; மெய்வரின் கெடாது.

உ-ம். நான் உண்ணேன்; நாம் உண்ணோம்; நீ உண்ணாய்; நீர் உண்ணீர்; அவன் உண்ணான்; அவள் உண்ணாள்; அவர் உண்ணார்; அது உண்ணாது; அவை உண்ணா.

குறிப்பு.—எதிர்மறை ஆகாரவிகுதி முக்காலத்துக்கும் உரியது.

### எதிர்மறைக்குறிப்புவினைமுற்று.

**126.** எதிர்மறைக்குறிப்புவினைகள் அல், இல் என்னும் பண்படிகள் காரணமாகவே பிறக்கும்.

**127.** அல், இல் என்னும் எதிர்மறைப் பண்படிகளோடு இருதிணை ஐம்பால்களுக்குமுரிய விகுதிகள் புணர்ந்தால் எதிர்மறைக்குறிப்புச் சிறப்புவினைமுற்றுக்களாம்.

| உ-ம். | | ஒருமை. | | பன்மை. |
|---|---|---|---|---|
| தன்மை. | | நான் அல்லேன்.<br>நான் இலேன் | | நாம் அல்லோம்.<br>நாம் இலோம். |
| முன்னிலை. | | நீ அல்லை.<br>நீ இலாய். | | நீர் அல்லீர்.<br>நீர் இலீர். |
| படர்க்கை. | ஆண் பால் | அவன் அல்லன்.<br>அவன் இலன். | பலர் பால். | அவர் அல்லர்.<br>அவர் இலர். |
| | பெண் பால் | அவள் அல்லள்.<br>அவள் இலள். | | |
| | ஒன்றன் பால் | அது அன்று.<br>அது இன்று. | பலவின் பால். | அவை அல்ல<br>அவை இல. |

**128.** இல் என்னும் எதிர்மறைப் பண்படியோடு ஐ என்னும் விகுதி புணர்ந்தால் எதிர்மறைக்குறிப்புப் பொதுவினை முற்றாம்.

| | |
|---|---|
| உ–ம். நான் இல்லை. | நாம் இல்லை. |
| நீ இல்லை. | நீர் இல்லை. |
| அவன் இல்லை. அவள் இல்லை. | அவர் இல்லை. |
| அது இல்லை. | அவை இல்லை. |

குறிப்பு.—அல் என்னும் எதிர்மறைப் பண்படியிலிருந்து எதிர் மறைக்குறிப்புப் பொதுவினைமுற்றுக்கள் பிறவா.

## எதிர்மறைத்தெரிநிலைப்பெயரெச்சம்.

**129.** நட முதலிய பகுதிகள் எதிர்மறை ஆகார விகுதியைப் பெற்று இரண்டும் ஒரு பகுதியாகித் தகர வெழுத்துப் பேற்றோடு சேர்ந்த அகரவிகுதியைப் புணர்ந் தால் எதிர்மறைத் தெரிநிலைப்பெயரெச்சமாம்.

உ–ம். நடவாத குதிரை.

## எதிர்மறைக்குறிப்புப்பெயரெச்சம்.

**130.** அல், இல் என்பவை இடையில் ஆகாரச்சாரி யையும் தகரவொற்று எழுத்துப்பேறும் பெற்று அதன் மேல் அகர விகுதியைப் புணரின், எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சமாம்.

உ–ம். அல்லாத குதிரை; இல்லாத பொருள்.

## எதிர்மறைத்தெரிநிலைவினையெச்சம்.

**131.** நட முதலிய பகுதிகள் எதிர்மறை ஆகார விகுதி பெற்று யாவும் ஒரு பகுதியாய் நின்று, மல், மை, மே, து விகுதிகளைப் புணர்ந்தால் எதிர்மறைத் தெரிநிலை வினையெச்சமாம்.

உ–ம். நடவாமல்; நடவாமை; நடவாமே; நடவாது—வந்தான்.

## எதிர்மறைக்குறிப்புவினையெச்சம்.

**132.** அல், இல் என்னும் எதிர்மறைப் பண்படிகள் ஆகாரச்சாரியை இடையிற்பெற்று மல், மை, மே, து என்னும் விகுதிகளைப் புணர்ந்தும், சாரியையில்லாமல் றி விகுதியைப் புணர்ந்தும் வந்தால் எதிர்மறைக்குறிப்பு வினையெச்சங்களாம்.

உ–ம். அல்லாமல், இல்லாமல்; அல்லாமை, இல்லாமை; அல்லாமே, இல்லாமே; அல்லாது, இல்லாது; அன்றி, இன்றி—வந்தான் என வரும்.

**133.** எதிர்மறைப்பெயரெச்சமும் எதிர்மறை வினையெச்சமும் ஈறுகெட்டும் வரும். அவை முறையே ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம் என்றும், ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம் என்றும் வழங்கும்.

| உ–ம். | தெரிநிலை. | குறிப்பு. | |
|---|---|---|---|
| | உண்ணுக்குதிரை. | இல்லாப்பொருள். | பெயரெச்சம். |
| | உண்ணுக்கிடந்தது. | இல்லாக்கிடந்தது. | வினையெச்சம். |

## முற்றெச்சம்.

**134.** ஓர் எழுவாயோடு இரண்டு வினைமுற்றுக்கள் இயைந்துவந்தால் முதலிலிருக்கும் வினைமுற்று வினையெச்சமாகக் கொள்ளப்படும். அதற்கு முற்றெச்சம் என்று பெயர்.

உ–ம். கண்டனன் வணங்கினான்—என்பதற்குக் கண்டு வணங்கினான் என்பது பொருள்.

**135.** ஒரு பெயரோடு இரண்டு மூன்று பெயரெச்சங்கள் இயைந்து வந்தால் முதலிலுள்ள பெயரெச்சங்களை வினையெச்சங்களாகவும் கொள்ளலாம்.

உ–ம். வந்த கண்ட பேசிய இராமன்—என்பதற்கு வந்து கண்டு பேசிய இராமன் என்பது பொருள்.

### பயிற்சி.

1. எதிர்மறைத் தெரிநிலை—வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம்—இவைகளுக்கு இரண்டிரண்டு உதாரணங்கள் கூறுக.
2. எதிர்மறைக்குறிப்பு வினைகள் எவற்றினடியாகப் பிறக்கும்?
3. எதிர்மறைக்குறிப்புச் சிறப்புவினைமுற்று நான்கு கூறுக.
4. எதிர்மறைக்குறிப்புப் பொதுவினைமுற்று எதனடியாகப் பிறவாது?
5. தெரிநிலையும் குறிப்புமாகிய ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்திற்கும், ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சத்திற்கும் இரண்டிரண்டு உதாரணங்கள் கூறுக.
6. எந்த எந்தச் சொற்கள் ஈறுகெட்டுவரும்?
7. முற்றெச்சமென்றால் என்ன? இரண்டு உதாரணம் கூறுக.

# 3. இடையியல்.

## இடைச்சோல்.

**136.** இடைச்சொல்லாவது பெயர்வினைகளைப்போலத் தனித்துவாராமல் அவைகளைச் சார்ந்து பொருளையுணர்த்தி வருஞ்சொல்லாம்.

## இடைச்சோல்லின் வகை.

**137.** வேற்றுமை உருபுகளும் விகுதிகளும் இடைநிலைகளும் சாரியைகளும் உவமைஉருபுகளும் சுட்டும் வினவும் தத்தம் பொருளையுணர்த்தி வருவனவும் இடைச்சொற்களாம்.

குறிப்பு.—வேற்றுமையுருபுகளும் விகுதிகளும் இடைநிலைகளும் சுட்டும் வினவும் முன்னே கூறப்பட்டன.

## சாரியைகள்.

**138.** அன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், ஏ, ஐ, கு, ன், ஆம் இப்பன்னிரண்டும் பிறவும் சாரியைகளாம்.

உ–ம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அன் | — | நடந்தனன். | அம் | — | புளியங் காய். |
| இன் | — | வண்டின் கால். | ஏ | — | கலனே குறுணி. |
| அல் | — | வளையல். | ஐ | — | பண்டை நாள். |
| அற்று | — | எல்லாவற்றையும். | கு | — | நடக்கும். |
| இற்று | — | பதிற்றுப்பத்து. | ன் | — | கோன். |
| அத்து | — | மரத்துக்கிளை. | ஆம் | — | மண்ணாங்கட்டி. |

## உவமை உருபுகள்.

**139.** போல, ஒப்ப, நேர, நிகர, அன்ன, அனைய முதலிய இடைச்சொற்கள் உவமை உருபுகளாம்.

உ–ம். மாரிபோலக் கொடுத்தான்; மாரியொப்பக் கொடுத்தான்.

## தத்தம் பொருளையுணர்த்தும் இடைச்சோற்கள்.

**140.** ஏ, ஓ, உம், மற்று, கொல், முன், பின், இனி, சும்மா, தான், ஐயோ, சீ, சீசீ, ஆ, அம்ம முதலியவை தத்தம் பொருளை யுணர்த்தும் இடைச்சொற்களாம்.

**141.** ஏகாரம், தேற்றத்திலும் பிரிநிலையிலும் வினவிலும் ஈற்றசையிலும் வரும்.

உ-ம். கடவுளே உயர்ந்தவர். — தேற்றம்.
அவனே கொண்டான். — பிரிநிலை.
நீயே கொண்டாய்? — வினு
இயம்புவன் எழுத்தே. — ஈற்றசை.

**142.** ஓகாரம், எதிர்மறையிலும் வினவிலும் சிறப்பிலும் அசைநிலையிலும் வரும்.

உ-ம். அவனே கொண்டான். — எதிர்மறை.
பசுவோ வந்தது? — வினு.
ஓ ஓ பெரியன். — உயர்வுசிறப்பு.
ஓ ஓ கொடியன். — இழிவு சிறப்பு.
காணிய வம்மினே. — அசைநிலை.

**143.** உம்மை, எதிர்மறையிலும் சிறப்பிலும் ஐயத்திலும் எச்சத்திலும் முற்றிலும் எண்ணிலும் வரும்.

உ-ம். வருதற்குமுரியன். — எதிர்மறை.
குறவரும் மருளுங் குன்று. — உயர்வுசிறப்பு.
புலையனும் விரும்பாத யாக்கை. — இழிவுசிறப்பு.
பத்தாயினும் எட்டாயினும் கொடு. — ஐயம்.
இராமனும் வந்தான். — எச்சம்.
இரண்டு கண்ணும் சிவந்தன. — முற்று.
சாத்தனும் கொற்றனும் வந்தார். — எண்.

குறிப்பு.—இராமனும் வந்தான்—என்பதிற் பரதன் வந்ததன்றி என்று பொருள்தரின், இறந்தததழுவிய எச்ச உம்மை என்றும், பரதனும் வருவான் என்று பொருள்தரின் எதிரது தழுவிய எச்ச உம்மை என்றும் சொல்லப்படும்.

**144.** மற்று, பிறிதென்னும் பொருளிலும் அசைநிலையிலும் வரும்.

உ-ம். அவனுக்காக மற்றொருவன் வந்தான்.—பிறிது.
மனம் சிறியராவரோ மற்று. —அசைநிலை.

**145.** கொல் என்பது ஐயப்பொருளில் வரும்.

உ-ம். வருவான்கொல்? — ஐயம்.

**146.** முன், பின் என்பன காலப்பொருளையும் இடப்பொருளையும் தரும்.

உ–ம். முன் பிறந்தான். } காலப்பொருள்.
பின் பிறந்தான்.
முன் உட்கார்ந்தான். } இடப்பொருள்.
பின் உட்கார்ந்தான்.

**147.** இனி என்பது, காலவெல்லையையும் இடவெல்லையையும் உணர்த்தும்.

உ–ம். இனி வருவேன். — காலவெல்லை.
இனி எம்மூர் — இடவெல்லை.

**148.** சும்மா என்பது பயனின்மைப் பொருளில் வரும்.

உ–ம். சும்மா இருந்தான்.

**149.** தான் என்பது தேற்றப்பொருளில் வரும்.

உ–ம். அவனுக்குத்தான் தெரியும்.

**150.** ஐயோ என்பது இரக்கப்பொருளில் வரும்.

உ–ம். ஐயோ பாவம்!

**151.** சீ, சீசீ என்பன இகழ்ச்சிப்பொருளில் வரும்.

உ–ம். சீ போ; சீசீ மூடா.

**152.** ஆ, அம்மா என்பன வியப்புப்பொருளில்வரும்.

உ–ம். ஆ பெரிது; அம்மா பெரிது.

### பயிற்சி.

1. பகுபதங்களில் வரும் இடைச்சொற்கள் எவை?
2. தத்தம் பொருளைக் காட்டும் இடைச்சொற்களில் ஆறு கூறுக.
3. பின்வரும் இடைச்சொற்கள் என்னஎன்ன பொருளில் வரும்?—

ஏ, ஓ, உம், இனி, தான், சும்மா.

4. அடியில் வருபவைகளிலுள்ள இடைச்சொற்களுக்குப் பொருள் கூறுக:—1. இவ்வளவிற் செல்லுங்கொல். 2. வருவானோ வாரானோ? 3. ஒன்றேகால். 4. நான் முன் கண்டவன் இவனே. 5. இவனைத்தான் கண்டேன்.

## 4. உரியியல்.

### உரிச்சொல்.

**153.** உரிச்சொல் என்பது குணத்தையுணர்த்திப் பெயர் வினைகளுக்கு உரிமைபூண்டு வழங்குஞ்சொல்லாம்.

உ—ம். நனிபேதை; தவவுழைத்தான்.

**154.** சால, உறு, தவ, நனி, கூர், கழி என்பன மிகுதி என்னும் ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாம்.

**155.** கடி என்பது காவல், கூர்மை, வாசனை, ஒளி, அச்சம், சிறப்பு, புதுமை, மிகுதி, விரைவு முதலிய பல குணத்தை உணர்த்தும் உரிச்சொல்லாம்.

### பயிற்சி.

1. உரிச்சொல்லாவது என்ன?
2. ஒரேகுணத்தைக் காட்டும் உரிச்சொற்களில் நான்கு கூறுக.
3. கடி என்னும் உரிச்சொல் என்ன என்ன பொருளில் வரும்?

---

## 5. பொதுவியல்.

### வழக்கு.

**156.** வழக்காவது சொற்கள் வழங்கும் விதம். அது இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என இரண்டு வகைப்படும்.

**157.** இயல்புவழக்கு, ஒரு பொருளுக்கு இயல்பாயமைந்த சொல்லால் அப்பொருளைக் கூறுவது. அது இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என்று மூவகைப்படும்.

**158.** இலக்கணமுடையது என்பது இலக்கணத்திற்கு ஒத்து வருவது.

உ—ம். நிலம், நீர்.

**159.** இலக்கணப்போலி என்பது இலக்கணத்திற்கு ஒத்திராவிட்டாலும் இலக்கணமுடையதுபோலக் கொள்ளப்படுவது.

உ—ம். முன்றில், புறநகர், கோயில்.

குறிப்பு.—இல்முன் என்பது முன்றில் எனவும், நகர்ப்புறம் என்பது புறநகர் எனவும், கோவில் என்பது கோயில் எனவும் ஆனமை காண்க.

**160.** மரூஉ என்பது இலக்கணம் சிதைந்து மருவி வருவது.

| | | |
|---|---|---|
| உ—ம். | அருமருந்தன்ன பிள்ளை | அருமந்தபிள்ளை. |
| | தஞ்சாவூர் | தஞ்சை. |
| | ஆயிற்று | ஆச்சு. |

**161.** தகுதிவழக்கென்பது ஒரு பொருளுக்கு இயல்பாயுள்ள சொல்லை ஒழித்து அதற்குத் தகுதியாகிய வேறொரு சொல்லால் அப்பொருளைக் கூறுவது. அது இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என மூன்று வகைப்படும்.

**162.** இடக்கரடக்கல் என்பது சொல்லத்தகாததை மறைத்துச் சொல்வது.

உ—ம். கால்கழுவி வந்தான்.

குறிப்பு.—இவ்வாறு மறைத்துச் சொல்லாவிடில் அருவருப்பை உண்டுபண்ணும்.

**163.** மங்கலம் என்பது மங்கலமல்லாததை மங்கலமாகச் சொல்வது.

உ—ம். நன்காடு, தாலி பெருகிற்று.

குறிப்பு.—இவ்வாறு மறைத்துச் சொல்லாவிடில் அமங்கலமாகத் தோன்றும்.

**164.** குழூஉக்குறி என்பது ஒரு கூட்டத்தார் யாதேனும் ஒரு காரணத்தால் ஒரு பொருளின் இயல்பான பெயரை ஒழித்து வேறொரு பெயரால் அப்பொருளைக் கூறுவது.

உ—ம். தட்டார் பொன்னைப் பறி என்பதும், வேடர் கள்ளைச் சொல்விளம்பி என்பதும் முதலியவையாம்.

குறிப்பு.—இவ்வாறு மறைத்துச்சொல்வது தாம் பேசிக்கொள்வதைப் பிறர் அறியாதிருத்தற்பொருட்டாம்.

## சொல் பொருளையுணர்த்தல்.

**165.** சொல் பொருளை உணர்த்துமிடத்து வெளிப் படையாகவும் குறிப்பாகவும் உணர்த்தும்.

**166.** வெளிப்படைச் சொல்லாவது, இருதிணை ஐம் பாற் பொருள்களை வெளிப்படையாகத் தெரிவிப்பதாம்.

உ—ம். மண், மரம், வந்தான், போனான்.

**167.** குறிப்புச்சொல்லாவது, இருதிணை ஐம்பாற் பொருள்களைக் குறிப்பினால் தெரிவிப்பது. அது ஒன்பது வகைப்படும். அவை, ஒன்றொழி பொதுச்சொல், விகாரம், தகுதி, ஆகுபெயர், அன்மொழித்தொகை, வினைக் குறிப்பு, முதற்குறிப்பு, தொகைக்குறிப்பு, பிறகுறிப்பு என்பன.

1 ஒன்றொழி பொதுச்சொல்: உ—ம். ஆயிரமக்கள் போர் செய்தார்கள்.

இதில், மக்களென்னும் பொதுப்பெயரும் செய்தார்கள் என்னும் பொதுவினையும் போர் என்னும் குறிப்பால் பெண்பாலை ஒழித்து ஆண்பாலைக் காட்டின.

2. விகாரம்: உ—ம். மரைமலர்.

இதில், மரை என்னும் சொல் மலர் என்னும் குறிப்பால் தாமரையைக் காட்டிற்று.

3. தகுதி: உ—ம். திருமுகம் படித்தான்.

இதில், திருமுகம் என்பது படித்தான் என்னும் குறிப்பால் ஓலை என்பதைக் காட்டிற்று.

4. ஆகுபெயர்: உ—ம். புளி தின்றான்.

இதில், புளி என்னும் சுவையை உணர்த்தும் சொல், தின்றான் என்னும் குறிப்பால் அச்சுவையையுடைய பழத்தைக் காட்டியது.

5. அன்மொழித்தொகை: உ—ம். தேன்மொழி வந்தாள்.

இதில், தேன்மொழி என்னும் சொற்றொடர், வந்தாள் என்னும் குறிப்பால் தேன்போன்ற மொழியையுடைய பெண் என்பதைத் தெரிவித்தது.

6. வினைக்குறிப்பு: உ—ம். இவன் இப்போது பொன்னன்.

இதில், பொன்னன் என்னும் சொல், இப்போது என்னும் குறிப்பால் பெயர்ப்பொருளை ஒழித்துப் பொன்னையுடையவனாயிருக்கிறான் என்னும் வினைக்குறிப்பை உணர்த்திற்று.

7. **முதற் குறிப்பு:** உ—ம். ஆத்திசூடி படித்தான்.

இதில், ஆத்திசூடி என்னும் சொற்றொடர், படித்தான் என்னும் குறிப்பால் அந்தச் சொற்களை முதலிலுடைய நூலைக் காட்டிற்று.

8. **தொகைக் குறிப்பு:** உ—ம். ஐவரோடு குந்தி வந்தாள்.

இதில், ஐவர் என்னும் சொல், குந்தியென்னும் குறிப்பால் பாண்டவரைத் தெரிவித்தது.

9. **பிறகுறிப்பு:** உ—ம். கல்லைக் கடிக்க நன்றாய்ச் சமைத்தாய்; பாயா வேங்கை; பறவாக் கொக்கு.

இவற்றில, கல்லைக்கடிக்க என்னும் குறிப்பால் நன்றாகச் சமைக்கவில்லை என்பதும், பாயா என்னும் குறிப்பால் வேங்கை மரமென்பதும், பறவா என்னும் குறிப்பால் கொக்கு குதிரை என்பதும் விளங்கின.

**168.** திணைபாலிடங்களுக்குப் பொதுவாகிய பெயர் வினைகளினுடைய பொதுத்தன்மையை மேலே வருகிற சிறப்புப் பெயரும் சிறப்புவினையும் நீக்கும்.

உ—ம். சாத்தன் இவன், சாத்தன் இது, சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது எனவும்; ஒருவர் என் தாயார், ஒருவர் என் தகப்பனார் எனவும். மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன எனவும் பெயரின் திணைப் பொதுமையையும் பாற்பொதுமையையும் சிறப்புப்பெயர் வினைகள் வந்து நீக்கின.

அவரெல்லாம் இருந்தார்: அவையெல்லாம் இருந்தன; யாமெல்லாம் வருவோம்; நீரெல்லாம் போமின் எனப் பெயரின் திணைப்பொதுமையையும், இடப்பொதுமையையும் சிறப்புப்பெயர் வினைகள் வந்து நீக்கின.

வாழ்க—அவன்; அவள்; அவர்; அது; அவை; யான்; யாம்; நீ; நீர் என வினையின் திணைபால் இடப்பொதுமையினைச் சிறப்புப் பெயர்கள் வந்து நீக்கின. மற்றவைகளையும் சிறப்புச் சொல்லோடு சேர்த்துக் காண்க.

**169.** பெயரிலும், வினையிலும், ரகர வீற்றுச்சொல்லின் ஈற்று அயலிலிருக்கும் ஆகாரம் ஒகாரமாம்.

உ—ம். நல்லார் = நல்லோர்.
கொண்டார் = கொண்டோர்.

**170.** செய்யுளில், ன, ள, ய ஈற்றயல் ஆகாரம் ஒகாரமாகும்.

உ-ம். வந்தான் = வந்தோன்.
செய்தாள் = செய்தோள்.
வந்தாய் = வந்தோய்.

**171.** வேற்றுமையுருபுகள் பலவடுக்கி வந்தாலும், வினைச்சொற்கள் பலவடுக்கி வந்தாலும், இறுதியில் ஒரு முடிக்குஞ் சொல்லைக்கொண்டு முடியும்.

உ-ம். அரசன் பகைவனை வாளால் வெட்டினன்—வேற்றுமை யுருபுகள் கலந்து பலவடுக்கி ஒரு முடிக்குஞ் சொல்லைக் கொண்டன.

சாத்தனையும் கொற்றனையும் வாழ்த்தினன்—என ஐயுருபு ஒன்று பலவடுக்கி ஒரு முடிக்குஞ் சொல்லைக் கொண்டது.

ஆடினன் பாடினன் சாத்தன்; ஆடி ஓடிவந்தான்; கற்ற கேட்ட பெரியோர்—என வினைமுற்றும் வினையெச்சமும் பெயரெச்சமும் ஒன்று பலவடுக்கி ஒரு முடிக்குஞ்சொல்லைக் கொண்டன.

## இடைப்பிறவரல்.

**172.** வேற்றுமையுருபுகளும் வினை முற்றுக்களும் பெயரெச்ச வினையெச்சங்களுமாகிய இவைகளுக்கும், இவற்றை முடிக்குஞ் சொல்லாகிய பெயர்வினைகளுக்கும் நடுவில் அவ்விடத்துக்குப் பொருந்துவனவாகிய வேறு சொற்கள் வருதலுமுண்டு. அவற்றிற்கு இடைப்பிற வரல் என்று பெயர்.

உ-ம். பீமன் வயிறார உண்டான்.
தருமன் அறத்தை அழகுபெறச் செய்தான்.

இவைகளில், வயிறார, அழகுபெற என்பன இடைப்பிறவரலாம்

வந்தான் அவ்வூருக்குப்போன சாத்தன்; வந்த வடகாசி மன்னன்; வந்து அவன் ஊருக்குப் போனான். இவைகளும் அப்படியே.

**173.** ஏதாவது ஒரு சொல் வினைகொண்டு முடியும் போது அதனினத்தையுந் தெரிவிக்கும்.

உ-ம் சோறுண்டான் என்பது கறி முதலியவைகளையும் உண்டான் என்ற தன் இனத்தையும் தழுவியது.

நஞ்சுண்டவன் சாவான். இதில் நஞ்சுண்டவன் என்னும் உயர்திணை ஆண்பாற்பெயர், நஞ்சுண்டவள், நஞ்சுண்டவர், நஞ்சுண்டது, நஞ்சுண்டன என்னும் உயர்திணைப் பெண்பால், பலர்பால், அஃறிணையொன்றன்பால், பலவின்பால் இவைகளையும் தழுவியது.

இதனை உபலக்ஷணம் என்பர் வடநூலார்.

## பயிற்சி.

1. சொல் பொருளை எங்ஙனம் உணர்த்தும்?

2. குறிப்புச் சொல்லாவது யாது?

3. தகுதி, அன்மொழித்தொகை, வினைக்குறிப்பு, தொகைக் குறிப்பு இவைகளுக்கு இரண்டிரண்டு உதாரணங்கள் கூறுக.

4. பொதுப்பெயர் பொதுவினைகளின் பொதுத்தன்மை எவ்வாறு நீங்கும்? பெயருக்கும் வினைக்கும் இரண்டிரண்டு உதாரணங் கூறுக.

5. பெயர்வினைகளின் ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாவதற்கு இரண்டிரண்டு உதாரணங் கூறுக.

6. வேற்றுமை உருபு ஒன்று பல அடுக்கியும், கலந்து பல அடுக்கியும் வந்ததற்கு ஒவ்வோர் உதாரணங் கூறுக.

7. கற்றுக்கேட்டு அறிந்தடங்குக. இதில் எது எப்படி அடுக்கி வந்தது?

8. இடைப்பிறவரல் என்பது யாது? அதற்கு மூன்று உதாரணங் கூறுக.

9. உபலக்ஷணம் என்பதை விளக்கி அதற்கு இரண்டு உதாரணங் கூறுக.

## தொகைநிலைத்தொடர்.

**174.** வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை எனத் தொகைநிலைத்தொடர் ஆறு வகைப்படும்.

**175.** ஐ முதலிய ஆறு வேற்றுமையுருபும் வெளிப்படாமல் தொக்க தொடர்மொழிகள் வேற்றுமைத் தொகையாம்.

உ-ம். நிலங்கடந்தான் —2-ம் வேற்றுமைத்தொகை.
கல்லெறிந்தான் —3-ம் வேற்றுமைத்தொகை.
சாத்தன்மகன் —4-ம் வேற்றுமைத்தொகை.
ஊர் நீங்கினன் —5-ம் வேற்றுமைத்தொகை.
சாத்தன்கை —6-ம் வேற்றுமைத்தொகை.
காட்டுப்புலி —7-ம் வேற்றுமைத்தொகை.

**176.** இவ்வேற்றுமைத் தொகைகளுள் உருபுகள் மாத்திரம் விரிந்தவிடத்துப் பொருட்பொருத்தமுறாது நிற்குமாயின், மற்றுஞ் சிலசொற்கள் சேர்த்துக்கொள்ளப்படும். அவ்வேற்றுமைத்தொகைகள் உருபும் பயனும் உடன்றொக்கதொகை யெனப்படும்.

குறிப்பு.—இது ஆறும் வேற்றுமையில் வாரது.

உ—ம். கைக்களிறு என்பதிற் கையைக் களிறு என ஐயுருபு விரிந் தும் பொருள் பொருந்தாமையினுலே, உடைய என ஒருசொல் பய னுக வந்துதோன்ற முடிந்தது. மற்றை வேற்றுமைகளும் இப்படியே.

**177.** காலங்காட்டும் இடைநிலையும் பெயரெச்சவிகுதி யும் ஒழியப் பகுதியளவாய் நின்று பெயரைக்கொண்டு முடிவது வினைத்தொகையாம்.

உ—ம். கொல்யானை; விடுகணை. இவை, கொன்ற, கொல்கின்ற, கொல்லும் எனவும் விட்ட, விடுகிற, விடும் எனவும் விரியும்.

**178.** போ, கா, மோ என்னும் பகுதிகளையுடைய பெயரெச்சங்கள் ஈறுகெட்டு வினைத்தொகையாகா.

**179.** சா, ஈ இவை மாத்திரம் சாநாள், ஈபொருள் என வினைத்தொகையாம்.

**180.** தா, வா என்பன தரு, வரு என்றும், நட, இற, என்பன நடந்திடு, இறந்திடு என்றும் விகாரப் பட்டு வினைத்தொகையாம்.

**181.** பண்புக்கும் பண்பிக்கும் நடுவே அவற்றிற் குள்ள ஒற்றுமையை விளக்கும் ஆகியவென்னும் பண் புருபு தொக்கது பண்புத்தொகையாம். இது வண்ணம், வடிவு, அளவு, சுவை இவைகளால் நான்கு வகைப்படும். (பண்பி = பண்பை உடையது.)

உ—ம். செந்தாமரை; கருங்குவளை —வண்ணப் பண்புத்தொகை.
வட்டக்கல்; சதுரப்பலகை —வடிவுப் பண்புத்தொகை.
ஒருபொருள்; எழுகடல் —அளவுப் பண்புத்தொகை.
துவர்க்காய்; இன்சொல் —சுவைப் பண்புத்தொகை.

இவற்றில் முதலிலுள்ளன முறையே செம்மையாகிய, வட்டமா கிய, ஒன்றுகிய, துவராகிய எனவிரியும். மற்றவைகளுக்கும் இப்ப டியே.

**182.** ஒரு பொருளுக்குண்டாயிருக்கிற பொதுப் பெயருக்கும் சிறப்புப்பெயருக்கும் நடுவில் ஆகியவென் னும் உருபு தொக்கதொடர் இருபெயரொட்டுப் பண்புத் தொகையாம்.

உ—ம். சாரைப்பாம்பு; ஆயன்சாத்தன்.

**183.** உபமானத்துக்கும் உபமேயத்துக்கும் நடுவில் போல முதலிய உவமையுருபுகள் மறைந்துவருவது உவ

மைத் தொகையாம். இவ்வுவமை வினை, பயன், மெய், உரு என்பனபற்றி வரும்.

உ–ம். குருவி கூப்பிட்டான்—வினையுவமைத்தொகை.
கற்பகக்கையான் —பயனுவமைத்தொகை.
உடுக்கையிடை —மெய்யுவமைத்தொகை.
பவளவாய் —உருவுவமைத்தொகை.

இவை, குருவிபோலக் கூப்பிட்டான், கற்பகம்போலும் கையான், உடுக்கைபோலும் இடை, பவளம்போலும் வாய் என விரியும்.

**184.** இடையிலும் கடையிலும் உம்மைதொக்க சொற்களின் தொடர் உம்மைத்தொகையாம். இஃது எண்ணலளவை, எடுத்தலளவை, முகத்தலளவை, நீட்டலளவை இவற்றால் நான்கு வகைப்படும்.

உ–ம். ஒன்றேகால்; கபிலபரணர்—எண்ணலளவை.
கழஞ்சேகால் —எடுத்தலளவை.
கலனேதூணி —முகத்தலளவை.
சாணங்குலம் —நீட்டலளவை.
} உம்மைத் தொகை.

இவை முறையே ஒன்றும் காலும், கபிலனும் பரணனும், கழஞ்சும் காலும், கலனும் தூணியும், சாணும் அங்குலமும் என விரியும்.

**185.** வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத் தொகைக்கும் புறத்தில் வேறுமொழி தொக்குவருவது அன்மொழித் தொகையாம்.

உ–ம்.

பூங்குழல்—இரண்டாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை.

தாழ்குழல்—வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை.

கருங்குழல்—பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை.

துடியிடை—உவமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை.

உயிர்மெய்—உம்மைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை.

இவை முறையே பூவைமுடித்த குழலையுடையாள்; தாழ்ந்த குழலினையுடையாள்; கருமையாகிய குழலையுடையாள்; துடிபோலும் இடையைஉடையாள்; உயிரும் மெய்யும் கூடிப்பிறந்த எழுத்து என விரியும்.

**186.** உயர்திணை ஒருமையில் வருகிற உம்மைத்தொகை, ரவ்வொற்றும் கள்ளீறுமாகிய பலர்பால் விகுதிகளை உடையதாம்.

உ-ம். கபிலபரணர், சேரசோழபாண்டியர், தேவன்றேவிகள்.

**187.** அஃறிணை ஒருமையிலும் திணைப்பொது ஒருமையிலும் வருகிற உம்மைத்தொகை பன்மைவிகுதிபெற்றும் பெருதும் வரும்.

உ-ம். ஆடுமாடுகள், ஆடுமாடு என்றும், தாய்தந்தையர், தாய்தந்தை என்றும் வரும்.

## தொகாநிலைத்தொடர்.

**188.** வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், எழுவாய், விளி, வேற்றுமைவிரி, இடைச்சொற்புணர்ச்சி, உரிச்சொற்புணர்ச்சி, அடுக்குப்புணர்ச்சி இவ்வொன்பதும் தொகாநிலைத் தொடர் மொழிகளாம்.

உ-ம். உண்டான் சாத்தன் — வினைமுற்றுத்தொடர்.
உண்ட சாத்தன் — பெயரெச்சத்தொடர்.
உண்டு வந்தான் — வினையெச்சத்தொடர்.
சாத்தன் வந்தான் — எழுவாய்த்தொடர்.
கொற்ரு கொள் — விளித்தொடர்.
குடத்தைச் செய்தான் — இரண்டாம் வேற்றுமைவிரி.

(மற்ற வேற்றுமைவிரிகளும் கொள்க.)

மற்றொன்று — இடைச்சொற்றொடர்.
நனிபேதை — உரிச்சொற்றொடர்.
பாம்பு பாம்பு — அடுக்குத்தொடர்.

## பயிற்சி.

1. வேற்றுமைத்தொகை எத்தனை வகை? ஒவ்வொன்றுக்கும் இரண்டிரண்டு உதாரணம் கூறுக.

2. உருபும் பயனும் உடன்றொக்கதொகை மூன்று கூறுக.

3. வினைத்தொகை என்ருல் என்ன? மூன்று உதாரணங் கூறுக.

4. இருபெயரொட்டுப் பண்புத்தொகைக்கு இரண்டு உதாரணங் கூறுக.

5. உவமை எத்தனை வகை?

6. உருபு மறைதலில் உம்மைத்தொகைக்கும், பிறதொகைகளுக்கு முள்ள வேறுபாடு என்ன?

7. அன்மொழித்தொகையின் வகை ஒவ்வொன்றுக்கும் உதாரணங் கூறுக.

8. அடியிற்கண்டவைகள் இன்ன இன்னதொகை என்று குறிப்பிடுக:—

பொன்மணி, இராமன்தம்பி, கோதண்டராமன், சுடுசரம், அலைகடல், செங்நெல், உவர்க்கடல், வரைத்தோள், இராப்பகல், பைங்தொடி பேசினள்.

## வழாநிலை, வழு, வழுவமைதி.

### வழாநிலை.

**189.** வழாநிலையாவது முடிக்கப்படும் சொற்களோடு முடிக்கும் சொற்கள் திணை பால் முதலியவைகளில் மாறுபடாமல் தொடர்ந்துநிற்பது. இது கொள்ளத்தக்கது.

உ-ம். நான் நேற்று வந்தேன். அவர் நாளை வருவர்.

### வழு.

**190.** திணையும் பாலும் இடமும் காலமும் வினவும் விடையும் மரபும் ஆகிய இவை மயங்கி வந்தால் வழுவாம். (வழு=குற்றம்) இவை நீக்கப்படும்.

உ-ம். அவன் வந்தது—திணைவழு. யான் வந்தான் —இடவழு.
அவர் வந்தான் —பால்வழு. நாளை வந்தான் —காலவழு.

ஒருவிரலைக்காட்டிச் சிறிதோ பெரிதோ என்பது—வினவழு.

'தில்லைக்குவழி யாது?' என்றவனுக்குச் 'சிவப்புக்காளை முப்பது பணம்' என்பது—விடைவழு.

யானை மேய்ப்பானை இடையன் என்பது—மரபுவழு.

**191.** திணை ஐயத்தையும் பால் ஐயத்தையும் அதன் அதன் பொதுச்சொல்லாலும், துணிந்த பொருளின்மேல் அல்லாத தன்மையை வைத்தும் சொல்வார்கள்.

உ-ம். 'குற்றியோ மகனோ அவ்விடத்தே தோன்றுகிற உரு' எனத் திணையில் ஐயம்வந்தபோது, உரு என்கிற பொதுச்சொல்லாலும், 'ஆண்மகனோ பெண்மகளோ அங்கே தோன்றுகிறவர்' எனப் பாலில் ஐயம்வந்தபோது, தோன்றுகிறவர் என்கிற பொதுச்சொல்லாலும் சொல்லுக.

இனி, துணிந்தபொருள் குற்றியாயின் மகனன்று, மகனுயில் குற்றியல்லன் என்றும், ஆண்மகனெனிற் பெண்மகளல்லன், பெண் மகளெனின் ஆண்மகனல்லள் என்றும், ஒன்றெனிற் பலவன்று, பல வெனின் ஒன்றல்ல என்றும் சொல்லுக.

**192.** துணிந்தபொருள்மேல் அன்மையைவைத்துச் சொல்லாமல் திணைப்பொதுச்சொல்லுக்கும் பாற்பொதுச்சொல்லுக்கும் பயனிலையாக அப்பொருளின் பெயரைக் கூறுதலும் குற்றமன்று.

உ–ம். அவ்வுரு குற்றி; அவ்வுருமகன்; ஆண்மகன்; பெண்மகள் எனக்கூறுக.

## வழுவமைதி.

**193.** வழுவமைதியாவது இலக்கணக்குற்றமுள்ளதாகக் காணப்பட்டாலும், முன்னோர்களால், 'இது இருக்கலாம்' என்று கொண்டு அமைக்கப்பட்டது. இது கொள்ளத்தக்கது.

## திணைபால் வழுவமைதி.

**194.** திணையும் பாலும், மகிழ்ச்சி, உயர்வு, சிறப்பு, கோபம், இழிப்பு ஆகிய இவைகளால் வழுவிவந்தாலும் குற்றமில்லை.

(உ–ம்.) திணை.

ஒரு பசுவை, 'என்னம்மை வந்தாள்' என்பதில் மகிழ்ச்சியால் அஃறிணை உயர்திணையாயிற்று.

'கிளியாரே' என்பதில் உயர்வினுல் அஃறிணை உயர்திணையாயிற்று.

'என் பிள்ளைகளே என் பொருள்' என்பதில் சிறப்பினுல் உயர்திணை அஃறிணையாயிற்று.

'ஒருவர் சொல்லுங் கேளான்; தானும் அறிந்துகொள்ளான்; அவ்வுயிரால் யாது பயன்?' என்பதில் கோபத்தால் உயர்திணை அஃறிணையாயிற்று.

'நாம் கடவுள் உடைமை' என்பதில் இழிப்பினுல் உயர்திணை அஃறிணையாயிற்று.

பால்.

தன்மகனை, 'என்னம்மை வந்தாள்' என்பதில் மகிழ்ச்சியினுல் ஆண்பால் பெண்பாலாயிற்று.

ஒருவனை, 'அவர் வந்தார்' என்பதில் உயர்வினால் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று.

'தாதா உலகுக்கு ஓர் தாயே' என்பதில் சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

'கசையடி பெறுவீர் காளையரே' இஃது ஒருவனைப்பார்த்துச் சொல்லியபடியால் இதில் கோபத்தால் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று.

பெண்புத்தி கேட்பானை, 'இவன் பெண்' என்பதில் இழிப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

## பால்வழுவமைதி.

**195.** ஒருமைப்பாலில் பன்மைப்பாற்சொல்லையும் பன்மைப்பாலில் ஒருமைப்பாற்சொல்லையும் தழுவிக்கூறுதலும் உண்டு.

உ-ம். வெயிலெல்லாம் மறைத்தது மேகம்.
இரண்டு கண்ணுஞ் சிவந்தது.

இவைகளுள் ஒருமையிற் பன்மையும் பன்மையில் ஒருமையும் வந்தன.

## இடவழுவமைதி.

**196.** ஓரிடத்தில் பிறஇடச்சொல்லைத் தழுவிக்கூறுதலும் உண்டு.

உ-ம். சாத்தன்தாய் இங்ஙனம் செய்வேனோ? — 'சாத்தன்தாய்' என்னும் படர்க்கை 'செய்வேனோ?' என்னும் தன்மைவினையைத் தழுவியது.

## காலம்.

**197.** இறப்பு, எதிர்வு, நிகழ்வு எனக் காலம் மூன்று வகைப்படும்.

**198.** மூன்று காலத்திலும் தொழில் இடையறாமல் நடக்கின்றபொருளை நிகழ்காலத்தாலும் எதிர்காலத்தாலும் சொல்லவேண்டும்.

| | | |
|---|---|---|
| உ-ம். | தெய்வமிருக்கிறது. | தீச் சுடும். |
| | ஆறு ஒழுகுகிறது. | குதிரை கனைக்கும். |
| | அரசன் ஆளுகிறான். | நாய் குரைக்கும். |

## காலவழுவமைதி.

**199.** விரைவினாலும் மிகுதியினாலும் தெளிவினாலும் இயல்பினாலும் ஒருகாலம் மற்றொருகாலமாக மாறியும் வரும்.

உ–ம். இனி உண்ணப்போகும் ஒருவனை உடன்கொண்டுபோக விரும்பிய மற்றொருவன் பார்த்து, 'இன்னும் உண்டிலையோ?' என்றால், 'உண்டேன் உண்டேன்' என்று அவன் சொல்லுவதும், உண்கிறவன் அப்படிச்சொல்வதும் வழக்கமாதலால், எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலமாயின. இவை விரைவு.

நீ அவனுடனே பகைத்தாற் செத்தாய், சாகிறாய்; இந்தக் காட்டிற் போனால் துணியிழந்தாய், இழக்கிறாய் என முறையே எதிர்காலம் இறந்தகாலமும் நிகழ்காலமுமாயிற்று. சாதலும் துணி இழத்தலும் ஒருவேளை தப்பினாலும் தப்பும்; ஆதலால், இது பெரும்பான்மை கருதிய மிகுதியென்று சொல்லப்படும்.

அறஞ்செய்தாற் சுவர்க்கம் புகுந்தான், புகுகிறான்; எறும்பு முட்டைகொண்டு திட்டை எறினால் மழை பெய்தது, பெய்கிறது. இவற்றில் தெளிவினால் எதிர்காலம் இறந்தகாலமும் நிகழ்காலமுமாயிற்று.

யாம் பண்டு விளையாடுவது இச்சோலை, விளையாடுகிறது இச்சோலை. இங்கே இயல்பினால் இறந்தகாலம் எதிர்காலமும் நிகழ்காலமுமாயிற்று.

## வினா.

**200.** அறிவு, அறியாமை, ஐயம், கொளல், கொடை, ஏவல் என வினா அறுவகைப்படும்.

உ–ம். ஆசிரியன் மாணாக்கனை, 'இப்பாட்டுக்குப் பொருளென்ன?' எனக்கேட்பது—அறிவினா.

மாணாக்கன் ஆசிரியனை, 'இப்பாட்டுக்குப் பொருளென்ன?' எனக் கேட்பது--அறியாவினா.

'குற்றியோ மகனோ?' எனக்கேட்பது—ஐயவினா.

'பயறுண்டோ செட்டியாரே?' எனக்கேட்பது--கொளல்வினா.

'மகனே உனக்கு ஆடையில்லையோ?' எனக்கேட்பது--கொடைவினா.

'சாத்தா! உண்டிலையோ?' எனக்கேட்பது—ஏவல்வினா.

## விடை :

**201.** சுட்டு, மறை, நேர், ஏவல், வினாதல், உற்றதுரைத்தல், உறுவதுகூறல், இனமொழி என விடை எட்டுவகைப்படும்.

உ—ம். 'தில்லைக்குவழி யாது?' எனின் 'இது' என்பது—சுட்டு விடை.

சாத்தா! இது செய்வாயா? என்றவனுக்கு, 'செய்யேன்' என்பது—மறைவிடை.

'செய்வேன்' என்பது—நேர்விடை.

'நீ செய்' என்பது—ஏவல்விடை.

'செய்வேனோ?' என்பது—வினாதல்விடை.

'தலை நொந்தது,' 'நோகிறது' என்பன—உற்றதுகூறல்விடை.

'தலைநோகும்' என்பது—உறுவதுகூறல்விடை.

'மற்றொன்று செய்வேன்' என்பது—இனவிடை.

## மரபு.

**202.** எந்தப்பொருளை எந்தச்சொல்லாற் பெரியோர்கள் சொன்னார்களோ அப்படியே நாமும் சொல்லுதல் மரபு ஆகும்.

உ—ம். பசுவின்கன்று; வாழைக்கன்று; குதிரைக்குட்டி; பாம்புக்குட்டி; அணிற்பிள்ளை; தென்னம்பிள்ளை; கீரிப்பிள்ளை; குருவிக்குஞ்சு என்பன மரபாம்.

பசுவின்குட்டி; குதிரைக்கன்று; அணிற்குட்டி; கீரிக்கன்று என்பன குற்றமாம்.

**203.** விரைவு, சினம், உவகை, அச்சம், அவலம், மிகுதி இப்பொருள்களைப்பற்றிச் சொற்கள் இரண்டும் மூன்றும் அடுக்கிவரும். இஃது அடுக்குத்தொடராம்.

| | | |
|---|---|---|
| உ—ம். | போ போ | — விரைவு. |
| | எறி எறி | — சினம். |
| | வருக வருக | — உவகை. |
| | பாம்பு பாம்பு பாம்பு | — அச்சம். |
| | வாழேன் வாழேன் | — அவலம். |
| | வந்து வந்து போனான் | — மிகுதி. |

குறிப்பு.—உவகை = சந்தோஷம்; அவலம் = துன்பம்.

**204.** இரட்டைக்கிளவியாவது பிரிந்து நின்றால் பொருள்படாமல் சேர்ந்து நின்றே பொருள்படும் இரட்டைச் சொற்களாம்.

உ—ம். சலசலவென மழைபெய்தது.
கலகலவென்று நகைத்தான்.

**205.** இவ்வளவென்று அறிந்த பொருளையும் எக்காலத்தும் எவ்விடத்திலும் இல்லாத பொருளையும், வினையோடு கூட்டிச் சொல்லும்போது முற்றும்மை வேண்டும்.

உ—ம். தமிழ்நாட்டு மூவரசரும் வந்தார் என்றும், முயற்கோடு எங்கும் இல்லை என்றும் வரும்.

**206.** செயப்படுபொருளை வினைமுதல்போல வைத்து அதன்மேல் வினைமுதல் வினையைச் சொல்லுதலே வழக்கத்திற் பெரும்பான்மை. இதுவே தமிழ்மரபு.

உ—ம். இம்மாடு யான் கொண்டது.
(இம்மாடு என்னுற் கொள்ளப்பட்டது.)
இச்சோறு நான் கொடுத்தது.
(இச்சோறு என்னுற் கொடுக்கப்பட்டது.)

இவற்றிலுள்ள யான் என்பனவெல்லாம் மூன்ரும் வேற்றுமைக் கருத்தாக்களாம்.

## பயிற்சி.

1. தொகாநிலைத்தொடர் எத்தனை? எப்படி?

2. திணை பால் ஐயங்களில் வினவும் விடையும் எங்ஙனம் நிகழும்?

3. வழுவமைதி என்ருல் என்ன?

4. திணைவழுவமைதி, பால்வழுவமைதி, இடவழுவமைதி, காலவழுவமைதி—இவைகளுக்கு இரண்டிரண்டு உதாரணங் கூறுக.

5. வினு எத்தனை வகைப்படும்? ஒவ்வொன்றுக்கும் உதாரணங் கூறுக.

6. விடைகளில், மறை, நேர், ஏவல், உற்றது உரைத்தல், இனமொழி—இவைகளுக்கு ஒவ்வோர் உதாரணங் கூறுக.

7. மரபு வழுவாமைக்கு நான்கு உதாரணங் கூறுக.

8. சொற்கள் என்னகாரணத்தால் அடுக்கிவரும்?

9. எதெதற்கு முற்றும்மை கொடுத்துக் கூறவேண்டும்? உதாரணங் கூறுக.

10. செயப்படுபொருளை வினைமுதல்போலவைத்துக் கூறியதற்கு நான்கு உதாரணங் கூறுக.

## III. சொற்றொடரதிகாரம்.

**1.** சொற்றொடராவது பெயர்முதலியசொற்கள் ஒழுங்குபடத் தொடர்ந்து நிற்பது. இது தொடர்மொழி யென்றும் பெயர்பெறும்.

**2.** சொற்றொடர், எச்சச்சொற்றொடர் என்றும் முற்றுச்சொற்றொடர் என்றும் இருவகைப்படும்.

**3.** எச்சச்சொற்றொடராவது பொருள் முடிவுபெறாது நிற்கும் சொற்றொடராம்.

உ–ம். வந்த மனிதன். இராமனும் கண்ணனும் கடைக்குச் சென்று.

குறிப்பு.—இவைகளில் சொற்கள் தொடர்ந்து நின்றாலும் பொருள் முடிவுபெறாமை காண்க.

**4.** முற்றுச்சொற்றொடராவது எழுவாயும் பயனிலையும் செயப்படுபொருள் முதலியவைகளோடு கூடியேனும் கூடாதேனும் பொருள் முடிவுபெற்று நிற்பதாம். இது வாக்கியம் என்றும் பெயர்பெறும்.

உ–ம். பொன்னன் மரத்தை வெட்டினான். இது எழுவாயும் பயனிலையுஞ் செயப்படுபொருளோடு கூடியது.

பொன்னன் வந்தான். இது எழுவாயும் பயனிலையுஞ் செயப்படுபொருளோடு கூடாதது.

**5.** எழுவாயாவது வாக்கியத்தின் முதற்பொருளாம். எழுவாய், கர்த்தா, செய்பவன், வினைமுதல் என்பன ஒருபொருட் சொற்கள்.

உ–ம். 'பொன்னன் வந்தான்' என்பதில் பொன்னன் என்பது வாக்கியத்தின் முதற்பொருளாகிய எழுவாயாம்.

**6.** பயனிலையாவது வாக்கியத்தின் முதற்பொருளின் செயலைக் காண்பிப்பது.

குறிப்பு.—மேல்வாக்கியத்தில் வந்தான் என்பது வாக்கியத்தின் முதற்பொருளாகிய பொன்னனது செயலாகிய வருதலைக் காட்டிற்று.

**7.** செயப்படுபொருளாவது வினைமுதலின் தொழிலின் பயனை அடைவது. இதனைச் செய்பொருள் என்றுங் கூறுவது உண்டு.

உ–ம். சாத்தன் புலியைக் கொன்றான். இவ்வாக்கியத்தில் சாத்தனாகிய வினைமுதலினது தொழிலாகிய கொல்லுதலின் பயனையுறுவது புலியாதலின், புலி செயப்படுபொருளாயிற்று.

**8.** வாக்கியத்தில் எழுவாய் மறைந்து வருவதும் உண்டு. இதற்குத் தோன்றா எழுவாய் என்று பெயர்.

உ–ம். வருகிறான்: இதில், அவன் என்னும் எழுவாய் மறைந்து வந்தமை காண்க.

**9.** எழுவாயேயன்றிப் பயனிலை மறைந்து வருவதும் உண்டு.

உ–ம். இவர்களுள் நல்லவன் எவன்? இதில், இருக்கிறான் என்னும் பயனிலை மறைந்துவந்தமை காண்க.

**10.** எழுவாய் ஒன்றும் பலவும் ஒரே பயனிலையையும் பல பயனிலைகளையும் கொள்ளும்: பல பயனிலைகளாகிய வினைகளில் கடைசிவினை மாத்திரம் முற்றுவினையாம்.

உ–ம். 'இவனும் அவனும் தோட்டத்தில் இருந்தார்கள்' என்பதில் இரண்டு எழுவாயும் ஒரே பயனிலைகொண்டன.

'அரசன் மந்திரியை அழைத்துக் காரியத்தை விசாரித்து உத்தரவு சொன்னான்' என்பதில் ஒரே எழுவாய் மூன்று பயனிலைகளைக்கொண்டது.

**11.** ஒரு வாக்கியத்தில் பல செயப்படுபொருள்கள் வருதலும் உண்டு.

உ–ம். இராமன் மனிதர்களையும் தேவர்களையும் ரிஷிகளையும் மகிழ்வித்தான்.

**12.** எழுவாய் பயனிலை செயப்படுபொருள்கள் தனித்துவருதலின்றி அடையடுத்து வருதலும் உண்டு.

குறிப்பு.—அடை = அடுத்துவருவது. இது அடைமொழியென்றும் சொல்லப்படும். அடைமொழியினால் அடுக்கப்படுவது அடைகொளி எனப்படும். அடைமொழியை விசேஷணமென்றும் அடைகொளியை விசேஷ்யமென்றும் வடநூலார் கூறுவர்.

உ-ம். நல்ல பையன் பொய்சொல்லான். மழை மிகுதியாகப் பெய்தது. நான் ஒரு சிறந்த பசுவை வாங்கினேன். வந்த வடகாசி மன்னன் விலையுயர்ந்த பொருள்களை வறிய யாசகர்க்கு மனமுவந்து மிக வழங்கினான்.

**13.** பயனிலை எழுவாயோடு திணை, பால், இடம் ஆகிய இவைகளில் மாறுபடாமல் இசைந்து நிற்கும்.

உ-ம். அவன் — வந்தான். நான் — வந்தேன்.
அவள் — வந்தாள். நாம் — வந்தோம்.
அவர் — வந்தார். நீ — வந்தாய்.
அது — வந்தது. நீர் — வந்தீர்.
அவை — வந்தன.

**14.** சொல்லப்பட்ட இலக்கணங்களை ஏதுவாகக் கொண்டு சொல்லப்படாதவற்றின் இலக்கணங்களையும் ஆராய்ந்து அறிந்துகொள்க.

### பயிற்சி.

1. சொற்றொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. சொற்றொடருக்கு வேறு பெயரென்ன?
3. வாக்கியமாவது யாது?
4. வாக்கியத்திற்கு முக்கியமான உறுப்புக்கள் யாவை?
5. செயப்படுபொருளாவது யாது?
6. தோன்றா எழுவாய் என்றால் என்ன? அதற்கு உதாரணங் கூறுக.
7. ஒரு வாக்கியத்தில் பல எழுவாய் வந்ததற்கும் பல செயப்படுபொருள் வந்ததற்கும் தனித்தனியே ஒவ்வோர் உதாரணங் கூறுக.
8. எழுவாயோடு பயனிலை எதில் எதில் ஒத்திருக்கும்?

முற்றிற்று.

# அனுபந்தம்.

## 1. பகுபத முடிபு.

### பெயர்ப் பகுபதங்கள்.

பொன்னன் என்னும் பொருட்பெயர்ப் பகுபதம், பொன் என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால்விகுதியும் பெற்று, பகுதியீற்று னகரமெய் இரட்டித்து, இரட்டித்த னகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி முடிந்தது.

பெரியன் என்னும் குணப்பெயர்ப் பகுபதம், பெருமை என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்று, பகுதியீற்று மை விகுதி கெட்டு, இடை உகரம் இகரமாகத் திரிந்து, யகர வுடம்படு மெய்தோன்றி அம்மெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி முடிந்தது.

வருதல் என்னும் தொழிற்பெயர்ப் பகுபதம், வா என்னும் பகுதியும் தல் என்னும் தொழிற்பெயர் விகுதியும் பெற்று, பகுதி முதல் குறுகி ரகர வுகரம் விரிந்து முடிந்தது.

### வினைமுற்றுப் பகுபதங்கள்.

உண்டான் என்னும் இறந்தகாலத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம், உண் என்னும் பகுதியும் ஆன் என்னும் ஆண்பால் விகுதியும் அவைகளுக்கு இடையே இறந்தகாலங்காட்டும் டகர இடைநிலையும் பெற்று, இடைநிலைட் டகர மெய்யின்மேல் விகுதி ஆகார உயிரேறி முடிந்தது.

வருகின்றனன் என்னும் நிகழ்காலத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம், வா என்னும் பகுதியும் அன் என்னும் ஆண்பால் விகுதியும் அவைகளுக்கிடையே கின்று என்னும் நிகழ்காலவிடைநிலையும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே அன் என்னும் சாரியையும் பெற்று, பகுதிமுதல்குறுகி, ரகர வுகரம் விரிந்து, இடைநிலையீற்று உகரங்கெட்டு, உகரங்கெடநின்ற றகரவொற்றின்மேற் சாரியை அகரவுயிரேறி, சாரியையீற்று னகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி முடிந்தது.

நடப்பித்தான் என்னும் பிறவினை வினைமுற்றுப்பகுபதம், நட என்னும் பகுதியும், பி என்னும் பிறவினைவிகுதியும் பெற்று, விகுதிப் பகரம் மிகுந்து, அனைத்தும் ஒரு பகுதியாய்நின்று, ஆன் என்னும் ஆண்பால் விகுதியும் பகுதிக்கும் விகுதிக்கும் இடையே இறந்தகாலங்

காட்டும் தகரவிடைநிலையும் பெற்று, இடைநிலைத் தகரம் மிகுந்து, இடைநிலைத் தகரமெய்யின்மேல் விகுதி ஆகாரவுயிரேறி முடிந்தது.

அடிக்கப்பட்டான் என்னுஞ் செயப்பாட்டு வினைமுற்றுப் பகுபதம், அடி என்னும் பகுதியும் படு என்னும் செயப்பாட்டுவினை விகுதியும் அவைகளுக்கு இடையே குச்சாரியையும் அகரச்சாரியையும் பெற்று, சாரியைக் ககரம் மிகுந்து, சாரியையீற்று உகரங்கெட்டு, உகரங்கெடநின்ற க்கரமெய்யின்மேலே சாரியை அகரவுயிரேறி, விகுதிப் பகரம் மிகுந்து, அடிக்கப்படு என அனைத்தும் ஒரு பகுதியாய் நின்று, ஆன் என்னும் ஆண்பால் விகுதிபெற்று, படு என்பதனுடைய உகரமூர்ந்த டகரமெய் யிரட்டி, உகர வுயிர்கெட்டு, உகரங்கெட்ட டகரமெய்யின்மேல் விகுதி ஆகாரவுயிரேறி முடிந்தது.

நடவான் என்னும் எதிர்மறைத் தெரிநிலைவினைமுற்றுப்பகுபதம், நட என்னும் பகுதியும் ஆன் என்னும் விகுதியும் அவைகளுக்கு இடையே ஆ என்னும் எதிர்மறை விகுதியும்பெற்று, அது உயிர் முதல் விகுதிமுன் கெட்டு, வகர வுடம்படுமெய்தோன்றி, அந்த மெய்யின்மேல் விகுதிமுதல் உயிர் ஏறி முடிந்தது.

## பெயரெச்சப் பகுபதம்.

அடித்த என்னும் இறந்தகாலப் பெயரெச்சப் பகுபதம், அடி என்னும் பகுதியும், அ என்னும் பெயரெச்சவிகுதியும் அவைகளுக்கு இடையே இறந்தகாலங்காட்டுந் தகரவிடைநிலையும் பெற்று, இடைநிலைத் தகரம் மிகுந்து, இடைநிலைத் தகரமெய்யின்மேல் விகுதி அகாரவுயிரேறி முடிந்தது.

## வினையெச்சப் பகுபதங்கள்.

நின்று என்னும் இறந்தகால வினையெச்சப் பகுபதம், நில் என்னும் பகுதியும் உ என்னும் வினையெச்சவிகுதியும் அவைகளுக்கு இடையே இறந்தகாலங்காட்டும் றகரவிடைநிலையும் பெற்று, பகுதியீற்று லகரமெய் றகரமெய்யாகத் திரிந்து, சந்தியால் திரிந்த றகரமெய் இனமாகிய னகரமெய்யாக மெலிந்து, இடைநிலை றகரமெய்யின்மேல் விகுதி உகரவுயிரேறி முடிந்தது.

நிற்க என்னும் முக்காலத்திற்குமுரிய வினையெச்சப்பகுபதம், நில் என்னும் பகுதியும் அ என்னும் வினையெச்சவிகுதியும் அவைகளுக்கு இடையே குச்சாரியையும் பெற்று, பகுதியீற்று லகரமெய் றகரமெய்யாகத் திரிந்து, சாரியையீற்று உகரங்கெட்டு, உகரங்கெடநின்ற ககரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி முடிந்தது.

## 2. சொல்லிலக்கணங் கூறுதல்.

அரசன் போருக்குச் சென்று வெற்றிபெற்று மீண்டான்.

அரசன்—பெயர்ச்சொல், உயர்திணை, ஆண்பால், படர்க்கை இடம், முதல்வேற்றுமை, மீண்டான் என்னும் பயனிலையைக் கொண்டு முடிந்தது.

போருக்கு—முதனிலைதிரிந்த தொழிற்பெயர், அஃறிணை, ஒன்றன்பால், படர்க்கை, நான்காம்வேற்றுமை, சென்று என்னும் வினையைக்கொண்டு முடிந்தது.

சென்று—செய்தென்னும் வாய்பாட்டு இறந்தகால உடன்பாட்டுத் தெரிநிலைவினையெச்சம், பெற்று என்னும் வினையெச்சத்தைக் கொண்டு முடிந்தது.

வெற்றி — தொழிற்பெயர், இரண்டாம் வேற்றுமைத்தொகை, பெற்று என்னும் வினையைக்கொண்டு முடிந்தது.

பெற்று—செய்தென்னும் வாய்பாட்டு இறந்தகால உடன்பாட்டுத்தெரிநிலைவினையெச்சம், மீண்டான் என்னும் வினையைக்கொண்டு முடிந்தது.

மீண்டான்-உயர்திணை, ஆண்பால், படர்க்கை, இறந்தகால உடன்பாட்டுத்தெரிநிலைவினைமுற்று, அரசன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாக நின்றது.

## 3. சொற்றொடரிலக்கணம்.

வில் ஏந்திய இராமன் அரக்கர்களை வென்று மனிதர்களையும் தேவர்களையும் மகிழ்வித்தான்.

| | |
|---|---|
| வில் ஏந்திய | —வேற்றுமைச்சந்தி, இரண்டாம் வேற்றுமைத்தொகை. |
| ஏந்திய இராமன் | —அல்வழிச்சந்தி, பெயரெச்சத்தொடர். |
| இராமன் அரக்கர்களை | —அல்வழிச்சந்தி, எழுவாய்த்தொடர். |
| அரக்கர்களை வென்று | —வேற்றுமைச்சந்தி, இரண்டாம் வேற்றுமைவிரி. |
| வென்று மனிதர்களை | —அல்வழிச்சந்தி, வினையெச்சத்தொடர். |
| மனிதர்களை உம் | —அல்வழிச்சந்தி, இடைச்சொற்றொடர். |
| உம் தேவர்களை | —அல்வழிச்சந்தி; இடைச்சொற்றொடர். |
| தேவர்களை உம் | —அல்வழிச்சந்தி, இடைச்சொற்றொடர். |
| உம் மகிழ்வித்தான் | —அல்வழிச்சந்தி, இடைச்சொற்றொடர். |

# இலக்கண பரிபாஷை: தமிழும் இங்கிலீஷும்.

அஃறிணை – Inferior class, whether animate or inanimate.
அடைமொழி–Epithet.
அல்வழிச்சந்தி – Uninflected combination.
அளபெடை–Lengthening of sound.
அன்மொழித்தொகை – Ellipsis of other words.
ஆகுபெயர் – Synecdoche and metonymy.
ஆண்பால்–Masculine gender.
ஆய்தம்–Guttural.
இடக்கரடக்கல்–Euphemism.
இடம்–Person.
இடுகுறிப்பெயர் – Primary noun.
இடைச்சொல் – Conjunction; particle.
இடைநிலை–Middle particle.
இடையெழுத்து–Medial Consonant (liquids).
இயற்சொல்–A word in common use.
இரட்டித்தல்–Reduplication.
இறந்தகாலம்–Past tense.
ஈற்றயலெழுத்து – Penultimate letter.
ஈற்றுநிலை, இறுதிநிலை = (விகுதி)–Termination.
ஈற்று எழுத்து–Final letter.
உடன்பாடு–Affirmation.
உடனிகழ்ச்சி – Happening simultaneously; implying co-existence; concomitancy.
உம்மைத்தொகை – Ellipsis of the conjunction உம்
உயர்திணை – Superior class: Rational class of nouns.
உயிர்மெய்யெழுத்து – Vowel-consonant.
உயிரெழுத்து–Vowel.
உரிச்சொல் – Qualifying word (Adjective or Adverb).
உருபுமயக்கம்–Use of one casal sign for another.
உவமை உருபு – A particle of comparison.
உவமைத்தொகை–Omission of the sign of comparison.
எச்சம் – Participle or infinitive.
எண்–Number.
எண்ணுப்பெயர்–Numeral.
எதிர்காலம்–Future tense.
எதிர்கால வினையெச்சம் – Subjunctive mood.
எதிர்மறை–Negative verb.
எழுத்ததிகாரம்–Orthography.
எழுத்துப்புணரியல் – Combination of letters.
எழுவாய்–Subject.

ஏவல்–Imperative.
ஒருபொருள் குறித்த பல சொற்கள்–Synonyms.
ஒருமை–Singular.
ஒன்றன் கூட்டம்–A collection of things of the same kind.
ஒன்றன்பால்–Neuter singular.
காரணப்பெயர் – Derivative noun.
காலம்–Tense.
குற்றியலிகரம்–Short இ.
குற்றியலுகரம்–Short உ.
குற்றெழுத்து–Short vowel.
குறிப்புவினை – Symbolic verb.
சாரியை–Euphemic particle.
சுட்டெழுத்து – Demonstrative vowel.
செய்யுள்விகாரம் – Poetical change.
செய்வினை–Active verb.
செயப்படுபொருள்–Object.
செயப்படுபொருள் குன்றுவினை–Transitive verb.
செயப்படுபொருள் குன்றியவினை-Intransitive verb.
செயப்பாட்டுவினை – Passive verb.
சொல்லதிகாரம்–Etymology.
சொல்லிலக்கணங்கூறல் – Parsing.
சொற்களின் வகை – Parts of speech.
சொற்றொடரதிகாரம்–Syntax.
தன்மை–First person.
தற்கிழமை–The thing closely connected with the possessor.
தன்வினை – Verb indicating direct action.
திசைச்சொல் – Provincial word.
திணை–Class.
துணைவினை–Auxiliary verb.
தொகாநிலை – Unelliptical phrase.
தொகைநிலை–Elliptical phrase.
தொடர்மொழி – Compound word.
தொழிற்பெயர்–Verbal noun.
நிகழ்காலம்–Present tense.
நெட்டெழுத்து–Long vowel.
பகாப்பதம்–Indivisible word.
பகுதி (முதனிலை)-Root.
பகுபதம்-Divisible word.
படர்க்கை – Third person.
பண்புத்தொகை – Omission of the adjective sign ஆகிய.
பண்புப்பெயர்–Abstract noun.
பயனிலை – Predicate.
பலபொருள் குறித்த ஒரு சொல்–Homonym.
பலர்பால் – Plural of nouns of the higher class.
பலவின்பால்–Neuter plural.
பலவினீட்டம்–A collection of many things.
பன்மை–Plural.
பால்–Gender (and number).
பிறவினை–Causative verb.
பிறிதின்கிழமை – The relation between the possessor and the possessed when the latter is not a part of the former.
புணர்ச்சி – Combination.

பெண்பால்–Feminine gender.
பெயர்ச்சொல்–Noun.
பெயருரிச்சொல்–Adjective.
பெயரெச்சம்–Adjective participle.
பொதுப்பால்–Common gender.
போலி–Interchange of letter.
மங்கலம்–Euphemism.
மரபு–Idiom.
மாத்திரை–Quantity.
முக்காலத்துக்கும் பொதுவினையெச்சம்–Infinitive mood.
முன்னிலை–Second person.
மெய்யெழுத்து–Consonant.
மெல்லெழுத்து – Soft consonant (nasal.)
மொழியிறுதியெழுத்து – Final letter.
வல்லெழுத்து–Hard consonant (surd).
வழாநிலை–Concord of the different parts of a sentence.
வழுவமைதி-Allowed deviation from grammatical rule.
விகாரம்–Change of letters.
விகுதி–Termination.
விசேஷணம்–A qualifying term.
வியங்கோள்–Optative.
விளி–The vocative case.
வினாவெழுத்து – Interrogative letter.
வினைச்சொல்–Verb.
வினைத்தொகை–Aorist form of the relative participle.
வினைமுற்று–Finite verb.
வினையாலணையும்பெயர் – Participial noun.
வினையிடைநிலை – Particle indicating tense.
வினையுரிச்சொல்–Adverb.
வினையெச்சம் – Adverbial participle.
வேற்றுமை–Case.
முதல் வேற்றுமை-Nominative case.
இரண்டாம் ,, – Accusative case.
மூன்றாம் ,, – Instrumental case.
நான்காம் ,, – Dative case.
ஐந்தாம் ,, – Ablative case.
ஆறாம் ,, – Genitive case.
ஏழாம் ,, – Locative case.
எட்டாம் ,, – Vocative case.
வேற்றுமைச்சந்தி – Inflected combination.
வேற்றுமைத்தொகை–Omission of casal sign.
வேற்றுமைப் புணர்ச்சி – Casal combination.
வேற்றுமையுருபு–Case ending.

8A552

DIOCESAN PRESS, MADRAS—1931 B 2354